


16-8-87
&
1-9-87

# தமிழரசு

ரூ. 2





சுதந்திர தினத்தன்று (15-8-87) சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

# தியாகத்தால் வந்த சுதந்திரம்

**— பேரறிஞர் அண்ணா**

இந்தியத் துணைக் கண்டத்தில் 200 ஆண்டுகளுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடி, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு அரச வட்டாரங்களிலிருந்தும் கீழே இறங்குவதுடன், இரு இடங்களிலும் சுதந்திரக் கொடிகள் பறக்கவிடப்படுகின்றன.

அந்நிய ஆட்சி ஒழிந்து புதுச் சுதந்திர ஆட்சிகள் ஆரம்பமாகும் இந்த நாளில், அந்நியர் ஆட்சியின் விளைவுகளாக இருந்துவரும் தொல்லைகளையும், அல்லல்களையும் நீக்கி, மக்களுக்கு நலன் ஏற்படும்படியான ஆட்சி நடத்தும்படி கேட்கும் உரிமையும், பலமும், வசதியும் மக்களுக்குத் தானாகவே பிறக்கின்றன.


நாட்டு விடுதலைக்காகச் சிறையில் வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள், மண்டை பிளக்கப்பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை போன்ற வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீர வணக்கத்துக்கு உரியன. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள்.

பெரியார் காங்கிரசில் தலைமை வகித்து பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து கஷ்ட நஷ்டமடைந்திருக்கிறார். ஆகவே, விடுதலை விழாவைக் கொண்டாடப் பாத்யதை கொண்டவர்களிலே அவர் மிக முக்கியமானவர்.

**அநியாயம் அகன்றது**

நியாயத்தை மட்டுமே கவனித்து எந்த நாட்டிலும் ஆட்சியாளர்கள் நடப்பதில்லை. நியாயத்தை நிலைநாட்ட, பலம் துணையாக இருக்கிறது என்றால் மட்டுமே காரியம் பலிக்கும்.

ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆளுவது அக்ரமம் - எந்த நாடும் சுயாட்சி கேட்பது நியாயம். இந்த நியாயத்தை எடுத்துக் கூறிய உடனே காங்கிரசை மதித்து சுயராஜ்யம் கொடுக்க, எந்த கிரிப்சும்,



மவுண்ட்பேட்டனும் முன்வரவில்லை. ஏளனம் பேசும் சர்ச்சில்களாகத்தான் சகல பிரிட்டிஷாரும் இருந்தனர். நியாயத்தின் பக்கபலமாகத் தியாகம், கிளர்ச்சி, பணபலம், பத்திரிகை பலம், இவ்வளவுக்கும் மேலாக உலகச் சூழ்நிலையில் மாறுதல், பிரிட்டிஷ் பலச் சரிவு என்பவை ஏற்பட்டதால் தான் மந்திரிகள் பறந்து வந்தனர், நியாயம் வழங்க!

10-8-1947


இந்திய சுதந்திரத்தின் நாற்பதாண்டு நிறைவுச் சிறப்பிதழ்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018
பிரபவ-ஆடி 31 - ஆவணி 16

மலர் : 18 இதழ் : 4 & 5

16-8-1987 & 1-9-1987

# வாழ்க சுதந்திரம்



நான் வணங்கும் தெய்வங்களாகிய
தாய்மார்களே!
என்னை வழிநடத்திச் செல்லும்
பெரியோர்களே!
என் ரத்தத்தின் ரத்தமான உடன்
பிறப்புக்களே!

இந்தியச் சுதந்திரத் திருநாளையொட்டி உங்கள அனைவருக்கும் என் நல்வாழ்த்துக் களையும் வணக்கங்களையும் தெரிவ்த்துக் கொள்கிறேன்.

விடுதலை பெற்ற இந்தியா இன்று தனது நாற்பதாண்டு நிறைவை விழாவாகக் கொண் டாடுகிறது.

இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங் கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த லட்சக்கணக்கான தியாகிகளுக்கு இந்நாளில் நமது அஞ்சலியைக் காணிக்கை ஆக்குவது நமது நீங்காக் கடமை ஆகும்.

சுதந்திர இந்தியா இன்று உலகின் மிகப் பெரிய சக்தியாக எழுந்து வருகிறது. சமா தான சகவாழ்வு என்கிற மிகப்பெரிய குறிக் கோளுக்கு நமது நாடு குரல் கொடுத்து வரு கிறது.

கடந்த நாற்பதாண்டுகளில் விவசாயம், தொழில் வளர்ச்சி, கல்வி, பாசனம், மின் உற்பத்தி, போக்குவரத்து போன்ற எல்லாத் துறைகளிலும் பெருத்த முன்னேற்றம் கண் டுள்ளோம். என்றாலும் வறுமை, அறியாமை, சமூகக் கொடுமைகள், வேலையின்மை போன்ற தீமைகளுக்கு எதிராக நாம் தொடர்ந்து போராடி வருகிறோம்.

மைய, மாநில அரசுகள் நிறைவேற்றும் வளர்ச்சித் திட்டங்கள் சரிவரச் செயல்படச் செய்வதும், அவற்றின் பயன் மக்களைச் சென் றடைவதை உறுதி செய்வதும் நமது ஆக்க வழிப்பட்ட கடமைகள் ஆகும்.

ஒற்றுமையும், முயற்சியும், உழைப்பும் இல்லாமல் முன்னேற்றம் இல்லை என்பதை முன்னேறிய நாடுகளின் வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

இந்நிலையில் நமது ஒன்றுபட்ட சக்தி யின் வலிமையைக் குலைக்கும் வகையில் மதவெறியும், சாதிவெறியும், வன்முறைவெறி யும் தலைதூக்கி வருகின்றன. இந்தத் தீய சக்திகளை அடியோடு ஒழிக்க நாம் தொடர்ந்து போராட வேண்டும். இந்தப் போராட்டத் தின் வெற்றியில்தான் நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த ஆண்டு விடுதலை விழாவை ஓரளவு நிம்மதி யுடன் கொண்டாடும் நிலை உருவாகியுள்ளது எனலாம்.

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் உள்ளத்தை வாட்டி வதைத்துக் கொண்டி ருந்த இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இது நமக்கு மகிழ்ச்சியையும் நிம்மதியையும் தருகிறது.

இந்நிலை காண, அண்ணாவின் பெயரால் அமைந்த தமிழக அரசு சிறிதும் தொய்வின்றி கடந்த சில ஆண்டுகளாகப் பெரு முயற்சி செய்து வந்ததைத் தமிழகம் அறியும்.

நமது உள்ளத் தவிப்பை உணர்ந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், தீவிர முயற்சி எடுத்து அயராது பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு கண்டுள்ளார். மாபெரும் தேச மான இந்தியாவின் தலைவராகவும், நடுநிலை நாடுகளின் நாயகராகவும், உலக சமாதானக்

# வணங்குவோம் தியாகிகளை!

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்**

காவலராகவும் நின்று, பெரும் பொறுப்பை ஏற்று இந்திய-இலங்கை உடன்பாடு கண்டதன் வாயிலாக நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மிகப்பெரிய சரித்திரச் சாதனை நிகழ்த்தியுள்ளார். இந்த உடன்பாட்டின் காரணமாக இந்துமாக்கடல் பகுதியில் அமைதிக்கு உத்தரவாதம் ஏற்பட்டுள்ளது. இந்த மாபெரும் சாதனைக்காக நமது பிரதமர் அவர்களை வரலாறு என்றென்றும் போற்றிப் புகழும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாகத் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் அமைதி ஏற்பட்டிருப்பதையும், அங்குள்ள மக்கள் சகஜ வாழ்க்கைக்குத் திரும்பி வருவதையும் கண்டு தமிழக மக்கள் பெரிதும் நிம்மதி அடைந்துள்ளனர்.

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களைச் சமஉரிமை படைத்தவர்களாக நடத்துவதுதான் இலங்கையின் வளமான எதிர்காலத்திற்கு உத்தரவாதமாக இருக்கும் என்பதை அங்குள்ள பெரும்பான்மையினர் உணரவேண்டும். மாபெரும் தேசமான இந்தியாவின் நல்லெண்ண முயற்சிக்கு வலிவு சேர்ப்பதே இலங்கையில் வாழ்கின்ற சிங்களவர்-தமிழர் ஆகிய அனைவரின் கடமை என்பதையும் இந்நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இலங்தைத் தமிழர் பிரச்சினையில் உடன்பாடு ஏற்பட்டதைப் போலவே நாட்டின் மிக உயர்ந்த குடியரசுத் தலைவர் பதவியில் நமது ஆர்.வி. அவர்கள் பெருத்த வெற்றிப் புகழுடன் வீற்றிருக்கும் வாய்ப்பு கிட்டியதால் தமிழக மக்கள் பெருமிதமடைந்துள்ளனர்.

இந்த உணர்வுகளோடு தமிழக மக்கள் கூடுதல் உற்சாகத்துடன் நாட்டுக்கான கடமைகளை ஆற்றிட முன்வரவேண்டும்.

வளர்ச்சித் திட்டங்களையும், சமூகநலத் திட்டங்களையும் வெற்றியுடன் நிறைவேற்றி சீரான வளர்ச்சிக்கு வழிகாட்டும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. சாதி மதப் பூசல்கள், வன்முறைகள், தலைகாட்டாத வகையில் அமைதிப் பூங்காவாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

தேசிய ஒருமைப்பாட்டு முயற்சிகளுக்கு வலிவு சேர்க்கிற பணிகளில் தமிழ்நாடு ஆர்வமுடன் ஒத்துழைப்பு நல்கி வருகிறது.

இதே நிலையைத் தொடர்ந்து கட்டிக் காத்திட உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் நாடுகிறேன்.

வன்முறை, வெறித்தனம், வதந்தி பரப்புதல், மக்களைப் பிளவுபடுத்தல் இவற்றையே நோக்கமாகக் கொண்டுள்ள சீர்குலைவுச் சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்போம் என்று இன்று நாமனைவரும் சபதம் ஏற்றிடுவோம்!

கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமைகளைப் பெற்றிடுவோம்!

அமைதியும், ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழிவகுப்போம்!

புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்.

நாடு இன்றிருக்கும் சிக்கலான சூழ்நிலையில் சிறுபான்மை மக்களின் நலனைக் காத்தும், ஏழை எளிய மக்களின் உள்ளக் கிடக்கைகளுக்கு உருவம் கொடுத்தும், பயங்கரவாதத்தை எதிர்த்தும், அந்நியச் சக்திகளின் தீய எண்ணங்களை முறியடித்தும், தனது அயரா உழைப்பாலும், சிறந்த ராஜதந்திரத்தாலும் இந்திய நாட்டைக் கட்டிக்காத்து வரும் நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு நன்றியும், வாழ்த்தும் தெரிவிப்போம்.

இத்திருநாளில் தேசிய ஒற்றுமை ஓங்கவும், இந்த நன்னாடு உலக அரங்கில் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் திறமையான தலைமையின் கீழ் தலைநிமிர்ந்து நிற்கவும், அவரது எல்லா முயற்சிகளுக்கும் நமது ஆதரவை உறுதிப்படுத்தி அவரது கரங்களைப் பலப்படுத்த சபதம் ஏற்போம்.

'உழைப்பவரே உயர்ந்தவர், உழைப்பே உயர்வு தரும்' எனும் மூலமந்திரத்தை மனதில் இருத்தி, 'உழைப்பால் நாட்டை உயர்த்திட வாரீர்' என அனைவரையும் அன்புக் கரம் கூப்பி அழைக்கின்றேன்.

வாழ்க சுதந்திரம்
வெல்க இந்தியா
அண்ணா நாமம் வாழ்க.

**(இந்திய விடுதலைத் திருநாளையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியூயார்க் நகரிலிருந்து விடுத்துள்ள சுதந்திர தினச்செய்தி)**



## தேசபக்தி கொண்டவர்!
## தீர்க்கதரிசனம் உள்ளவர்!
## மேதைத் தன்மை மிக்க மாமனிதர்
## தமிழக முதல்வர்!

— மாண்புமிகு
**பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி**

கடந்த 4 ஆண்டுகளாக இலங்கையில் நடந்த பல நிகழ்ச்சிகள் நமக்குக் கவலையை-துயரத்தை அளித்தன. குண்டு வீச்சினாலும் தரைப்படையின் தாக்குதலாலும் பல அப்பாவி மக்கள் உயிர் இழந்தார்கள்.


இன்றுதான் இலங்கைப் பிரச்சினைக்கும் வன்முறைக்கும் முடிவு வந்துவிட்டது. இந்தத் தீர்வு அமைதியான பேச்சுவார்த்தை மூலமும் நாம் தொடர்ந்து செய்த முயற்சியாலும் கிடைத்தது.

இந்தியக் குடியரசில் தமிழ்நாட்டிற்கு எந்த அளவு சுயாட்சி இருக்கிறதோ அதே அளவு சுயாட்சியை இலங்கையில் உள்ள தமிழ்மக்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறோம்.

காந்தி, நேரு, இந்திரா ஆகியோர் எந்த வழியைப் போதித்திருந்தார்களோ அந்த வழியில் சென்று இந்திய - இலங்கை உடன்பாட்டை நாம் கண்டிருக்கிறோம்.



# சமாதான வீரர் நமது பிரதமர்!



—மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்.

சரித்திரப் புகழ்பெற்ற உடன்பாட்டை உருவாக்கித் தந்துவிட்டு சமாதான வீரராக வந்திருக்கிறார் நமது பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள். அவர்களைப் பாராட்டி வரவேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கொழும்பு நகரில் அணிவகுப்பு மரியாதையை ஏற்கும்போது தாக்கப்பட்டு, நல்ல வேளையாக ஆபத்து இன்றித் திரும்பி உள்ளார். அவருக்கு நமது பரிவையும் அன்பையும் வாழ்த்துக்களையும் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைத் தமிழ் மக்கள் துயர் துடைக்கும் வகையில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு இன்று நல்ல பயன் கிடைத்துள்ளது. அவருடைய கனவை அவருடைய புதல்வர் ராஜீவ் காந்தி அவர்கள் நனவாக்கிக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் அச்சமின்றி அமைதியாக வாழும்பொருட்டு நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் அமைதிப் படை அனுப்பியுள்ளார். போராளிகள் நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் முயற்சிகளில் நம்பிக்கை வைத்து முழு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் எல்லா நலமும் பெற்று நீண்ட காலம் வாழ்ந்து நாட்டுக்கும் உலகுக்கும் தொண்டு' ஆற்றிட வேண்டும் என்று என் தாயை வணங்கி வாழ்த்துகிறேன்.

*[சென்னையில் 2.8.'87 அன்று நடைபெற்ற இந்திய-இலங்கை ஒப்பந்தப் பாராட்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து]*

---

ஒரு மாபெரும் மனிதரின் ஒத்துழைப்பு இல்லையென்றால் இந்த உடன்பாடு ஏற்பட்டிருக்காது என்பதை நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

அவரது மேதைத் தன்மையும், தீர்க்க தரிசனமும், அசைக்க முடியாத தூண்போன்ற ஆதரவும், அவர் காட்டிய அனுதாபமும், ஆழ்ந்த நல்லுணர்வும் இல்லையென்றால் இந்த உடன்பாடு நிறைவேறியிருக்க முடியாது.

குறுகிய வேற்றுமைகள் இன்றி, பொது நலனில் அக்கறைகொண்டு சிறந்த ராஜதந்திரியாகப் பாடுபட்டார்.

அவரது தேசபக்தியும் ஆதரவும்தான் இந்த உடன்பாடு பெற்றிட வழி வகுத்தது.

அந்த மாபெரும் மனிதர் யார் என்று நான் சொல்லத் தேவையில்லை. நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். உங்கள் முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பற்றித்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.


மருத்துவப் பரிசோதனைக்காக வெளிநாடு செல்லவிருக்கும் அவருக்கு நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் விரைவில் குணமடைந்து தாய்நாடு திரும்பி மறுபடியும் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

இலங்கையில் தமிழ் மக்கள் அமைதியாகவும், சமாதானமாகவும், சமத்துவமாகவும் வாழ முடிகிறது என்ற மனநிறைவோடு அவர் அமெரிக்காவுக்குச் செல்கிறார்.

அவர் விரைவில் தாயகம் திரும்பி, தொடர்ந்து பல ஆண்டுகள் நாட்டுக்கும் மக்களுக்கும் பணியாற்றி நாட்டை ஒளிமயமான நாடாக்கப் பாடுபடுவார் என்று நம்புகிறேன்.

*[சென்னையில் 2.8.'87 அன்று நடைபெற்ற இந்திய-இலங்கை ஒப்பந்தப் பாராட்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து]*

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி :



# வளர்ச்சிக்கு வழி வகுப்போம்!


மாண்புமிகு நிதியமைச்சர்

டாக்டர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன்


மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்
அவர்களே!
மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களே!
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
மாண்புமிகு நீதிபதிகளே!
மாண்புமிகு நாடாளுமன்ற-சட்டமன்ற
உறுப்பினர்களே, பெருமக்களே!
மேதகு பிறநாடுகளின் தூதுவர்களே!
தலைமைச் செயலாளர் அவர்களே!
அரசுத் துறைகளின் அலுவலர்களே!

பேரன்பிற்குரிய பெரியோர்களே!
தாய்மார்களே! நண்பர்களே!

ஈண்டு குழுமியுள்ள அனைவருக்கும், 40-வது விடுதலை விழாக்களையொட்டி என் உளமார்ந்த வணக்கத்தையும் உவகைமிகுந்த விடுதலை விழா வாழ்த்துக்களையும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.


இந்திய விடுதலையின் 40-வது ஆண்டு நிறைவு விழாவினையும், 41-வது விடுதலை நாள் விழாவினையும் ஒருசேரக் கொண்டாட நாம் அனைவரும் இந்த கோட்டைக் கொத்தளத்தில் குழுமியுள்ளோம். இந்திய விடுதலைக்காக அரும்பாடுபட்டு அறப்போராட்டங்கள் பலவற்றையும் கண்டு தம்முடைய உயிர், உடல் உடமைகளை ஈந்தோர் அனைவருக்கும் வீர அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

1947 ஆகஸ்டு 15-ஆம் நாள்! - ஆம்! அந்த நாள்தான் இந்தியாவின் அடிமைத்தளை உடைத்தெறியப்பட்ட நாள்! - அடிமை வாழ்வு அகற்றப்பட்ட நாள்! - இரும்புக்கூட்டின் கதவு திறக்கப்பட்டு, வீறு பெற்றெழுந்த சிங்க ஏறுகளெல்லாம் வெளிவந்து வெற்றி உலா வந்த நாள்! ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராதுபோல் வந்த மாபெரும் நாள்! புன்மை இருட்கணம் விரட்டப்பட்டு, பொழுது புலர்ந்துவிட்டதைப் புலப்படுத்திய நாள்! - நாம் இருக்கும் நாடு நம்முடையதாகும் என்பதை நமக்கு அறிவித்த நாள்! - இந்த நாடு நமக்கே சொந்தமாகும் என்பதை நானிலத்திற்குத் தெரிவித்த நாள்! மேதினியோர் அனைவரும் நம்மை மதிக்கத் தலைப்பட்ட நாள்! நாம் வாழ -வளர வளம் பெற - வலிவுபெற - வனப்புபெற - வசதியுற - வழிவகை காண வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த நாள்!

தாய்நாட்டின் தனிப்பெரும் மணிக்கொடி, ஓங்கி உயர்ந்த கொடிமரத்தில் உற்றார் ஊரார் மகிழ, உலகோர் போற்ற, பட்டொளி வீசிப் பறக்க விடப்பட்ட நாள்! இந்த நல்ல நாளில்தான் பாரதியார் பாடியதற்கிணங்க,

எல்லாரும்-ஓர்-குலம்! எல்லாரும் ஓர்
இனம்!
எல்லாரும் இந்திய மக்கள்!
எல்லாரும் ஓர் நிறை! எல்லாரும் ஓர்
நிலை!
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!-நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!-ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!

என்று எல்லாரும் பெருமையோடு முழங்கி உரிமை கொண்டாட முடிந்தது. விடுதலை பெற்று, எழுச்சியுற்று எழுந்த இந்தியா, இன்று உலகிலேயே பெயரும் புகழும் கொண்ட ஒரு பெரும் ஜனநாயக நாடாக இயங்கி வருகிறது. அண்டைய வெளிநாடுகளின் தாக்குதல்களையும், உள்நாட்டுச் சச்சரவுகளையும் சமாளித்துக் கொண்டு ஜனநாயக முறையையும், கோட்பாடுகளையும் காப்பாற்றுவதில் இந்தியா வீறு நடைபோடுவது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும். இந்தியா அணி சேரா நாடுகளுக்குத் தலைமை தாங்குவதும், உலக அமைதி காக்க அரும் பெரும் பங்குகொள்வதும், அணு ஆயுத உற்பத்திக்கு எதிர்ப்புக்குரல் எழுப்புவதும் இந்தியாவிற்குத் தனிப்பெரும் புகழைச் சேர்க்கும் திருப்பணிகளாகும். பெறற்கரிய முறையில் பெற்ற பெரு விடுதலையைப் பேணிக் காக்க வேண்டியது இந்தியர் ஒவ்வொருவருடைய



நீங்காப் பொறுப்பும் இன்றியமையாக் கடமையுமாகும்.

இந்தியாவிலுள்ள 78 கோடி மக்களும் உடலால் பலராய்க் காணப்பட்டாலும் இந்தியாவின் விடுதலையை, நிலப்பரப்பை, இறையாண்மையை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டுணர்வுகளை, சமத்துவப் பண்பாடுகளை, கண்ணியப் பாங்கை, கட்டுப்பாட்டுப் போக்கை, காப்பாற்றுவதில் ஒருள்ளம் படைத்தவர்களாகத் திகழ வேண்டிய கடப்பாடுடையவர்களாக இருக்கிறோம்.

பொதுவாக புதிய இந்தியாவைக் குறிப்பாகப் பொலிவும் வலிவும் வளமும் மிக்க புதிய தமிழகத்தை உருவாக்குவதில், நாம் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டு வரவேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

சென்ற நான்கு ஆண்டுக்காலமாக, நமது உள்ளங்களையெல்லாம பெரிதும் வாட்டி, வருத்தி, வதைத்துக்கொண்டிருந்த இலங்கைத் தமிழர்ப் பிரச்னை இந்தியா-இலங்கை உடன்பாட்டின் மூலம், ஒரு திட்டவட்டமான, தெளிவான, திட்பமான முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது நமக்கெல்லாம் மன நிறைவையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் அளிப்பதாகும். இந்திய இலங்கை உடன்பாடு, இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகிய இருவரின் இடைவிடாக் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இந்த உடன்பாடு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. பெருமைக்கும், புகழுக்கும் உரியது. வாழ்த்தி வரவேற்க வேண்டியது! இந்த உடன்பாட்டின் மூலம் இலங்கைத் தமிழர் இது வரையில் இடையறாது பட்டு வந்த இன்னல்களுக்கும், இழப்புக்களுக்கும், இடையூறுகளுக்கும் ஒரு முடிவு ஏற்பட வழி ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் அல்லலற்ற அமைதியான எதிர்கால நல்வாழ்வுக்கு அழுத்தமான அடிப்படை கோரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நலம் பயக்கும் வகையில் பல்லாண்டுக்காலமாகத் தீர்க்கப்படாமலிருந்த பிரச்னைகளுக்குத் தீர்வு ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு பாதுகாப்பும், வாழ்வுரிமையும், ஆட்சியுரிமையும் ஏற்படும் விதத்தில் வழிகாணப்பட்டிருக்கிறது. இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளின் நட்புறவு உண்மையாகவும், நிலையாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் தெற்கு எல்லைக் கடற்பகுதியின் பாதுகாப்புக்கு நல்ல உறுதிப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவின் அமைதிகாக்கும் பணி உலக நாடுகளால் பாராட்டப்பட்டு, போற்றப்பட்டு, வரவேற்கப்பட்டிருக்கிறது. இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தியா-இலங்கை உடன்பாட்டை உருவாக்க இலங்கை அதிபரோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி அதில் மாபெரும் வெற்றி கண்ட இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் நமது பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும், வாழ்த்துதலுக்கும் உரியவராவார்கள். தமிழக முதலவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒத்துழைப்பு இல்லையென்றால் இலங்கையில் கையெழுத்திட்ட உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டிருக்க முடியாது என்றும், அவரது அளப்பரிய மனிதப் பண்பும், தெள்ளத் தெளிவான கொள்கையும், ஆட்சித் திறனும், மிகக் கடுமையான நேரத்தில் காட்டப்பட்ட அசைக்க முடியாத குன்றனைய உதவியும், ஆழ்ந்த நல்லுணர்வும் இல்லையென்றால் அந்த உடன்படிக்கை உருவாகியிருக்க முடியாது என்றும், அவர் தன்னலத்திற்கெல்லாம் அப்பாற்பட்டு நின்று, பொதுநலனில் மிகவும் அக்கறை கொண்டு ஒரு தலைசிறந்த அரசியல் திறன் வாய்ந்தவராகப்பாடுபட்டார் என்றும், அவருடைய நாட்டுப்பற்றும், அவர் ஆற்றிய பேருதவியும் உடன்படிக்கை உருவாகக் காரணமாக அமைந்தன என்றும், இவையெல்லாம் இல்லையென்றால் உடன்படிக்கை உருவாகியிருக்காது என்றும், இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு ராஜீவ் காந்தி அவர்கள் கூறியவை நினைவுகூர்ந்து மகிழத்தக்கவையாகும். ஏற்படுத்தப்பட்ட இந்திய-இலங்கை உடன்பாட்டைக் குற்றம் குறைகளுக்கு இடம் இல்லாதவகையில் முழு நம்பிக்கையோடும், முழுமன நிறைவோடும் நிறைவேற்றி வைப்

பதில் இந்திய-இலங்கை அரசுகளுக்கு நாம் உறுதுணையாக இருப்பது நமது நீங்காக் கடமையாகும்.

பருவ மழைகள் தொடர்ந்து பொய்த்து வருவதன் காரணமாகச் சென்ற இரண்டாண்டு காலமாகக் கடுமையான வறட்சி நிலை தமிழகத்தில் நிலவி வருகிறது. குடிநீர் கிடைக்கச் செய்வதற்கான வசதி வாய்ப்புக் கூறுபாடுகளை ஆங்காங்கு பெருக்குவது, தட்டுப்பாடு இல்லாமல் உணவுப் பொருள்கள் கிடைக்க வழிவகை காண்பது, ஏழை எளிய விவசாய மக்களின் கடன் பளுவைக் குறைப்பது, வேலையற்று வாடும் நலிந்த மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவது போன்ற வறட்சி நிவாரணப் பணிகளை தமிழக அரசு போர்க்காலப் பணிகள் அடிப்படையில் நிறைவேற்றி வருகிறது. 1986-87-ல் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மட்டும் ரூ. 105 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இதுவரையில் ரூ. 94 கோடி வறட்சி நிவாரணப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்து ரூ. 73 கோடி அளவிற்குப் பணிகள் செய்து முடிக்கப்பெற்றிருக்கின்றன.

நமது சமுதாயத்தில் நலிந்த மக்களுக்கிடையே நிலவும் ஏழ்மை, போதாமை, இல்லாமை, வறுமை ஆகியவற்றை இயன்ற வகையில் நீக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும், தமிழக அரசு திட்டமிட்ட முறையில் ஐந்தாண்டுத் திட்டங்களையும், பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும், சமூக நல்வாழ்வுத் திட்டங்களையும், மேம்பாட்டுத் திட்டங்களையும், 20 அம்சத் திட்டங்களையும் நிறைவேற்றி வருவதில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கி வரும் தமிழக அரசு, எப்போதும் போல் முனைந்து நிற்பதோடு, சாதனைகள் பலவற்றையும் பெருமைமிகு வகையில் நிலைநாட்டி வருகிறது.

வேளாண்மை, பாசனம், மின்சாரம், தொழில், கைத்தறி, கல்வி, மருத்துவம், பொதுநலம், போக்குவரத்து, கூட்டுறவு, உணவுப் பங்கீடு, வீட்டுவசதி, சமூகநலம், குடிநீர் போன்ற துறைகளில் புரட்சித் தலைவர் ஆட்சி வியத்தகு சாதனைகள் புரிந்துள்ளதை நாடு நன்கறியும். சாதித்த சாதனைகள் அனைத்தும், சாதித்த போக்கும் சாதனைகளுக்குப் படிக்கற்களாகவும், எடுத்துக் காட்டுகளாகவும் அமையும். தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விடுதலைநாள் விழாச் செய்தியில் குறிப்பிட்டுள்ள,

''தமிழக மக்கள் கூடுதல் உற்சாகத்துடன் நாட்டுக்கான கடமைகளை ஆற்றிட முன் வரவேண்டும்.

வளர்ச்சித் திட்டங்களையும் சமூகநலத் திட்டங்களையும் வெற்றியுடன் நிறைவேற்றி சீரான வளர்ச்சிக்கு வழிகாட்டும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

சாதிமத பூசல்கள், வன்முறைகள் தலை காட்டாத வகையில் அமைதிப் பூங்காவாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது.

-தேசிய ஒருமைப்பாட்டு முயற்சிகளுக்கு வலிவு சேர்க்கிற பணியில் தமிழ்நாடு ஆர்வமுடன் ஒத்துழைப்பு நல்கி வருகிறது. இதே நிலையைத் தொடர்ந்து கட்டிக் காத்திட உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் நாடுகிறேன். வன்முறை, வெறித்தனம், வதந்தி பரப்புதல், மக்களைப் பிளவுபடுத்துதல் இவற்றையே நோக்கமாகக் கொண்டுள்ள சீர்குலைவுச் சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்போம் என்று நாம் அனைவரும் சபதம் ஏற்றிடுவோம். கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமைகளைப் பெறுவோம்! அமைதியையும், ஒற்றுமையையும் காத்து வளர்ச்சிக்கு வழிவகுப்போம்! புதிய சமத்துவ சமதர்ம அமைப்புகளுக்குத் தொடர்ந்து பாடுபடுவோம்! ''உழைப்பவரே உயர்ந்தவர், உழைப்பே உயர்வு தரும்'' எனும் மூலமந்திரத்தை மனதில் நிறுத்தி உழைப்பால் நாட்டை உயர்த்திட வாரீர் என அனைவரையும் அன்புக்கரம் கூப்பி அழைக்கிறேன்'' என்று குறிப்பிட்டிருப்பதை இந்த நல்ல நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். சமுதாயத்திலுள்ள எல்லாத் தரப்பினரும் அடிப்படைத் தேவைகளைப் பெறவேண்டும்! நல்வாழ்வு வாழ வேண்டும்! மனநிறைவான மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும்! என்ற குறிக்கோளை நிறைவேற்ற தமிழக அரசு தொடர்ந்து பாடுபடும். அதற்கு எல்லாத்தரப்புகளையும் சார்ந்த பொதுமக்கள் தங்கள் முழு ஆதரவையும், உறுதியான ஒத்துழைப்பையும் நல்குமாறு இந்த நாளில், இந்த நல்ல வாய்ப்பில் வேண்டி விரும்பிக்கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க இந்தியா என்றென்றும்!
வளர்க இந்தியா எல்லா வழிகளிலும்!
வெல்க இந்தியா எல்லா வகைகளிலும்!

(40-வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு கோட்டையில் கொடியேற்றி வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)



### வெள்ளையனே வெளியேறு!

ஆகஸ்டு-8 தீர்மானம் என்று இந்தியாவின் வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் பொறிக்கப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' என்னும் தீர்மானம் 1942-ஆம் ஆண்டு பம்பாயில் காங்கிரஸ் பெருங்குழுவில் கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் யார் தெரியுமா?

பண்டித ஜவகர்லால் நேரு

அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசியவர் சர்தார் வல்லபாய் படேல்.

# எத்தனை விடுதலை வீரர்?

—கவியோகி சுத்தானந்தபாரதி—



எத்தனை வீரர் இரத்தம் சிந்தினர்
இந்தியா உய்திடவே
எத்தனை சூரர் தூக்கு மேடையிலே
இன்னுயிர் ஈந்தனரே
எத்தனை தீரர் சிறையிலே வாடி
இதயம் உடைந்தார்கள்
அத்தனை வீரர் ஆவியும் துடிக்குதென்
ஆர்வத்தமிழ் மார்பில்

எத்தனை கவிகள் என்னுடன் இசைத்தனர்
எழுச்சிப் பாடல்களை
எத்தனை நாவலர் மேடையில் ஏறி
இடிமுரசென ஒலித்தார்
அத்தனை வீரரின் சொல்லும் செயலும்
அன்னையுன் பல்லாண்டே

வீரவிசயன், சிங்கன், சிவாஜி
வேலுநாச்சி மருதர்
தீரன் பாரதிதிலகர் காந்தி நேரு
சிதம்பரம் அரவிந்தர்
பாரதம் வாழப் பணிநலம் பூண்டனர்
பல்புகழ் வரலாற்றில்
சீர்பெற வாழ வார்முர சடித்தே
திருப்புகழ் இசைத்திடுவோம்

நாடே நம்உடல் நாடே நம்உயிர்
நாடே நம்வீடாம்
நாடே நந்தாய் கீடது வாழ்ந்திட
நம்முயிரைத் தருவோம்
சிங்க நெஞ்சுடனே தேசம் வாழத்
திருத்தொண்டு செய்திடுவோம்
பொங்குக புலமை பொலிகநம் கொற்றம்
புகழுக பூவுலகே

அன்னியர் இனிநம் அன்னை நாட்டினை
அணுவிட முடிந்திடுமோ
உன்னத மலைமிசை மின்னிடிப் படையுடன்
உலவிக் காவல்செய்வோம்
ஆரிய திராவிட நாட்டினர் நாமே
ஆளும் படைவீரர்
பாரினி லேஉயர்பண்பா டுடையவர்
பரிதிக்கதிர் போலே — நாம்
பார்புகழப் பொலிவோம்



# நாட்டு விடுதலை — நாற்பதாண்டு நிறைவு

நம்நாடு விடுதலை அடைந்து நாற்பது ஆண்டுகள்நிறைவு எய்தியதையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம் கடந்த 9.8.1987 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

தமிழகத்தில் விடுதலைப் போராட்டக் காலத்துல் புகழ் பெற்று விளங்கிய தூத்துக்குடி, மணியாச்சி, வேதாரண்யம், திருப்பூர், சென்னை திலகர் கட்டம் ஆகிய ஐந்து இடங்களிலிருந்து விடுதலைப் போராட்ட வீரர்களால் சேகரிக்கப்பட்டு சென்னைக்குக்கொண்டுவரப்பட்ட வீர மண் கொண்ட கலசங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. சட்டமனறச் சிறப்புக் கூட்டத்தில், அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வீரமண் கலசங்கள் சட்டமன்றப் பேரவைத்தலைவரிடம் அளிக்கப்பட்டன. இந்தச் சிறப்புக் கூட்டத்தில் பேருரை நிகழ்த்தினார், மேதகு ஆளுநர் திரு எஸ்.எல் குரானா. அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''உடல், பொருள், ஆவி என்று அனைத்தையும் அன்றைய தலைமுறையினர் தியாகம் செய்தனர். அதன் பயனை இன்று நாம் அனுபவித்துக் கொணடிருக்கிறோம்.

''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம், என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'' என்று மகாகவி பாரதியார் குறிப்பிட்டார்.

இப்படிப்பட்ட சுதந்திர வேட்கை தீர்ந்தது. நாட்டின் விடுதலை நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் நமக்குக்கிடைத்தது.

விலைமதிப்பு மிக்க இந்த விடுதலையை நமக்கு வாஙகித்தருவதற்காக தோளோடு தோள்நின்று போரிட்ட இலட்சக் கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள், ஆற்றல் மிகுந்த விடுதலைப் போராட்ட வீரர்கள், புகழ்வாய்ந்த பெருந்தலைவர்கள் ஆகியோருக்கு நமது நன்றியைத் தெரிவிக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தருணம் மிகுநல்ல தருணமாகும்.





# சட்டப் பேரவைச் சிறப்புக் கூட்டம்

நம்நாட்டின் ஒருமைப்பாட்டின் மீது நமக்கு இருக்கின்ற நம்பிக்கையை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள, இந்தநாடு அடைய வேண்டிய நல்ல பயன்களை நோக்கி நமது முழு வேகத்தையும் செலுத்துவோம் என்ற உறுதியை நாம் விடுதலை பெற்ற நாற்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நேரத்தில் எடுத்துக் கொள்வோம்.

அண்ணல் காந்தியடிகளை இந்நாளில் நினைவு கூர்வது நம் நீங்காக்கடமையாகும். அவர்தான் நாட்டின் விடுதலைச் சுடரை ஏற்றினார். இருட்டில் இருந்த நம்மைவெளிசசத்துக்குஅலழதது வந்தார்.

தேச விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு அரும்பெரும் தியாகங்கள் செய்த தலைவர்கள் பலர். அவர்களில் தாதாபாய் நவ்ரோஜி, லோகமானிய பாலகங்காதர திலகர், இராஜாஜி, லாலாலஜபதிராய், மௌலானா அபுல் கலாம் ஆசாத், ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ், வல்லபாய்பட்டேல், வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதி, தீரர் சத்திய மூர்த்தி போன்ற தலைவர்களின் அளப்பரிய சேவைகளை நாம் நினைவு கூர்ந்திடும் நன்னாள் இது.

இந்தச் சுதந்திர தியாகவேள்வியில் உடல், பொருள், ஆவியை ஈந்து இந்திய மண்ணுக்கு விடுதலை வாங்கித் தந்த தியாக தீபங்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நமது நன்றியைக் காணிக்கையாக்குவோம்.

நாடு சுதந்திரம் அடைவதற்காக ஏகாதிபத்திய காலனி ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த போரில் தங்கள் இன்னுயிரை நீத்த எல்லா வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் நமது அஞ்சலியைச்செலுத்துகிறோம்.

சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகள் முடிந்து விட்டன. நமது சாதனை என்ன என்று இப்போதுஎண்ணிப்பார்க்கிறோம்.

## இலங்கை ஒப்பந்தம்

கூட்டுச்சேராக்கொள்கை வழியில் நாம் நடந்து வருகிறோம. இந்த வட்டாரத்தில் அமைதியை ஏற்படுத்த உறுதியோடு இருக்கிறோம் என்பதற்கு, இநதியா-இலங்கை ஒப்பந்தமே எடுத்துக் காட்டு ஆகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததும, அரசியல் சட்டத்தை உருவாக்கியது, சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய மூன்று முக்கியக் கொள்கைகளோடு அரசியல், பொருளாதார, சமுதாய நீதி என்ற தத்துவத்தையும் மேற்கொண்டுள்ளது.

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட ஜனநாயக நாடு இந்தியாதான். 8 பொது தேர்தல்களை வெற்றிகரமாக முடித்துவிட்டோம்.

அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களில் 4 பேர் இன்று இங்கு நம்முடன் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நமது பாராட்டுக்கள்.

கல்வித் துறையில் 10 கோடி மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களுக்கும் நமது பாராட்டுகள்.

விஞ்ஞானப்படிப்பு மாணவர் எண்ணிக்கையில் உலகில் 3-வது இடத்தில் இருக்கிறோம்.

வானவெளி, அணுசக்தி ஆராய்ச்சியிலும் சாதனை படைத்து இருக்கிறோம். அணு குண்டுகளை நாம் தயாரிக்கவில்லை என்பது நமது முடிவுபடியே செய்யப்பட்டது. வறுமைக் கோட்டுக்குக்கீழே இருந்தவர்கள் எண்ணிக்கை 48 சதவீதத்தில் இருந்து 37சதவீதமாகக்குறைந்து விட்டது.

நாட்டில் சில சக்திகள், ஒருமைப்பாட்டையும் அரசியல்நிலையான தன்மையையும் பாதிக்கத் தொடங்கிவிட்டன. வகுப்புவாதத் தன்மை இன்னும் இருக்கிறது. சாதிப் பிரச்சினை போன்றவையும் இருக்கின்றன. அவைகள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும். இப்போது தீவிரவாதிகளும் சிலர் உருவாகி இருக்கிறார்கள். இவர்களுக்கு நாட்டின் உள்ளேயும், வெளியேயும், ஆதரவு இருக்கிறது. இதைச்சமாளிக்க பொது மக்கள் ஆதரவு மிக முக்கியமாக தேவைப்படுகிறது. ஆகவே நம்மிடம் உள்ள கருத்து வேறுபாடுகளையும்மறந்துநமது முயற்சியை ஒரே வழிப்படுத்தி இப்படிப்பட்ட தீமைகளை ஒழிக்க வேண்டும்.

ஒற்றுமையாகப் பணியாற்றி நாட்டை மீண்டும் நல்ல

பாதைக்கு எடுத்துச் செல்வோம் என்ற உறுதி மொழியை எடுத்துக் கொள்வோம்.

தெற்கே வேதாரண்யத்திலும், வடக்கே தண்டியிலும், தெறகே தூத்துக்குடியிலும், வடக்கே ஜாலியன் வாலாபாக்கிலும் எடுக்கப்பட்டு, இந்தப் புனிதமண் ஒன்றாகக் கலக்கபபட்டு அதன் மூலம் நமது வேற்றுமைகளை மறந்து, வலிமை மிக்க பெருமைமிக்க இந்தியாவில் ஒற்றுமையைக் குறித்துக்காட்டும் விதத்தில் நாம் நடந்து கொள்வோம்.



## நிதியமைச்சர் உரை

மேதகு ஆளுநர் உரைக்குப் பின்னர் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

இந்த ஆகஸ்டு 9-ந் தேதி, இந்தியாவின் மிக முக்கியமான நாளாகும். காரணம், தலைவர்கள் எல்லாம் ஒன்றாகக்கூடி, ''வெள்ளையனே வெளியேறு'' என்ற தீர்மானத்தை நிறைவேற்றி, முழக்கமிட்டு நாட்டு மக்களுக்கு எழுச்சி ஊட்டினார்கள். அப்படிப்பட்ட செயற்கரிய பெரும்பேறு கிடைத்த நாளாகும்.

எட்டுத் திசைகளிலும் சென்று, நமது அறிவு-ஆற்றல திறமையை விளங்கச்செய்யத் தூண்டும் அந்த நாளை நாம் நினைவு கொள்வோமாக!

உலகமே போற்றும் அளவுக்கு இந்தியா ஒரு ஜனநாயக நாடாக விளங்குகிறது. 68 கோடி மக்கள் நிறைந்த ஜனநாயக நாடு, என்ற பெருமையும் பெற்று இருக்கிறது. காரணம், நம்மைச் சுறறு உள்ள சிறுசிறு நாடுகள் எல்லாம் சர்வாதிகாரத்திலும், ராணுவ ஆட்சியிலும் மூழ்கிக்கிடக்கிறது. நம் நாட்டில் சாதி, இனப் பிரச்னைகள், பல மதங்கள், வழக்கங்கள், நோக்கங்கள் இருந்தாலும், தொடர்ந்து ஜனநாயக நாடாக நீடிக்கிறது என்ற தகுதியைப் பெற்று விட்டோம்.

கூட்டுசேரா நாடுகளுக்குத் தலைமை தாங்கிஇந்தியா சிறந்து விளங்குகிறது. வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் பல சாதனைகளைப்புரிந்து இருக்கிறோம். இயன்ற அளவு தொழிற்| கல்வி துணையோடு முன்னேறி வந்து இருக்கிறோம்.

நமது கடந்த கால செயல்களை பார்த்து, நடப்புகால திட்டங்களுடன் ஒப்பிட்டு, அதற்கு தகுந்தபடி திட்டங்களைத்தீட்டி வருகிறோம்.





# முனுசாமியின் முன் யோசனை




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

எல்லையில் பாகிஸ்தானும், சீனாவும் நம்மைப்பல தடவை தாக்கினாலும், அவற்றை எல்லாம் நாம் சமாளித்து விட்டோம். மீண்டும் அவர்கள் தாக்க முடியாது என்ற அளவுக்கு வலிமை பெற்று விட்டோம்.

பெற்ற சுதந்திரத்தைப்பேணி காக்க வேண்டும். என்றும் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கருத்துக்கு மதிப்பளிக்கும் அணுகுமுறை வேண்டும். இதைச்சூளுரையாக எடுத்துக் கொள்வோமாக!

சமதர்மத்தையும் பொருளாதார மேம்பாட்டுச் சூழ்நிலையையும் உருவாக்க வேண்டும். சாத்திரம், சம்பிரதாயம் பழக்க வழக்கம் என்ற பெயரால் உள்ள பழைய கருத்துக்களை மாற்றி மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும். அத்தனை பேரும் கட்டுப் பாட்டையும், கடமையையும், உணர்ந்து செயலபட வேண்டும்.

ஜனநாயகம் வளரட்டும், சமதர்மம் ஓங்கட்டும், சமத்துவம் நிலவட்டும், வன்முறை அகலட்டும். அன்புமுறை பரவட்டும். அறநெறி தழைக்கட்டும், அறிவு நெறி வளரட்டும். வளம் பெருகட்டும். வாழ்க்கைத்தரம் உயரட்டும். வறுமை நீங்கட்டும். வாட்டம் போகட்டும், வலிவு எங்கும் ஏற்படட்டும். அமைதி நிலவட்டும். எங்கும் என்றும் இன்பம் பொங்கட்டும். விடுதலை ஒலி முழங்கட்டும். இந்தியாவின் புகழ் சிறந்து விளங்கட்டும் !

**அனைத்துக்கட்சி உறுப்பினர்கள்**

அடுத்து, எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திருமதி டி யசோதா, திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்த நாஞ்சில் கி.மனோகரன், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த திரு ரமணி, ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு உத்திராபதி, முஸ்லீம்லீக் கட்சியைச் சேர்ந்த திரு அப்துல் சமது, அகில இந்திய பார்வர்டு ப்ளாக் கட்சியைச் சேர்ந்த திரு முத்துவேல் ஆகியோர் உரையாற்றிய பின்பு பேரவைத் தலைவர் திரு. பி.எச்.பாண்டியன் உரை நிகழ்த்தினார்.

**தீர்மானம் விவரம்**

பின்னர் நாட்டின் ஒருமைப்பாட்டினையும் ஒற்றுமையையும் வலியுறுத்தும் தீர்மானத்தைப் பேரவைத்தலைவர் திரு பி.எச். பாண்டியன் வாசித்தார்.

அத்தீர்மானத்தின் முழுவிவரம் வருமாறு:

இந்தியா விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறுவதைப் பூரிப்போடும், பெருமையோடும் கொண்டாடும் இந்த நேரத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தின் இச்சிறப்பு விழாக் கூட்டம் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றுகிறது.

“இந்தியாவில் விடுதலைப் போராட்டங்கள் பலவற்றிலும் வீரத்தோடு கலந்து கொண்டு தங்களுடைய தணியா நாட்டுப் பற்றை வெளிப்படுத்தி, உயிர்-உடல்-உடைமைகளை நாட்டுக்கு ஈந்தபல்லாயிரக்கணக்கான வீரத் தியாகிகளுக்கு இச் சிறப்புக் கூட்டம் தனது பெருமைமிகு அஞ்சலியைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறது.

இந்தியாவின் ஒற்றுமையிலும் இந்திய மக்களின் ஒருமைப்பாட்டுணர்விலும் ஆழ்ந்த நம்பிக்கையையும், அசைகக முடியாத நன்மதிப்பையும் இந்தச் சிறப்புமிக்க கூட்டம் இந்த நேரத்திலும் மீண்டும் வலியுறுத்துகிறது.

எதிர்காலத்தில் அரசியலில் ஜனநாயக நெறிமுறைகளைப் பேணி வளர்க்கவும் பொருளியலில் சமதர்மக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தவும், சமூக

சமூகவியலில் சமத்துவப் பண்பாட்டு நெறிகளுக்கு ஆக்கம் பயக்கவும், சாதிய-சமய-இன வேறுபாடுகளற்ற, வளமான, வலுவான பெருமைக்குரிய, புகழுக்குரிய புதிய இந்திய சமுதாயத்தை உருவாக்கும் பணியில், மீண்டும் ஒவ்வொருவரும் நம்மை ஒப்படைத்துக் கொள்வது என்றும், இந்தச் சிறப்புக் கூட்டம் முடிவு செய்கிறது”

இந்தத் தீர்மானத்தை சட்டமன்றம் ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

பின்னர் நாட்டின் விடுதலைக்காக உயர்நீத்த தியாகிகளுக்கு சட்டமன்றத்தில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் வரலாற்றுப் பெருமைமிக்க வீரமண் அடங்கிய கலசங்களைப் பேரவைத்தலைவர் திரு பி.எச்.பாண்டியன் அவர்கள், தமிழ்வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் திரு ம.பொ.சிவஞானம் உள்ளிட்ட ஐவரிடம் வழங்கினார்.

வேதாரண்யம் வீரமண் அடங்கிய கலசத்தை சிலம்புச்செல்வர் திரு.ம.பொ.சிவஞானத்திடமும், தூத்துக்குடி வீரமண் அடங்கிய கலசத்தை விடுதலைப்போராட்ட வீராங்கனை விஜயலட்சுமியிடமும், மணியாச்சி வீரமண் அடங்கியகலசத்தை விளையாட்டு வீராங்கனை பவுசியாபேகத்திடமும், சென்னை திலகர்கட்டத்தில் எடுத்த வீரமண் கலசத்தை விளையாட்டு வீரர் அண்ணாவியிடமும், திருப்பூரில் எடுத்த வீரமண் கலசத்தை விளையாட்டு வீரர் ஸ்ரீதரனிடம் பேரவைத் தலைவர் வழங்கினார்.

இறுதியில் நாட்டு வாழ்த்தை இசைக்குழுவினர் முழங்க சட்டப் பேரவைச்சிறப்புக் கூட்டம்நிறைவெய்தியது.





# வேதாரண்யத்தில் வீரமண் சேகரிப்பு விழா

இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் புகழ் மிக்க அத்தியாயத்தைச் சேர்த்த பெருமை வேதாரண்யத்திற்கு உண்டு. அண்ணல் காந்தியடிகள் தண்டியாத்திரை மேற்கொண்டு சத்தியாகிரகம் நடத்தியவேளையில், மூதறிஞர் இராஜாஜி தலைமையில் உப்பு சத்தியாகிரகம் நிகழ்ந்தது இந்த வேதாரண்யம் பூமியில்தான். ஆங்கில ஆட்சியின் ஆணவத்திற்கு அறைகூவல் விடுக்கும் உப்பு சத்தியாகிரகம் 30-4-1930-ல் நடந்த வேதாரண்யத்தில், வீரமண் எடுக்கும் நிகழ்ச்சி 7-8-1987 அன்று நடைபெற்றது.

வேதாரண்யத்திற்கு ஆறு கல் தொலைவில் அமைந்துள்ள அகஸ்தியம் பள்ளியில்தான் உப்பு சத்தியாகிரகம் நிகழ்ந்தது.

வீர மண் எடுக்கும் விழாவிற்குத் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் முதன் முதலில் வீர மண்ணை அகழ்ந்து எடுத்தார்கள். தமிழக அரசின் தலைமைக் கொறடா திரு. துரை. கோவிந்தராசன், சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவர் திரு. கோவி. நாராயணசாமி, சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்லமுத்து, விடுதலைப் போராட்ட வீரர் சர்தார் வேதரத்தினம் அவர்களின் திருக்குமாரர் திரு.

''உப்பின்மீது விதிக்கப்பட்ட வரி, இந்துக்கள், இசுலாமியர், பார்சிகள், கிறித்தவர், யூதர், ஆகிய எல்லோரையுமே ஒரு சேரப் பாதிக்கிறது. ஏழைகளையோ அது இன்னும் அதிகமாகப் பாதிக்கிறது'', என்று கூறினார் மகாத்மா காந்தி. ஆகவே தான் தண்டி யாத்திரையை அண்ணல் மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து தென்னாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யம் உப்பு யாத்திரையை இராஜாஜி தொடங்கினார். இராஜாஜியும் மற்ற சத்தியாக்கிரக வீரர்களும் 1930ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி 16 நாட்களில் 150 மைல் நடந்து சென்று வேதாரண்யத்தை அடைந்தனர். வேதாரண்யத்திலிருந்து சில கல் தொலைவிலுள்ள இடத்தேவர் உப்பளப் பகுதியிலிருந்து, இராஜாஜியும் அவருடன் 16 உப்புச் சத்தியாக்கிரக வீரர்களும் உப்பெடுத்தனர். இராஜாஜி, டி.எஸ்.எஸ்.இராஜன், சர்தார் வேதரத்தினம் பிள்ளை, ருக்மணி லட்சுமிபதி ஆகியோரும் மற்றும் பலரும் கைது செய்யப்பட்டு, ஆறு மாதக் கடுங் காவல் தண்டனையும் 200 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டனர்.



நாட்டு மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டி, வாழ்வின் வசந்தத்தைக் கருக்கிக் கொண்ட விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவுக்கு அஞ்சலி செலுத்திய சிலம்புச் செல்வர், நாட்டின் சுதந்திரத்தைக் காக்க நாம் அனைவரும் உறுதி ஏற்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

பின்னர், வீர மண் கலசம் தஞ்சாவூருக்கு எடுத்து வரப்பட்டது.

தஞ்சாவூர் சுற்றுலா மாளிகைக்குக் கொண்டு வரப்பட்ட வீர மண் கலசம் புகைவண்டி நிலையத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

தஞ்சாவூர் புகைவண்டி நிலையத்தில் வீரமண் கலசம் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. ஏராளமான பொது மக்கள் தங்களின் வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்தினார்கள். பின்னர் வீர மண் கலசம் இராமேஸ்வரம் புகைவண்டி மூலம் சென்னைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.


(67ஆம் பக்கம் பார்க்க)

வே. அப்பாகுட்டி மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்கள், அரசு அலுவலர்கள் ஏராளமான பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

அகஸ்தியம் பள்ளியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட வீர மண், அதற்குரிய கலசத்தில் வைக்கப்பட்டு வேதாரண்யம் வீதிகளில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. வீர மண் கலசம் தாங்கிய ஊர்தியைத் தொடர்ந்து பொதுமக்கள், பள்ளி மாணவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், அரசு அலுவலர்கள் அணி வகுத்து நடந்து வந்தார்கள். வழியெங்கும் திரளாசு பொதுமக்கள் நின்று வீரஞ்செறிந்த சம்பவம் நிகழ்ந்த மண்ணுக்கு தங்களின் வீர வணக்கத்தைச் செலுத்தினார்கள்.




**வேதாரண்யத்திலிருந்து எடுத்து வந்த வீரமண்ணை, தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் சென்னை இராஜாஜி மண்டபத்தில் வைக்கும் காட்சி.**



# நல்லுறவு நீடிப்பதாக!

தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர்
டாக்டர் ம. பொ. சிவஞானம்

ஆண்டுதோறும் ஆகஸ்டு 15ல் சுதந்திர விழாவைக் கொண்டாடு கிறோம் என்றாலும், இந்த ஆண்டு ஆகஸ்டு 15ல் தமிழினத் தார் மகிழ்ச்சிப் பெருமிதத்தோடு சுதந்திர நாளைக் கொண்டாடு கின்றனர் என்று சொல்லலாம்.

இலங்கையிலுள்ள ஈழத் தமிழ ருக்குத் தனி மாநிலம் தேடித் தந்துவிட்டு இந்த ஆண்டில் எம். ஜி. ஆர். அரசு சுதந்திர நாளைக் கொண்டாடுகிறது.

இந்திய அரசியல் அமைப்புப் படி ''அயல் நாட்டுறவு'' மத்திய அரசுக்கே உரியதாகும். அதில் தலையிடவோ, மத்திய அரசுக்கு ஆலோசனை கூறவோ மாநிலங் களுக்கு உரிமையில்லை. மாநில சுயாட்சி கோரும் நான் கூட, அயல் நாட்டுறவு என்றென்றும் மத்திய அரசுக்கே உரித்தாயிருப் பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆயி னும், அயல் நாடான இலங்கை யில் வாழும் தமிழர் பிரச்சினை யிலே தமிழக அரசின் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். புதிய மரபு படைத்துவிட்டார். இந்திய அர சியல் அமைப்பை ஊடுருவி அயல் நாடான இலங்கையில் வாழும் தமிழர் பிரச்சினையிலே, இந்திய அரசை ஏவல் கொண்டுவிட்டார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை இந்தியா சுதந்திரம் பெற்ற நாள் தொட்டே மத்திய அரசுக்கு ஒரு தலைவலியாக இருந்து வந்திருக் கிறது.

இலங்கைவாழ் இந்திய வமிசா வழித் தமிழர் பிரச்னை வேறு: இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் பழங்குடிக ளான ஈழத் தமிழர் பிரச்னை வேறு.

பூர்வகுடித் தமிழர் பிரச்னை யிலே இதற்கு முன்பெல்லாம் தமிழக அரசைக் கலந்தாலோ சித்து, அதன் கருத்தை ஏற்று மத்திய அரசு முடிவு எடுத்த தில்லை.

சாஸ்திரி-பண்டார நாயகா உடன்படிக்கை ஏற்பட்டது, இந் திய வமிசாவழித் தமிழர் பிரச் னையையொட்டி! அப்போது தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தான் ஆட்சியிலிருந்ததென்றா லும் மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு தமிழக அரசின் கருத்தறிய முன்வரவில்லை. டில்லியில் நடந்த சாஸ்திரி - பண்டார நாயகா பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளத் தமிழக முதல்வர் அழைக்கப்படவில்லை.

இலங்கைப் பிரதமர் பண்டார நாயகாவுடன் உடன்படிக்கை செய்துகொண்டு, அதன் பிரதி ஒன்றைத் தமிழக அமைச்சருக்குக் கொடுத்தார் பிரதமர் லால்பக தூர் சாஸ்திரி.

அதன்பின், இந்தியாவுக்கே உரியதான -சேதுபதி மன்னரின் குடும்பச் சொத்தான -கச்சத் தீவை இலங்கைக்குத் தானம் செய்தபோதும் இந்திய அரசு அப் போதிருந்த முதல்வரைக் கேட்டு முடிவெடுக்கவில்லை. உடன்படிக்கை கண்டபின் அதன் நகலைத் தமிழக முதல்வரிடம் கொடுத்தார் பாரதப் பிரதமர்.

ஈழத் தமிழர் விஷயத்திலே தான் தலையிட முடியாது என்று ஆரம்பமுதலே திட்டவட்டமாகத் தெரிவித்து வந்தது மத்திய அரசு. இதெல்லாம் பழங்கதை.

தமிழகத்தின் ஆட்சிப் பீடத் தில் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர் ஏறிய பின்னர், இலங்கைத் தமி ழர் பிரச்னையிலே இந்திய அர சுக்கு அவர் வழிகாட்டியாகிவிட் டார். அவரின்றி ஓரணுவும் அசைவதில்லை.

1983ல் இலங்கையில் தமிழர் துன்புறுத்தப்பட்டபோது,

அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் கொண்ட குழுவை அழைத்துச் சென்று, பிரதமர் இந்திரா காந்தியுடன் பேசினார் எம்.ஜி.ஆர். அப்போதும் ''ஈழத் தமிழர் பிரச்சினையானது, இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை; அதில் இந்தியா தலையிட முடியாது.'' என்னும் பழைய சித்தாந்தத்தையே வலியுறுத்தினார் இந்திராகாந்தி.

ஈழத் தமிழர் விஷயத்திலே இந்திய அரசானது மூன்றாவது மத்தியஸ்தச் சக்தியாகச் செயல்பட வேண்டும் என்ற புதியதொரு பாதையை வகுத்துக் கொடுத்தார் எம்.ஜி.ஆர். இது சாதாரண விஷயம் அல்ல. அரசமைப்பு தனக்கு உரிமையில்லாத அயல் நாட்டுறவுப் பிரச்னையிலே மத்திய அரசுக்கு மாநில அரசு வழிகாட்டும் புதியதொரு வரலாற்றை எம்.ஜி.ஆர். படைத்துவிட்டார்.

அன்று அவர் போட்ட விதை செடியாகி, கன்றாகி, மரமாகி, மரத்தின் காயாகி, அதுவும் கனியாகி, எம்.ஜி.ஆர். கையிலே வந்து விழுவதற்கு நான்காண்டுகளாயின.

முதல்வர் எம்.ஜி.ஆருக்கு நான் தரும் இந்தப் புகழுரை வெறும்கற்பனையன்று. 2.8.87ல் சென்னைக் கடற்கரைக் கூட்டத்திலே பிரதமர் ராஜீவ் காந்தியே எம்.ஜி.ஆரைப் புகழ்ந்தபோது இந்த உண்மையை ஐயந்திரிபற வெளியிட்டார்.

''இந்திய-இலங்கை உடன்படிக்கை என்பது முதல்வர் எம்.ஜி.ஆரின் ராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி. அவர் தேசபக்தியோடு எனக்குக் கொடுத்த உதவியின் விளைவாகக் கிடைத்த வெற்றி. எம்.ஜி.ஆரின் நேர்மை, பொறுமை, துணிச்சல் ஆகியவற்றிற்குக் கிடைத்த வெற்றி'' என்று சொன்னார் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி.

''முதலமைச்சர் எம்.ஜி.ஆர், இல்லையென்றால் இந்திய - இலங்கை உடன்படிக்கையே இல்லை'' என்றும் சொன்னார் பிரதமர் ராஜீவ் காந்தி.

ஐந்து லட்சம் மக்கள் கொண்ட பொதுக்கூட்டத்திலே பிரதமர் ராஜீவ் காந்தி செய்த பிரகடனம் இது.

சூலை 4ஆம் தேதியன்று யாழ்ப்பாணத்திலே நடந்த புலிப்படையினரின் பொதுக்கூட்டத்திலே ஈழத் தமிழருக்கு நம்பிக்கை தரும் உடன்படிக்கையைக் கண்ட பிரதமர் ராஜீவ் காந்திக்கும் முதல்வர் எம்.ஜி.ஆருக்கும் நன்றி தெரிவித்துப் பேசியிருக்கிறார் திரு பிரபாகரன். பிரதமர் ராஜீவ் மீதும் முதல்வர் எம்.ஜி.ஆர். மீதும் கொண்ட அன்பால்தான் ஜெயவர்த்தனாவை நம்ப முடியாத நிலையிலும் கொழும்பு உடன்படிக்கையை ஏற்கிறோம்'' என்றும் கூறியிருக்கிறார் புலிப்படையின் மாவீரர் பிரபாகரன்.

திரும்பவும் சொல்கிறேன், அரசமைப்புப்படி தமிழகத்திற்கு இல்லாத ஒரு உரிமையைத் தனது ராஜதந்திரத்தாலும் தேசபக்தியாலும் ஆக்கிரமித்திருக்கிறார் எம்.ஜி.ஆர்.

மத்திய அரசைத் தன்வழிப்படுத்தி, இலங்கையிலேயும் ஒரு தமிழ் மாநிலம் படைத்துக் கொடுத்துவிட்டார் எம்.ஜி.ஆர். அயல்நாடுகளிலுள்ள தமிழர் விஷயத்தில் உதவிடவும், மத்திய அரசுக்கு ஆலோசனை கூறவும் தமிழக அரசுக்கும் உரிமையுண்டு என்ற புதிய மரபைப் படைத்துவிட்டார் எம்.ஜி.ஆர். பிரதமர் இதற்குக் கைகொடுத்தார்.

தொடர்ந்து பத்தாண்டுக் காலம் போராடி இந்தியாவில் தமிழ் மாநிலம் படைத்தவன் நான். அதைத் தொடர்ந்து இலங்கையிலும் தமிழ் மாநிலம் படைத்த பெருமை டாக்டர் எம்.ஜி.ஆருக்கு உரித்தாகும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற நாற்பதாண்டைக் கொண்டாடும் இந்த நேரத்திலே இலங்கையில் தமிழ் மாநிலம் படைக்க இந்திய அரசைத் தூண்டி, அதில் வெற்றியும் கண்ட முதல்வர் எம்.ஜி.ஆருக்கு வாழ்த்து கூறுகிறேன்.

ராஜீவ்-எம்.ஜி.ஆர். நல்லுறவு நீடிப்பதாக!

பிரதமர் ராஜீவ், இலங்கைத் தமிழர் பிரச்னையிலே ஒவ்வொரு கட்டத்திலும் முதல்வர் எம்.ஜி.ஆரின் ஆலோசனையைக் கேட்டு நடந்தார். இப்படி, அயல் நாட்டுப் பிரச்னையிலே வேறெந்த முதல்வருக்கும் இந்த வாய்ப்பு தரப்பட்டதில்லை மத்திய அரசால்! இது, டாக்டர் எம்.ஜி.ஆரின் ராஜதந்திரத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.



## பகத்சிங்

பஞ்சாப் கேசரி லாலா லஜபதி ராய் அமைதியான முறையில் கண்டனப் பொது ஊர்வலம் நடத்தியபோது ஆங்கிலேயர்களால் அடித்துக் கொல்லப்பட்டார்.

அவரைத் தாக்கிய காவல் துறை அதிகாரியைப் பகத்சிங்கும் அவரது நண்பர்களும் சுட்டுக் கொன்றனர். டில்லி சட்டப்பேரவையில் வெடிகுண்டு வீசினர். இக்குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டனர்.

பகத்சிங்கின் நோக்கம், அரசியல் கொலை செய்வதல்ல. மக்களுக்குப் புரட்சி செய்யும் எழுச்சி உண்டாக்குவதே ஆகும்.

பகத்சிங்கும் நண்பர்களும் கைவிலங்குகள் பூட்டியே வழக்கு மன்றத்திற்கு அழைத்து வரப்பட வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

பகத்சிங்கிற்கு ஆயுள் தண்டனை முதலில் வழங்கப்பட்டது.

மீண்டும் புலன் விசாரணை செய்து லாகூர் உதவிக் காவல் துறைக் கண்காணிப்பாளரைக் கொலை செய்ததாகவும், லாகூரிலும், சகாரன்பூரிலும் வெடிகுண்டுப் பட்டறைகளை நடத்தியதாகவும், டில்லிசட்டப்பேரவையில் வெடிகுண்டுகளை எறிந்ததாகவும், மாட்சிமை தாங்கிய மன்னர்பிரான் சர்க்கார்மீது போர் தொடுக்கச் சதி செய்ததாகவும், இன்னும் பல சதிக் குற்றங்கள் புரிந்ததாகவும் பகத்சிங் மீது குற்றம்சாட்டப்பட்டு அவருக்குத் தூக்குதண்டனை அளிக்கப்பட்டது.

23.3.1931 அன்று வீரர் பகத்சிங் தூக்கிலிடப்பட்டார்.

# சுதந்திரப் போராட்ட நினைவுகள்

—தியாகி எல். கிருஷ்ணசாமி பாரதி

தமிழகத்தில் கணவர், மனைவி, மகன்- இப்படி ஒரு குடும்பமே விடுதலைப் போரில் பங்கு பெற்றுப் பெருமை எய்தியுள்ளது. அந்தக் குடும்பத்தின் தலைவர் தமது அனுபவத்தை இங்கே எடுத்துரைக்கிறார்.

சுதந்திரப் போராட்டம்பற்றி நினைவுறுங்கால், மூவரின் திருவுருவங்கள், என் மனக் கண்ணில் காட்சி அளித்து, எனக்கு மாட்சி தந்து, என் உள்ளத்தை ஆட்சி செய்கின்றன. அதில், முன்னிற்பவர், தேசத் தந்தை காந்தி அடிகளாவர். இரண்டாவதாக, நிற்பவர், தமிழக அரசால் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டு, நான்மாடக்கூடல் நகரில் உருவச் சிலை அமைக்கப்பெற்று பெருமைப்படுத்தப்பட்ட இந்தி ஆதிக்க எதிர்ப்பு வீரர், பெருமதிப்பிற்குரிய எனது அருமை மாமனார், நாவலர் சோமசுந்தர பாரதியார் என்பவராவார். மூன்றாவது, ஒரு பெண்மணி! 'ஆடவர் ஒருவர் பொதுவாழ்வில் சிறப்புற்றோங்கிட, ஒரு பெண்மணி கூட இருப்பாள்' என்ற ஆங்கிலப் பழமொழிக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்; அவ்வம்மையார் நாவலர் பாரதியாரின் அருமைத் திருமகளும் எனது வாழ்க்கைத் துணைவியுமான இலட்சுமிபாரதி அம்மையார் ஆவார்.

1919-ஆம் ஆண்டு இறுதியில் தூத்துக்குடிக்கு நாவலர் பாரதியார் வீட்டிற்கு மகாத்மா காந்தி அடிகள் வருகை தந்திருந்தார். அதுபோழ்து அடிகளாரை அடியனேன் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். உடல் மண்ணுறக் கீழே வீழ்ந்து அடிகளார் பாதம் தொட்டு வணங்கி எழுந்தேன். அடிகளார் புன்முறுவலோடு தன் திருக்கையினை என் தலைமீது வைத்து ஆசி வழங்கினார். அதை இன்று நினைத்தாலும் என் உள்ளம் நெகிழ்கிறது. என் நாட்டுப் பற்றுக்கு ஊன்றப்பட்ட வித்து இதுவே ஆகும். அதுபோழ்து எனக்கு வயது 16.

எனக்குத் திருமணம் 1922 மே மாதம். எனது மனைவி இலட்சுமி பாரதியும், என்னுடைய சுதந்திர மோக நெருப்பு தீவிரமாக எரிய, அவ்வப்போது எண்ணெய் வார்த்துக்கொண்டிருந்தது, எனக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்து வந்தது.

1932-ல் அன்னியத் துணிக்கடை மறியல் செய்தேன். தண்டனை இரண்டு ஆண்டுகள் கடுங்காவலும் 500 ரூபாய் அபராதமும்! சிறையில் தேசபக்தர்கள் வரவு, ஆறுதல் தரும் ஒரு மாமருந்து. வேலூர்ச் சிறையில் என்னோடு இருந்த திரு சி. சுப்பிரமணியம் (மைய அரசின் நிதி அமைச்சராக இருந்தவர்) அவர்களை நான் மறக்கற்பாலதன்று.

வேலூர்ச் சிறைவாசம் கழிந்து மதுரை திரும்பி வந்த மூன்றாம் நாள், என் மனைவி எனக்கு அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று சொன்னாள். தானும் தயாராக இருப்பதாகத் தெரிவித்தாள். எதற்குத் தயார்? தான் சிறை செல்வதற்கு! அப்படியே நான் திரும்பிய 15ஆம் நாளே, மறியல் செய்து ஆறுமாதம் தண்டனை பெற்றுச் சிறை சென்றாள்.

1940-ஆம் ஆண்டு தனிப்பட்டோர் சத்தியாக்கிரகத்தில் ஒரு வருடம் கடுங்காவலும் ரூபாய் 500 அபராதமும் தண்டனையாக விதிக்கப்பெற்றேன். அதுபோழ்து என் மனைவி கடுமையான இதய நோயால் பீடிக்கப்பட்டிருந்தாள். 'நீ சிறைக்கு வரவேண்டாம்' என்று சொல்லி இருந்தேன். அதுபோழ்து காந்திஜியின் செயலாளராக இருந்த ஜி. இராமச்சந்திரன் (காந்தி கிராமப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்) எங்கள் வீட்டில் தங்கி இருந்தார். இவர் காந்தி அடிகளுக்கு எழுதிய கடிதத்தின் பேரில், அடிகளார் என் மனைவிக்கு ஒரு கார்டு எழுதினார். ''உங்கள் உடல்நிலை காரணமாக நீங்கள் சிறைசெல்ல வேண்டியதில்லை'' என்று அந்தக் கார்டு வந்த மறுநாளே, என் மனைவி சத்தியாகிரகம் செய்து, 6 மாதம் தண்டிக்கப்பட்டாள். இவற்றை எல்லாம் அறிந்த நான் வேலூர்ச் சிறையிலிருந்து, சிறை மூலமாக காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினேன். ''உங்கள் ஆணையை மீறி என் மனைவி சிறை சென்றுவிட்டாள்' என்று. அடிகளார் எனக்கு எழுதிய பதில் என்னைத் தூக்கிவாரிப்போட்டது. கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு;

''அன்புள்ள கிருஷ்ணசாமி,

உங்கள் கடிதத்தில் என் ஆணையை உங்கள் மனைவி மீறியதாகத் தாங்கள் குறிப்பிட்டிருப்பது, தேசத்தின் மகோன்னதமான ஒரு குரலுக்குக் கீழ்ப்படிவதற்குத்தான். எவ்வாறாயினும், அன்று சீதை தன் கணவருடன் பயங்கரக் கானகத்துக்குக் கூடச் சென்றதுபோல, ஒரு நல்ல மனைவி ஒரு நல்ல கணவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கத்தானே வேண்டும்?

அவள் உடல்நிலை பற்றிக் கவலை வேண்டாம். ஒன்றும்



கிருஷ்ணசாமி பாரதி



இலட்சுமிபாரதி

நேர்ந்து விடாது. அதை ஆண்டவன் கவனித்துக்கொள்வான். தங்கள் பாபு''

**மகாத்மா, மகாத்மாவேதான்!**

1940 சத்தியாகிரகிகள் வேலூரிலிருந்து 1941-ல் திருச்சிச் சிறைக்கு மாற்றப்பட்டோம். திருச்சிச் சிறைவாசம் மறக்கற்பாலதன்று. தமிழக அமைச்சர்கள் உட்பட, 150 சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரே இடத்தில் இருந்தோம். தனி அறைகளில் நாங்கள் அடைக்கப்படவில்லை.

மூதறிஞர் இராஜாஜியோடு தினம் சுமார் 3 மணிநேரம் சேர்ந்திருந்து உரையாடும் வாய்ப்பினை நானும இன்னும் ஏழு, எட்டுப்பேர்களும் பெற்றோம். இராமாயணம் - திருக்குறள்-ராஜாஜி எடுத்துக் கொண்ட பொருள்கள் -ஆசிரியர் மாணவர்கள் கலந்து உரையாடல் போல, அவர் இருந்த இடத்தில் தினம் 8 மணிககுக் கூடுவோம். இந்த உரையாடலில் எல்லோரும் கலந்துகொள்வோம். இப்போது கிடைக்கக் கூடியதொன்றா? 'கல்கி ஆசிரியர் ரா.கிருஷ்ணமூர்த்தி 'மூன்றுமாதக் கடுங்காவல்' என்ற நூலில் இதைப் பற்றி அழகுற எழுதி உள்ளார்.

1942ஆம் ஆண்டு எனக்கு மிகுந்த வேதனை தந்த காலம். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம். என் மகள் சென்னை தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில், முதுகலை (எம்.ஏ) 2-ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் காலை நாளேடுகளில் மாணவி மகாலட்சுமிபாரதி மறியல் செய்து கைது செய்யப்பட்டாள் என்ற செய்தி எனக்கும் என் மனைவிககும் ஆராத் துயரத்தைத் தந்தது. என மனைவி கதறி அழுதாள். மறுநாள் இதைவிடப் பேரிடி, எனது 16 வயதுள்ள மகன், இலட்சுமிகாந்தன் பாரதி மதுரையில் ஜூனியர் இண்டர்மீடியட் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான. அவன் மறியல் செயது, கைது செய்யப்பட்டான் என்றசெய்தி தலையில் இடிவிழுந்த மாதிரி இருந்தது. என் மனைவி அலறினாள். மறுநாள் நீதிமன்ற விசாரணை. நானும், என் மனைவியும் நீதிமன்றம் சென்றோம். என் மகனைப் பார்த்ததுமே என் மனைவி கண்ணீர்விட்டாள். என் மகன் கைகளைச் சட்டையால் மூடிக் கொண்டிருந்தான். என் மனைவி சட்டையை விலக்கினாள். கைகளில் விலங்கு மாட்டப்பட்டிருந்தது! ''ஐயோ, அம்மா' என்று அலறினாள். ''இப்படி விலங்கோடு பார்க்கவா, உன்னை நான் பெற்றேன்! என்று ஓ என்றுஅலறி அழுதாள். ''அம்மா இது பாரத தேவிக்கு மாட்டப்பட்ட விலங்கு. இதை முறித்தெறியவே நான் சிறைக்குச் செல்கின்றேன்!'' என்று ஆறுதல் கூறினான். ''மீண்டும் வந்து, படித்து, உங்களை மகிழ்விக்கும் பதவி வகிப்பேன்' பாருங்கள், ''என்றான்! 4 மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றான்.

மதுரையில் கொலுவீற்றிருக்கும் மீனாட்சி அம்மையின் கருணைதானென்னே! எந்த இடத்தில்விலங்குமாட்டப்பெற்றானோ என்மகன் லட்சுமிகாந்தன பாரதி சில வருடங்கள் கழித்து அதே மதுரை மாவட்டக் கலெக்டராக பதவி ஏற்றது உள்ளத்தை நெகிழ்விக்கும் மகிழ்ச்சிகரமான செய்தி.

தமிழ்நாட்டுக்குப் பெருமை தரத்தக்க இரண்டு சாதனைகள் புரிந்திட எனக்கு வாய்ப்புக்கிட்டியது. முதலாவதாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர்கள் -சுதந்திரப் போராட்டங்களில் கலந்துகொண்டு சிறைக்குச் சென்றது. நான், என் மனைவ், மகள், மகன், சகோதரனின் மனைவி, மனைவியின் சகோதரர் ஆகிய அறுவர். சிறைக்குச் சென்றோம். 1930, 1932, 1940 ஆகிய மூன்று போராட்டங்களிலும் பங்கு உண்டு. இருவர் இருமுறை சிறை சென்றவர்கள்.

இரண்டாவது சாதனை 50 ஆணடுகளுக்கு முன்னால் 1937-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் நானும் என் மனைவி கே.இலட்சுமிபாரதியும், தம்பதிகளாகக் காங்கிரஸ் சார்பில் உறுப்பினர்களாக இருந்தோம்.

வீர மண்கொண்டுவந்த சுதந்திரப்போராட்ட தியாகிகளாகிய எங்கள் ஐவருக்கும், தமிழக அரசும், சட்டப் பேரவையும் தந்த மரியாதை எங்கள் ஐவர்களுக்கு மட்டுமல்ல, தியாக சீலர்கள் அனைவருக்குமே செலுத்திய மரியாதையாகும்.

பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தைப்பேணிப் போற்றிப் பாதுகாத்திடுவோம் என்றும், தேசிய ஒருமைப்பாட்டு உணர்வினை ஓங்கி வளர்த்திடப் பாடுபடுவோம் என்றும், நாட்டு ஒருமைப்பாட்டுணர்வினைக் குலைக்க முற்படும் தீயசக்திகள் அனைத்தையும் முறியடிக்க முற்படுவோம் என்றும், இவற்றிற்காக மைய மாநில அரசுகளுக்கு உறுதுணையாக இருந்துவருவோம் என்றும், சுதந்திரப்போராட்ட வீரர்கள் அனைவரின் சார்பிலும் உறுதி கூறுகிறேன்.



வல்லபாய் பட்டேல்

## உலகமே கண்டிராத நிகரற்ற போர்!

**'இரும்பு மனிதர்' என்று எல்லாராலும் புகழப்பட்ட சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் சுதந்திரப் போராட்டத்தின்போது, மக்களிடையே ஆற்றிய உரை:**

**நீங்கள் எத்தகைய தியாகத்திற்கும் தயாராகிவிட வேண்டும். வீடு வாசலை விட்டொழிக்கவோ, சிறைச்சாலைகளில் தவம் கிடக்கவோ, இன்னும் எத்தனைக் கஷ்டங்கள் ஏற்படினும் அவற்றை இன்முகத்துடன் ஏற்க நாம் சித்தமாய் இருக்கப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.**

**ஒவ்வொரு கிராமமும் இனி ஒரு போர்க்களமாக மாறிவிட வேண்டும். ஒழுங்கும் கட்டுப்பாடும் மிகமிக அவசியம். எங்கேனும் கொஞ்ச நஞ்ச பயம் ஒட்டிக் கொண்டிருந்தால் உதறி எறியுங்கள்**

**''பலாத்காரத்தை மனத்தினால்கூட நினைக்காதீர்கள். கோபத்தை விட்டொழியுங்கள், உலகமே கண்டிராத நிகரற்ற போர் ஒன்று ஆரம்பமாகிவிட்டது.**

**''சாவுக்குப் பயப்படுகிறவர்கள் தீர்த்த யாத்திரைக்குக் கிளம்பிவிடுங்கள்.**

**''பொருள் நஷ்டத்திற்குப் பணக்காரர்கள் அந்நிய தேசங்களுக்கு ஓடி விடுங்கள்.**

**''எறும்பு வரிசையைப் போல் மக்கள் சாரி சாரியாகச் சிறைப் புகவேண்டும். மக்களிடையே வெளிப்படையான குறைகள் காணப்படும் இடங்களில் சாத்விக நடவடிக்கை எடுப்பதன் மூலம் அக்குறையை நிவர்த்தி செய்யுங்கள்''**



# வீரபாண்டியக் கட்டபொம்மன்

வீரபாண்டிய கட்டபொம்மன் விடுதலைக்கு வித்திட்ட மாவீரன், வாணிபம் செய்ய வந்த வெள்ளையர்கள் மண்ணாசை கொண்டு நாட்டை ஆளத் தலைப்பட்டனர்.

1790-ல் முடிசூட்டிக்கொண்ட கட்டபொம்மனிடம் கப்பம் செலுத்துமாறு கூறினர் வெள்ளையர். கட்டபொம்மனோ, 'நாடு எங்களுடையது; நிலம் எங்களுடையது; உங்களுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்'' என்று கூறி கப்பம் கட்ட மறுத்து விட்டார்.

கட்டபொம்மன் வரிசெலுத்துமாறு மிரட்டினர். பல வழிகளில் அவரை அச்சுறுத்தியும், அஞ்சா நெஞ்சோடு அந்நியரை எதிர்த்து நின்றான்.

பாஞ்சாலங்குறிச்சி மக்கள் மற்றும் வீரர்கள் திருவிழாக் காண திருச்செந்தூர் சென்றிருந்தபோது நள்ளிரவில் பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டை அந்நியரால் முற்றுகையிடப்பட்டது. கட்டபொம்மன் கடும்போர் புரிந்தான். கட்டபொம்மனை அழிக்க அந்நியர் கடும் முயற்சி செய்தனர். இறுதியில் கட்டபொம்மன் கோட்டையிலிருந்து வெளியே தப்பிச் சென்றான்.

பின்னர் படை திரட்டிப் போரிடலாம் என்று தம்பியுடன் தப்பினான். ஆனால் வெள்ளையர்கள் அவரைத் துரத்தித் தேடினர். புதுக்கோட்டைப் பகுதியில் இருப்பது அறிந்து புதுக்கோட்டை மன்னனைக்கொண்டு, கட்டபொம்மனைக் கைது செய்தனர்.

விசாரணை ஒன்றினைக் கண்துடைப்பிற்காக நடத்தி, கட்டபொம்மனைத் தூக்கிலிடத் தீர்ப்பு அளித்தனர்.

கலங்கா நெஞ்சுடன், விடுதலைப் போருக்கு வித்திட்ட செம்மல் சிரிப்பு மறையா முகத்துடன் முடிவை நோக்கி அடியெடுத்துச் சென்றான்.

தூக்குமேடையில் நின்றவனின் கண்கள், தம்பி ஊமைத்துரையைத் தேடின. தூக்கிலிடப் போவதைக் கண்டு அவர் வருந்தவில்லை. 1799-இல் கயத்தாற்றில் அவர் தூக்கிலிடப்பட்டார்.

## கதர்க் குல்லா !

உலக மகா யுத்தத்துக்குப் பிறகு நாட்டின் ஆட்சியில் இந்தியர்களுக்கும் பங்கு தருவதற்காக ஆங்கிலேயர்கள் அரசியல் நிர்ணய சபையை அமைத்தார்கள். காந்தி மக்களிடம் கூறியபடி, அரசியல் நிர்ணய சபைக்காக நடந்த தேர்தலை மக்கள் புறக்கணித்தனர். இது மட்டுல்ல. வெளிநாட்டுத் துணிகளைப் பகிஷ்கரிக்கும்படி ஒரு கோஷத்தை வேறு, காந்தி மக்களிடையே கிளப்பிவிட்டிருந்தார். இங்கிலாந்து தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட ஆடைகள் பாரதத்துக்குப் பெரும் அளவில் அனுப்பப்பட்டு வந்தன. ஆங்கிலேயர்களுக்கு எல்லாவற்றைக் காட்டிலும் மிகப் பெரிய லாபம் இந்தத் தொழிலிலிருந்துதான்.

தேசபக்தர்கள் அனைவரும் கதர் அணியவேண்டும் என்று காந்தி கூறினார். கையினால் நூற்று, கையினாலேயே நெய்து கிடைக்கும் இத்தகைய தடித்த துணிகளை அந்த நாட்களில் கிராமங்களில் உள்ள மிக மிக ஏழை மக்களே உடுத்தி வந்தனர். காந்தி, தானே வேட்டியும், கதர்ச் சட்டையும் அணிய ஆரம்பித்தார். தலையில் தலைப்பாகைக்குப் பதிலாகக் கதர்த் தொப்பியை அணிந்துகொண்டார். அந்தத் தொப்பிதான் 'காந்திக் குல்லா' என நாடு முழுதும் பிரசித்தி பெற்றது. எல்லா தேசபக்தர்களும் அந்தக் கரடுமுரடான கதரையே அணிய ஆரம்பித்தனர்.

—'சுயராஜ்யத்தின் கதை' என்னும் நூலிலிருந்து.



# விடுதலைப் போரில் வென்தாடி வேந்தர்

# தந்தை பெரியார்

**எஸ். நல்லரசு**

ஈரோட்டுச் சிங்கம் **தன்மானத்** தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி,செல்வம்மிக்கவர்; செல்வாக்கு மிக்கவர். தீர மிக்கவர்; தியாகம் மிக்கவர். மக்களுக்குத் தொண்டாற்றிமகத்தான புகழ்பெற்று ஈரோட்டு நகராட்சியின் தலைவராக ஏற்றம் பெற்றவர். தண்ணீரின்றித் தவித்த ஈரோட்டுக்குத் தக்கதோர் திட்டத்தினை நிறைவேற்றித் தாகம் தீர்த்தவர் என்பதை ஈரோட்டுக் கல்வெட்டு இன்றும் பறைசாற்றி நிற்கிறது.

குறுகிக்கிடந்த ஈரோட்டுத் தெருக்களை விரிவுபடுத்தி, சுகாதாரச் சூழ்நிலையை உருவாக்கி மக்கள் சுகவாழ்வு வாழ வழி செய்தார். இவரது நிர்வாகத் திறன் கண்டு சேலத்து நகர் மன்றத் தலைவரான சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் (இராஜாஜி) பாராட்டினார்.

ஈரோடு நகர்மன்றத் தலைவர் பதவியோடு, கவுரவ நீதிபதி, தாலுக்கா போர்டு துணைத் தலைவர், ஜில்லா போர்டு மெம்பர் என மொத்தம் இருபத்தொன்பது (29) பதவிகளை வகித்து வந்தார். இத்தனை பதவிகளும் இவரது தொண்டுள்ளத்தைக் கண்டு இவரிடம் சரணடைந்து கிடந்தன.

இந்தப் பொதுநலம் பேணும் பெருமகனை விடுதலை இயக்கத்திற்கு ஈர்க்க, இராஜாஜி, திரு. வி. கல்யாணசுந்தரனார், வரதராஜுலு நாயுடு மூவரும் ஆர்வங் கொண்டனர்.

அண்ணல் காந்தியின் தீண்டாமை ஒழிப்பு, மது ஒழிப்பு போன்ற கோட்பாடுகள்இளமை முதலே சாதிக்கொடுமையை ஒழிக்கச் சபதம் எடுத்துத் தொண்டாற்றி வந்த பெரியாரை பெரிதும் கவர்ந்தன. அதுமட்டுமல்ல, பஞ்சாப் படுகொலை கண்டு உள்ளம் பதறினார். தாம் வகித்து வந்த 29 பதவிகளையும் உதறினார். காந்தியடிகளின் தலைமையில் இயங்கிய விடுதலை இயக்கமான காங்கிரசில் இணைந்தார்; இரண்டறக் கலந்தார். பட்டாடையும், பகட்டாடையும், மன்னர் போன்று வாழ்ந்த மாளிகை வாசத்தையும் துறந்தார். கதராடை அணிந்தார், கைராட்டினம் ஏந்தினார். காந்தியடிகளின் முப்பெரும் கோட்பாடுகளான கதராடை அணிதல், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றை முழுமூச்சுடன் மேற்கொண்டார். மும்முரமாய்ப் பிரச்சாரம் செய்தார்.

> **இந்தியாவில் முதன் முதலாக நடந்த கள்ளுக்கடை மறியலை நடத்தியவர் பெரியார்!**
>
> **இந்தியாவில் முதன் முதலாக நடந்த வைக்கம் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்று வெற்றி கண்டவர்.**
>
> **காங்கிரஸ் பேரியக்கத்தின் போராட்ட வரலாற்றில் முதன் முதலாகத் தம் குடும்பத்துப் பெண்களையே ஈடுபடுத்தியவர்.**
>
> **கதர் மூட்டைகளைத் தோளில் சுமந்து விற்றவர்.**
>
> **தம் தோட்டத்திலிருந்து கள் கொடுக்கும் 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தியவர்.**
>
> **ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு ஐம்பதாயிரம் ரூபாயை இழந்தவர் பெரியார்.**

### தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் ஈ.வெ.ரா.


தந்தை பெரியார் காங்கிரசில் இருந்தார் என்றால், வெறும் நான்கணா சந்தாதாரராக இருந்தார் என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கலாம். அவர் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்தார்; தமிழ்நாடு காங்கிரசின் செயலாளராக இருந்தார்.

கதராடையைத் தோளில் சுமந்து விற்றார், கைராட்டையுடன் கிராமங்கள்தோறும் சுற்றி வந்து கதர்ப் பிரச்சாரம் செய்தார்; கதரைத் தான் அணிந்தது மட்டுமல்ல, தன் குடும்பத்தார் அனைவரையும் கதர் அணியச் செய்தார். பட்டாடையே அணிந்து வந்த எண்பது வயதான தன் தாயாரையும் கதர் அணியச் செய்தார்.

### மதுவினை ஒழிக்க மகத்தான தியாகம்

அண்ணல் காந்தியடிகளின் அடுத்த கொள்கையான மதுவிலக்கினைப் பெரியார் நிறைவேற்றிய விதம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. காந்தியடிகள் ஈரோட்டுக்கு வந்து தந்தை பெரியார் வீட்டில் தங்கியிருந்து மதுக்கடைகளை எதிர்த்துப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுத் தீர்மானம் நிறைவேற்றுகிறார். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றப் போராட்டத்தில் தானும் தன் குடும்பமும் இறங்குவோம் என முன் வருகிறார் தந்தைபெரியார். இந்தியாவிலேயே கள்ளுக்கடை மறியல் என்பது முதன் முதலில் தமிழ்நாட்டில்தான் நடைபெற்றது. அதில் பெரியாரின் குடும்பத்துப் பெண்களே ஈடுபடுகிறார்கள். பெரியாரின் துணைவியார் நாகம்மையார்,

பெரியாரின் தங்கை கண்ணம்மாள் இருவரும் ஈடுபட்டனர்.



போராட்டத்தில் பெண்கள் கலந்து கொண்டதால் நாடெங்கும் பரபரப்பு. 144 தடைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அரசின் சார்பில் சமாதானத் தூதுக்குழு அண்ணல் காந்தியை அணுகியது. பண்டித மதன் மோகன் மாளவியா, சட்டமேதை சங்கரன் நாயர் இருவரும் காந்தியடிகளிடம் கள்ளுக்கடை மறியலை நிறுத்தும்படி வேண்டினர். ''அந்த மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்களின் கையில்தான் இருக்கிறது. அவர்களைத்தான் கேட்க வேண்டும்'' என்று அண்ணல் காந்தி பதில் கூறி விட்டார். இந்தச் செய்தியினை 1922-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் நாளிட்ட இந்து ஏடு வெளியிட்டுள்ளது.

அண்ணல் காந்தி தலைமை ஏற்ற பின்னர், காங்கிரஸ் இயக்கத்தின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாகப் போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் பெரியார் குடும்பத்துப்பெண்கள் தாம் என்பது குறிப்பிடத்தக்க உண்மை. இதனை 9 ஆண்டுகளுக்கு முன்னர் 'டெக்கான் ஹெரால்டு' வெளியிட்டது. தன் குடும்பத்துப் பெண்களையே போராட்டத்தில் இறக்கிய பெருமை தந்தை பெரியாரையே சாரும். தன் குடும்பத்தை மட்டுமா, தமிழ்நாட்டையே மாற்றியவராயிற்றே பெரியார்!

மதுவிலக்குக்காகப் போராட்டம் நடத்தியது மட்டுமல்ல. மது கொடுக்கும் தென்னை மரங்களையே வெட்டி விடுவதென முடிவெடுத்து, தன் தோட்டத்தில் இருந்த 500 தென்னை மரங்களையும் வெட்டிச் சாய்த்தார் பெரியார். இதனைச் சுட்டிக் காட்டி எழுதும் சாமி சிதம்பரனார், 'காந்தியாரின் சொல்லைக் கண்மூடிப் பின்பற்றிய பைத்தியக்காரர்களில் இவரே தலையாயவர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## தீண்டாமையை ஒழித்த தீரம்

தீண்டாமை ஒழிப்பில் தந்தை பெரியாரின் தீவிரத்துக்குத் தீனி போட்டது வைக்கம். இந்தியாவிலேயே தீண்டாமையை எதிர்த்து முதன் முதலாகப் போராட்டம் நடந்தது கேரளத்திலுள்ள வைக்கத்தில்தான். அந்தப் போராட்டத்தையும் முன்னின்று நடத்தி வெற்றி கண்டு 'வைக்கம் வீரர்' என்ற பெருமையினைப் பெற்றவர் தந்தை பெரியார். தந்தை பெரியாருக்கு ஆறு மாதம் கடுங்காவல் கேரளத்துச் சிறையில்! அதன்பின்னர் பெரியாரின் துணைவியார் நாகம்மையாரும் பெரியாரின் தங்கை கண்ணம்மாவும் வைக்கம் போராட்டத்தில் இறங்கினர். போராட்டம் தீவிர மடைந்தது. திருவிதாங்கூர் ராணியார் அண்ணல் காந்தியை அணுகினார். அண்ணல் காந்தி, தந்தை பெரியாரிடம் நேரில் பேசி உடன்பாடு ஏற்படுத்தினார். பெரியாருக்கு வெற்றி கிடைத்தது.


கேரளத்துச் சிறையில் தந்தை பெரியார் வாடியபோது அதே சிறையில் இருந்த கேரள காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், மாத்ரு பூமியின் ஆசிரியரும் பின்னர் இலங்கையில் ஹைகமிஷனர் பொறுப்பேற்றவருமான கே. பி. கேசவமேனன் தனது சுயசரிதையில் தந்தை பெரியாரின் தியாகத்தைப் போற்றி எழுதினார்.

'முழங்கால் அளவிலேயே நிற்கிற ஒரு துண்டை மட்டும் கட்டிக்கொண்டு, கழுத்திலே கைதி எண்ணைக் குறிக்கும் மரக் கட்டைச் சின்னத்தையும், குற்றவாளிக்குரிய சிறைத் தொப்பியினையும் அணிந்துகொண்டு கொலை, கொள்ளைகளுக்காகத் தண்டனை பெற்ற குற்றவாளிகளுடன் அவரும் வேலை செய்து கொண்டு இருக்கிறார். ஒரு சிறைக் கைதி சாதாரணமாகச் செய்கிற வேலையைவிட இரண்டு மடங்கு வேலையை அவர் செய்கிறார். கேரளத்தில் உள்ள தீண்டத்தகாதோரின் விடுதலைக்காக இந்தப் பெருமகன் செய்துள்ள இந்தத் தியாகமே எங்களுக்குப் புத்துயிர் அளித்தது. இந்தப் பேரியக்கத்தின் உன்னதக் கொள்கைக்காக எல்லாவற்றையுமே அவர் இழந்து நிற்கிறார்.

''இங்கே (கேரளத்தில்) ஈ.வெ.ராவின் முதிர்ச்சியும், பெருந்தன்மையும், அனுபவமும், ஆர்வமும், தேசபக்தியும் யாருக்காவது இருக்கிறதா? இந்த மாநிலத்தின் மக்களுக்காகத் தொல்லைகளை ஏற்க வந்துள்ள இந்த மாபெரும் தலைவரைக் காணும் போது, அவர்கள் தங்களைத்

தாங்களே வெறுத்து வெட்கப் பட வேண்டாமா? கேரளத்தில் உள்ள அனுபவமிக்க பெரியோர் தங்கள் சாய்வுநாற்காலிச் சுகங் களைத் துறந்து எழுந்து வர வேண்டாமா?''

இப்படிக் கேரளத்துத் தலை வர்களே வியந்து போற்றிடும் வகையில் தீண்டாமைக் கொடு மையை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்டார் பெரியார்.



**ஒத்துழையாமை இயக்கத்தில் ஒப்பரிய பணி**

காந்தியடிகளின் ஒத்துழை யாமை இயக்கத்தில் தீவிரப்பங்கு கொண்டார் பெரியார். வெள்ளை கார அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கக்கூடாது. வெள்ளை அரசு நடத்தும் நீதிமன்றங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்பது முடிவு. அதனைச் சிரமேற் கொண்டு செயலாற்றினார் பெரியார். வியாபாரத்தின் மூலம் தனக்கு வரவேண்டிய கடன் தொகைகளை நீதிமன்றத்தின் மூலம் வசூல் செய்யாமல் விட்டு விட்டார். விடப்பட்ட தொகை யின் அன்றைய மதிப்பு (1920-ல்) ரூபாய் ஐம்பதாயிரம்.

> **''ஈ.வெ. ராமசாமி வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட பிறகு அப்போராட்டம் வீறு பெற்றது; தீவிரமடைந்தது. அவ ரது ஆவேசப் பேச்சுகள் திருவி தாங்கூர் மகாராஜாவின் மகாத் மியத்திற்கே ஒரு சவாலாக அமைந்தது''.**
>
> **-வைக்கம் சத்தியாக்கிரகமும் காந்தியும் (Vaikom Satyagraha & Gandhi என்ற நூலிலிருந்து. (எழுதியவர் கேரளப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் ரவீந்தரன்)**

ஒரே ஒரு கடன் பத்திரத்தின் மூலம் வரவேண்டிய தொகையே ரூபாய் இருபத்தெட்டாயிரம் இருந்தது இவை எல்லாவற்றை யுமே புறக்கணித்தார் பெரியார்.

இதைப் பற்றிக் கேள்விப்பட்ட சேலம் மாவட்ட காங்கிரஸ் தலைவரும் புகழ்பெற்ற சுதந் திரப் போர் வீரரும், வழக்கறிஞ ருமான சேலம் விஜயராகவாச் சாரியார் பெரியாரிடம் சென்று:

''இவ்வளவு பெரியதொகையை இழக்கக்கூடாது. உங்களுக்கு வேண்டாம் என்றால், அதனை வசூலிக்கிற அதிகாரத்தை எனக்கு மாற்றிக் கொடுங்கள். அதை வசூலித்துக் கட்சி நிதிக்குச் சேர்த்துக் கொள்ளலாமே' என்று கேட்டார்.

அதற்குப் பதில் கூறிய பெரியார்,

''என்னுடைய பணத்துக்காக நான் வாதாடினாலும் ஒன்றுதான் நீங்கள் வாதாடினாலும் ஒன்று தான். எனக்குப் பணம் பெரி தல்ல. கொள்கைதான் பெரிது' என்று ஒரே அடியாக மறுத்து விட்டார்.

இப்படி ஒரு பெருந்தொகையை வசூலிக்கப் பெரியார் மறுத்தார் என்ற செய்தியைச் சிலரால் நம்பமுடியவில்லை. அவ்வளவு வியப்புக்குரியதாக அது இருந் தது. அப்படி ஐயப்பட்டு திருச்சி யிலிருந்து காங்கிரஸ் தொண்டர் சு. பரமசிவம் என்பவர் சேலம் விஜயராகவாச்சாரியாருக்குக் கடிதம் எழுதி இது உண்மை தானா என்று கேட்டார்.

அக்கடிதத்திற்கு விஜயராக வாச்சாரியார் தந்த பதிலில், ''ஆம். அது உண்மைதான்' என்று எழுதிவிட்டு, மேலும் ஒன்றைக் குறிப்பிட்டார்.

'நாயக்கரைப் பற்றி உங்களுக்கு இப்படி ஒரு சந்தேகம் வந்தது எனக்கு ஆச்சரியத்தைத் தரு கிறது'' என்றும் குறிப்பிட்டார். (ஆதாரம்: சாமி சிதம்பரனார் எழுதிய 'தமிழர் தலைவர்).

இவ்வாறு எதை எடுத்தாலும், காந்தியடிகளின் கொள்கைகளை, கோட்பாடுகளை, திட்டங்களை நூற்றுக்கு நூறு உண்மையாக, உறுதியாக, திட்பமாக, தீவிர மாக நிறைவேற்றிய தந்தை பெரியார், சுதந்திரப் போராட்ட இயக்கமான காங்கிரஸ், தமிழ் நாட்டில் வேரூன்றித் தழைக்க வும், கதராடை கட்டுதல் எங்கும் பரவவும், தீண்டாமை ஒழியவும் பாடுபட்டார்.

வெள்ளை ஆதிக்கத்திலிருந்து சுதந்திரமடைவது மட்டும் போதாது என்று கூறி தீண் டாமை ஆதிக்கம், அறியாமை ஆதிக்கம், இல்லாமை ஆதிக்கம், மொழி ஆதிக்கம் ஆகியவற்றி லிருந்தும் நாம் விடுதலை பெற வேண்டும் என்று பாடுபட்டார். அல்லும் பகலும், வாழ்நாள் முழுவதும், நோய்த் தொல்லை களையும் பொருட்படுத்தாது தமது 95-வது வயது வரையிலும் தனது இறுதி மூச்சுவரை இச் சுதந்திரப்போரைத் தொடர்ந் தார்.

அரசியல் விடுதலை மட்டு மல்ல, சமுதாய விடுதலைக்காக வும் அவரது போர் தொடர்ந் தது. உலகம் கண்டிராத சமூக விடுதலைப் போராட்டக்காரர் அவர். சமுதாயச் சீர்திருத்த வாதிகள் பேசுவார்கள்; எழுது வார்கள். எதுவும் நடக்க வில்லையே என்று மனம் புழுங்கிச் சாவார்கள். தந்தை பெரியார் ஒருவர்தான் தனது கொள்கை களை நிறைவேற்ற ஒரு அமைப் பினை உருவாக்கினார். தக்கதோர் தளபதியாம் பேரறிஞர் அண்ணா மூலம் ஒப்பரிய சாதனைகளைத் தன் வாழ்நாளிலேயே கண்டார்.

# ஜீவாவின் விடுதலைப் பாடல்கள்



**பா**ரதி பாதையைப் பின்பற்றி, பாமரர்கள் எழுச்சி பெறச் செய்த பாடல்கள் பலவற்றைப் பாடியவர், தமிழ்நாட்டினரால் 'ஜீவா' என்று செல்லமாக அழைக்கப்பட்ட ப. ஜீவானந்தம், பாரதியார் கவிதைகள் ஆன்மீக அடிப்படையில், புது உலகு காண மக்களை அழைத்தன. ஜீவாவின் பாடல்களில், மனிதனே மையப் பொருள், மனிதனின் உணர்ச்சிகள் வலுப் பெற்று, இலட்சியப் பிடிப்புகள் மேலோங்கி, சிந்தனையும் செயலும் சமதர்ம நெறியில் நின்று, புதிய உலகைப் படைக்க அறைகூவல் விடுப்பவை ஜீவாவின் பாடல்கள்.

அவர் பாடல்களில் ஓங்கி நிற்பது சமதர்ம உணர்வு. அச்சுரண்டலற்ற சமதர்மச் சமுதாயத்தைச் சமைப்பதற்குச் சுதந்திர வேட்கை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் அமைந்தது.

1935ஆம் ஆண்டில், கோவையில் ஸ்டேன்ஸ் ஆலையில் வேலை நிறுத்தம் நடந்த போது, தொழிலாளர் கூட்டம் நடைபெறுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு, ஜீவா வரைந்த 'காலுக்குச் செருப்பும் இல்லை' என்ற பாடல், வேலை நிறுத்தம் செய்த அத் தொழிலாளர்களை வீறு கொண்டு எழச் செய்ததோடு, தேசியக்கூட்டங்களிலும் தொழிலாளர் கூட்டங்களிலும், பல ஆண்டுகள் பாடப்பட்டு, கேட்போரை உணர்ச்சி வசப் படுத்தியது.

''காலுக்குச் செருப்புமில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக் குழைத்தோ மடா-என் தோழனே
பசையற்றுப் போனோ மடா''

என்று, பாடுபட்ட தன்பலனைப்பறிகொடுத்துப் பரிதவித்த பாட்டாளி மக்களின் பரிதாப நிலையைப் படம் பிடித்துக் காட்டினார் அவர்.

''பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாய முவாள்
வேலையின்றி நாம முவோம்-என் தோழனே
வீடுமுச் சூடும் அழும்''

என்று பாடுகையில், சூழ்ந்திருந்த வறுமையையும் கவ்வியிருந்த இருளையும் போக்க, சமதர்ம உணர்வைச் சூடி சமருக்கு முன்வர, அழைக்கின்றார் ஜீவா, 'முச்சூடும் அழும்' என்ற மொழிகளில், மூச்சு விடுகிறது புரட்சி உணர்வு.

''நானோர் தொழிலாளி— ஒரு
நாய்க்குறும் சுகமேனும் வாய்க்கும் வழியில்லை

ஏனோ புவிவாழ்வு—ஈ (நானோர்)
எறும்பும் சுதந்திரம் விரும்பி படையநான்
தானோ அடிமை ஜந்து—கொடும்
சஞ்சலத்தேள் கொட்டிச் துஞ்சுகின்றேன்
அந்தோ
(நானோர்)''

என்று 1938-இல்ஜீவர் ஆக்கிய பாடலை, கலைஞர் டி. கே. சண்முகம், 'பதிபக்தி நாடகத்தில் தேயிலைத் தோட்டக்காட்சியில் பாடியபோது மக்கள் மெய்சிலிர்த்தனர்.

அந்நிய ஏகாதிபத்தியம், ஆதிக்க சமுதாயத்துக்கு ஆதரவாக இருந்ததால், சமதர்மத்தை நிலைநாட்ட முதலில் சுதந்திரம் எய்த வேண்டும் என்று சுட்டிக்காட்டும் தேசிய விடுதலைப் பாடல்கள் பலவற்றைத் தோழர் ஜீவா ஆக்கியுள்ளார்.

''தேசம் சுதந்திரம் பெறலாகாதா—
எங்கள் இந்திய
(தேசம்)

''ஏகாதி பத்தியம் வந்து புகுந்து
ஏறி மிதித்திட நொந்தோம்
சோகம் தவிர்க்க நாமினி ஒன்று
சூழ்ந்து துணிய லாகாதா (தேசம்)


என்ற பாடல் 1937-இல், கோவை பாப்ப நாயக்கன்பாளையம் லட்சுமி மில்லில் நடந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது ஜீவா விடுத்த வீறார்ந்த அறைகூவல்,

''பூரண சுயேச்சைநம் தேசம்எய் திடுமாறு
போர்முர சடிக்க வேண்டும்,
புன்னெறிகொள் ஏகாதிபத்தியமோ டுறவுசெய்
போக்கைப் பழிக்க வேண்டும்
சாரமில் லாதபுது அரசிய லெனும் அடிமைச்
சாசனம் உடைக்க வேண்டும்
ஜனநாய கத்திற்கு முரணான சட்டங்கள்
தம்மைத் தகர்க்க வேண்டும்,''

என்று, 1937இல் அவர் முழங்கிய பாடலில், 'ஊரறிய நாடறிய உலகறிய நம் கொள்கை உறுதிபெற, ஓர்மையாய் தேசிய முன்னணி படைப்பதில் ஒன்றுபடுவீர் தோழரே' என்று போர்ப்பரணி பாடுகின்றார்.

# 1942

# ஆகஸ்டுப் புரட்சி



உலக யுத்த மேகம் கடுமையாகிவிட்டது. கருமையாகிவிட்டது. இந்தியாவில் வேறுவழியின்றி காந்தியடிகள் யுத்தத்தின் கடைசி சங்கநாதத்தை 1942-இல் ஆகஸ்டு 8, 9 தேதிகளில் பம்பாய் நகரில் 'வெள்ளையனே வெளியேறு' 'செய் அல்லது செத்துமடி' என்ற தாரக மந்திரத்தை எழுப்பினார். அவரவர்களே தலைவர்களாக மாறி நாட்டின் விடுதலைக்குத் தங்கள் பங்குகளை ஆற்றவேண்டும் என்று ஆணையிட்டார் அண்ணல்.

பம்பாயில் கூடிய ஆகஸ்டு-8 முதல் நாள் கூட்டத்தில் இந்தப் புரட்சிக்கான காரணத்தை விளக்கியும், நேசக்கரம் நீட்டிய காந்தியடிகளை உதாசீனப்படுத்தியது ஏகாதிபத்தியம். அடிகள் போராட்டக் காரணங்களை நன்கு விளக்கி 'இன்று போய் செயல் திட்டங்களை உருவாக்கி, நாளை வருவோம்' என்று அறிவித்து, தன் பாசறைக்குச் சென்றார்.

வெள்ளையரின் விதி விளையாடிவிட்டது. வைசிராய் லில்லித்கோ சதி செய்து விட்டார். காந்தியடிகள், நேரு, பிரசாத், படேல், ஆசாத் உள்ளிட்டமுன்னணித்தலைவர்களைஇரவோடு இரவாகக் கைது செய்து எங்கோ கொண்டு போய் விட்டார். அந்த நிமிடத்திலேயே தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டன. பத்திரிகைகளுக்குச் செய்திகள் மறுக்கப்பட்டன. போதாததற்கு வானொலியில் லில்லித்கோ ''காந்தியடிகளும் காங்கிரசும் பலாத்காரச் செயலில் ஈடுபட்டு விட்டார்கள்' என்று பொய்ப் பிரச்சாரம் செய்தார்.

இதனை வானொலியில் கேட்ட மக்கள் தலைவர்களை எங்கோ கொண்டு சென்று விட்டார்கள் என்று சந்தேகத்தோடும், ஏற்கெனவே பலமுறை ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் அனுபவப்பட்டிருந்த காரணத்தாலும் முதல்நாளில் அடிகள் 'செய் அல்லது செத்துமடி, வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷங்களைத் தந்து விட்டபடியாலும் அவரவர்கள் மனப்படி யுத்த எதிர்ப்பில் இறங்கி புரட்சித் தீயைப் புயல் எனப் பரப்பினர்.

இந்தியா என்ற எரிமலை வெடித்தது. ஏகாதிபத்தியக் கட்டடங்கள் எரிந்தன. அதிர்ந்தன. தந்திக்கம்பங்கள் அறுந்தன. சாய்ந்தன. ரயில் தண்டவாளங்கள் பெயர்ந்தன. ராணுவ நடமாட்டங்கள் சிதைந்தன. தபால் பெட்டிகள், சாவடிகள் மற்றும் அரசு சம்பந்தப்பட்ட அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டன.

''அஷ்ட தரித்திரம் அகன்றிட வேண்டி
அடிமைக் கொடும்தளை அறுந்திட வேண்டி
துஷ்ட துரைத்தனம் தொலைந்திட வேண்டி
காங்கிரஸ் கொடிக்கீழ்
பாங்கொடு நீயும்
கச்சையை வரிந்து கட்டி நின்றே தோழா'

என்ற பாடல், நிமிர்ந்து சண்டைபோட்டு, நீதியை நிலைநாட்ட, முதிர்ந்த தேசப்பற்றுடன் முனைந்து செயல்பட அழைக்கும் முற்போக்குப் பாடல்.

''என்றைக்குச் சிவகிருபை வருமோ—ஏழை
என்மனச் சஞ்சலம் அறுமோ''

என்று அன்று மக்களைக் கவர்ந்திருந்த ஒரு பாடலின் மெட்டிலே,

''என்றைக்குச் சுதந்திரம் வருமோ—ஏழை
இந்தியர் துயரங்கள் அறுமோ''

என்று விடுதலை வேட்கையை மீட்டிய பாடல் பெரும்புகழ் ஈட்டியதொன்று.

அந்நிய ஆதிக்கத்தால் மட்டும் ஏற்பட்டதன்று அடிமைத்தனமென்பதையும், சமயத்தின் பேரால் பல சழக்குகளுக்கும், மதங்களின் பெயரால் பல மாச்சரியங்களுக்கும், மறைகளின் பெயரால் பல மடமைகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும், ஆசாரத்தின் பெயரால் பல அறிவீனங்களுக்கும் மக்கள் அடிமையாகிவிட்டனர் என்பதை அம்பலப்படுத்தினார், சமுதாய மறுமலர்ச்சிக் கவிஞர் ஜீவா.

—'தேசியம் வளர்த்த தமிழ்'
என்னும் நூலிலிருந்து.

'வெள்ளையனே வெளியேறு' என்று சொன்னதற்கு....

# 24 கசையடி வாங்கியவர்

தியாகி திரு கே. பெருமாள் உடையார் அவர்கள், அண்ணல் காந்தியடிகள் வாழ்த்துக்களோடு சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டவர். பல இன்னல்களை அனுபவித்தவர். 'வெள்ளையனே வெளியேறு' என்று சொன்னதற்காக 24 கசையடிகள் வாங்கியவர்... 71 வயதான அவரை நாம் சந்தித்தபோது....

**1928**-ஆம் ஆண்டு.

தமிழ்த் தென்றல் திரு. வி.க. நடத்திய சாது அச்சுக்கூடத்தில் திரு. கே. பெருமாள் உடையார் சிறுசிறு வேலைகளைச் செய்து வந்தார். அப்போது அவருக்கு வயது பதின்மூன்று.

அச்சுக்கோப்பது, வருகிற பிரமுகர்களுக்குத் தண்ணீர் முதலியன கொடுத்துக் கவனிப்பது இவரது வேலை.

மாலை நேரத்தில் திரு. வி.க. அவர்களின் இல்லத்தில் தேசியத் தலைவர்கள் பலர் வந்து கூடுவார்களாம். வ.உ. சிதம்பரனார், மகாகவி பாரதியார், மறைமலையடிகள், டாக்டர் நடேச முதலியார், சச்சிதானந்தம் பிள்ளை, திரு. வி. க. அவர்களின் அண்ணன் உலகநாத முதலியார் முதலானோர் வந்து அரசியல் விவகாரங்கள் பற்றிப் பேசுவார்களாம். திரு. வி. க. அப்போது பி. அண்ட். சி. மில் தொழிலாளர் சங்கத் தலைவர். ''காந்தியடிகள் தலைமையில் நாமெல்லாம் ஒன்று சேர்ந்து தீவிரமாகச் செயல்பட வேண்டும்'' என்று திரு. வி. க. அவர்கள் கூறுவார். திரு சர்க்கரைச் செட்டியார், ''பேசுவதை விடுத்து செயலில் இறங்க வேண்டும். மற்றவர்களுக்கு நாமெல்லாம் வழிகாட்ட வேண்டும்'' என்று கூறுவார்.

இந்த நிகழ்ச்சி திரு உடையார் மனத்தில் பதிந்தது. நாள்தோறும் இப்படிப் பல தலைவர்கள் வந்து பேசுவதைக் கேட்டுக் கேட்டு இவருக்கும் அந்தச் சிறுவயதிலேயே சுதந்திரத் தாகம் ஏற்பட்டது.

*1930*-ஆம் ஆண்டு அப்போது எங்கு பார்த்தாலும் கள்ளுக்கடை மறியல் நடந்து கொண்டிருந்தது. ஐஸ் அவுஸ் பகுதியில் திரு எஸ். சத்தியமூர்த்தி தலைமையில் மறியல் நடந்தது. அப்போது திரு உடையாருக்கு வயது 15. மறியலின்போது, திரு எஸ். சத்தியமூர்த்தி அவர்களின் தலையில் நரகல் சட்டியை உடைக்க முயற்சித்தார்களாம். அப்போது திரு உடையாரும் மற்ற இளைஞர்களும் ஒன்று சேர்ந்து அந்தச் சட்டியை உடைக்க விடாமல் தடுத்தார்கள். இந்த மறியலின்போது, திரு சத்தியமூர்த்தி கைது செய்யப்பட்டார். திரு உடையார் உட்பட இளைஞர்களைப் போலீசார் அடித்து விரட்டி விட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியெல்லாம் திரு. உடையாருக்கு மேலும் ஊக்கமூட்டியது. உத்வேகம் தந்தது.

*1936*-இல் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்ட இவர், 1938-39ல் காங்கிரஸ் கூட்டங்கள் போடுதல், தொண்டர்களைத் திரட்டுதல் போன்ற தீவிரப் பணிகளில் இறங்கினார். அப்போது 'இந்து' பத்திரிகை உதவியாசிரியராக இருந்த, ஜி. பார்த்தசாரதி அவர்களின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது. அதன் மூலம் மேலும் இவர் தீவிரமாகப் பணியில் இறங்க முடிந்தது. 'எதையும் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்' என்பார் இவர். இவரே பிற்காலத்தில் ஐ. நா. சபைச் செயலாளராகவும் இருந்தார்.


திரு. உடையார் இரகசியமாக காங்கிரஸ் ஊழியர்களைத் திரட்டி, அதிகாலையில் கூட்டம் கூட்டிப் பேசுவாராம். பொழுது விடிவதற்குள், யார் யார் என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் போடுவார்களாம். போலீஸ் தொல்லைக்குப் பயந்தே இப்படி இரவில் கூடிப் பேசுவார்களாம்.

*1940-41*இல் தனிப்பட்ட சத்தியாக்கிரகம் நாடெங்கும் நடந்தது. மறியலில் கலந்து கொள்ள அண்ணல் காந்தியடிகள் நல்வாழ்த்து இவருக்குக் கிடைத்தது.

*1940*-இல் சென்னை மீர்சாகிப் பேட்டை, செல்வ விநாயகர் கோயிலின் முன் இவர் மறியல் செய்தார். ''காந்தியடிகள் கொள்கைப்படி நடப்போம். விடுதலையே எங்கள் இலட்சியம்'' என்று முழங்கினார். உடனே ஸ்மாலர்துரை என்னும் இன்ஸ்பெக்டர் இவரைக் கைது செய்தார். 3 மாதம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

*1941*-இல், கிருஷ்ணாம்பேட்டை துலுக்காணத்தம்மன் கோயில் முன்பு இவர் மறியல் செய்தார். 9 மாதம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. முதலில் சென்னைச் சிறைச் சாலையில் ஒரு வாரம் இருந்து, பிறகு பெல்லாரிச் சிறையிலும், அதன் பிறகு அலிப்புரம் கேம்ப் ஜெயிலிலும் தண்டனையை அனுபவித்தார். இங்குள்ள 16-வது பிளாக்கில் இவர் தலைவராக இருந்தார். அப்போது அங்கு திரு கக்கன், பழனி திரு லட்சுமிபதி ராஜூ மற்றும் பலர் இருந்தார்கள். இங்கு ஒரு நாளைக்கு 6 குவளை தண்ணீர்தான் கொடுப்பார்களாம். 4 குவளைத் தண்ணீர் குளிக்க, 2 குவளைத் தண்ணீர் சாப்பிட, அது மட்டுமல்ல, முதலில் யார்போய் நிற்கிறார்களோ அவர்களுக்குத்தான் தண்ணீர் கிடைக்குமாம்!

*1942*-இல், 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டம்



பண்டித ஜவகர்லால் நேருவுடன் திரு கே. பெருமாள் உடையார்

நாடெங்கும் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. அப்போது ஏராளமான துண்டு அறிக்கைகளும் ஆங்காங்கே விநியோகிக்கப்பட்டன. சென்னையில் இந்த அறிக்கைகளை 'தினமணி' உதவி யாசிரியர்களாக இருந்த திரு. ஏ. என். சிவராமன், திரு. என். ராமரத்தினம் ஆகியோர் தயாரித்தனர்.

துண்டு வெளியீடுகள் தயாராகி விட்டன. அவற்றை விநியோகிப்பது யார்?

திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி கோயில் தெருவிலுள்ள திரு ஆர். கணேசன் என்பவர் வீட்டில் இரவு 3 மணிக்கு எல்லாரும் கூடினார்கள். கூட்டத்தில் திருவாளர்கள் மா. பொ. சிவஞானம், என்.எஸ். வரதாச்சாரி, இன்ஜினியர் சங்கர ஐயர், தினமணி உதவியாசிரியர் கண்ணபிரான், கே. பெருமாள் உடையார் உட்பட 16 பேர் கலந்து கொண்டனர்.

துண்டு வெளியீடுகளையும், செலவுக்குப் பணம் விநியோகிப்பதற்கும், அரவங்காடு (நீலகிரி) வெடி மருந்துத் தொழிற்சாலையை அழிப்பதற்கும் இரு நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கூட்டத்தில் இதுபற்றி தீவிரமாக யோசித்தார்கள். பிறகு துண்டு வெளியீடுகளையும், பணத்தையும் விநியோகிக்க திரு கே. பெருமாள் உடையாரையும் வெடி மருந்துத் தொழிற்சாலையைத் தகர்க்க திரு என். எஸ். வரதாச்சாரியாரையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தார்கள். திரு உடையாரும் தொல்லை மிகுந்த இப்பணியைத் துணிந்து ஏற்றுக் கொண்டார். அடையாளம் தெரியாமல் இருக்க காவிச் சட்டை, நாமம் அணிந்து ஒரு நாள் இரவு கோயம்புத்தூருக்குச் சென்றார். இது எப்படியோ போலீசுக்குத் தெரிந்து விட்டது. இவரது அங்க அடையாளங்களைக் குறிப்பிட்டு பத்திரிகைகளில் விளம்பரம் தந்தார்கள். அது 'இந்து' பத்திரிகையிலும் வெளி வந்தது. இந்தச் செய்தி கண்டு இவர் தலைமறைவாகவே இருந்து செயல்பட்டார்.

கால்சட்டையின் இரண்டு பாக்கெட்டுகளிலும் அறிக்கைகளைத் திணித்துக் கொள்வார். பஸ்சில் ஜன்னல் பக்கமாக உட்கார்ந்துகொண்டு, யாருக்கும் தெரியாமல் ஒரு கத்தை அறிக்கைகளை வெளியே போட்டுவிடுவார். பஸ் போகிற வேகத்தில் அது நாலாபக்கமும் பறக்கும். மக்கள் எடுத்துப் படிப்பார்கள். அதனால் பரபரப்பு ஏற்படும்.

போலீஸ் தொடர்ந்து இவரைத் தேடியதால், இவர் தலைமறைவாகவே இருந்து வந்தார். மூதறிஞர் இராஜாஜி அவர்களின் சிபாரிசுக் கடிதத்துடன் மேட்டுப்பாளையத்தில் கலவல கண்ணையன் செட்டியார் இல்லத்தில் ஒரு நாள் தங்கினார். பிறகு காரமடை முதலான பல ஊர்களுக்கு சென்றார்.

மதுரை, தானப்ப முதலித் தெருவிலுள்ள பாரதி பிரஸ்சில் இவர் தங்கியிருந்த சமயம்—

தீச்சட்டிக் கோவிந்தன் என்னும் சப் இன்ஸ்பெக்டர்மீது திராவகம் வீசிய வழக்கில், இரு சௌராஷ்டிரப் பெண்மணிகளைக் கைது செய்து, அவர்களை மானபங்கப் படுத்திய செய்தி கேட்டு இவர் கொதித்தெழுந்தார்.

திருமலை நாயக்கர் மகால் நீதிமன்றத்தில், மாறுவேடமணிந்து நீதிபதி முன்னேபோய் நின்றார். அப்போது அங்கு மிக முக்கியமான வழக்கு ஒன்று நடந்துகொண்டிருந்தது. அந்தச் சமயம் இவர், 'வெள்ளையனே வெளியேறு!' என்று உரக்கக் கத்தினார்.

நீதிபதி மிகவும் கோபங்கொண்டு, 'இவருக்கு 24 கசையடிகள் கொடுக்கும்படி தண்டனை விதித்தார். உடனே அங்கேயே தண்டனை நிறைவேற்றப்பட்டது. கசையடி ஒவ்வொன்றுக்கும் 'வந்தே மாதரம்! 'வந்தே மாதரம்' என்று முழங்கினார். கசையடி அடித்தவர் சப் இன்ஸ்பெக்டர் நாகலிங்கம்.

பிறகு மதுரை நெ-1 போலீஸ் ஸ்டேஷனில் காவலில் வைத்தார்கள். குடிக்க நீர் கேட்டபோது சிறுநீர் கொடுத்தார்கள். பிறகு இவரை ஒரு காட்டுக்குக் கொண்டுபோய் அடித்து நிர்வாணமாக விட்டு விட்டுப் போய்விட்டார்களாம்.

அதன் பிறகும் இவரது சுதந்திர தாகம் அடங்கவில்லை. பல

போராட்டங்களில் கலந்துகொண்டார். மதுரை சிறையில் 4 நாட்கள், வேலூர் சிறையில் 8 மாதங்கள். பிறகு கண்ணனூர் சிறையில் ஓராண்டு. இங்கு ஜெயில் சூப்பிரண்டாக இருந்த ஹவ் துரை மிகவும் பொல்லாதவன். அவன் பல தொல்லைகளைக் கொடுத்தான். அங்கு போராட்ட வீரர்கள் ரகளை பண்ணியதால், தஞ்சை கேம்ப் சிறைக்கு இவர்களை மாற்றினார்கள். இங்கு திருவாளர்கள் ஆர். வெங்கட்ராமன், கக்கன், ராஜாராம் நாயுடு, ஓ. வி. அளகேசன், ஓ.பி. ராமசாமி ரெட்டியார், நிஜலிங்கப்பா, சஞ்சீவி ரெட்டி, ம.பொ. சிவஞானம் ஆகியோர் இருந்தனர்.




1942-இல் சிதம்பரத்தில் அண்ணாமலைக் கல்லூரி மாணவர்கள் மறியலில் இறங்கினார்கள். அப்போது அங்குப் படித்துக் கொண்டிருந்த வ.உ. சிதம்பரனாரின் மகன் திரு வ.உ.சி. சுப்பிரமணியமும் மறியலில் கலந்து கொண்டார். போலீசார் அவரை அடித்ததால், காலில் காயம் ஏற்பட்டது. அதன் விளைவால் இப்போதுங்கூட சிறிது ஊனம் உள்ளது.

இந்த மறியலில் பங்கு கொண்ட கே. திரவியம், மாப்பிள்ளை கோவிந்தசாமி ஆகியோர் கைது செய்யப்பட்டு, தஞ்சை கேம்ப் ஜெயிலுக்குக் கொண்டு வந்தார்கள்.

அந்தக் காலத்தில் நாடகத்தின் மூலமாகவும் விடுதலை வேட்கையை உண்டாக்கினார்கள். சூளை ஜனார்த்தனம் என்பவர் அருமையாகப் பாடுவாராம். அவர் பாட்டைக் கேட்கக் கூட்டம் பெருமளவில் கூடுமாம்.

காங்கிரஸ் கூட்டங்கள் நடக்கும்போது அவற்றில் திருமதி கே. பி. சுந்தராம்பாள், திருமதி டி. கே. பட்டம்மாள் மற்றும் பல கலைஞர்கள் கலந்து கொள்வார்கள். திரு. உடையார், கே.பி சுந்தராம்பாளைப் பார்த்து, 'அக்கா ஒரு பாட்டுப் பாடணும்' என்பாராம். அவரும் தேசியப் பாடல்களைப் பாடிக் கூட்டத்தினரை மகிழ்விப்பாராம்.

'இக்கால இளைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?' என்று திரு உடையாரைக் கேட்கிறோம். அதற்கு அவர் கூறிய பதில்—

'அண்ணல் காந்தியடிகள் தலைமையில், லட்சக்கணக்கான தொண்டர்கள் அரும்பாடுபட்டு இன்னுயிர் ஈந்து தந்த சுதந்திர நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டும். அதன் அருமை பெருமைகளை இளைஞர்கள் உணர வேண்டும். பள்ளிப் பருவத்திலேயே குழந்தைகளுக்குச் சுதந்திரப் போராட்ட வரலாற்றை உணர்த்த வேண்டும். வன்முறை நன்முறை அல்ல என்பதை உணர்ந்து, எல்லாரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒருமைப் பாட்டை வளர்க்க வேண்டும்.''

—பேட்டி பி. வி. கிரி

## யார் இந்தச் சிறுவன்?

**1921**-ஆம் ஆண்டு காந்திஜியின் தலைமையின் கீழ் ஒத்துழையாமை இயக்கம் தீவிரமாகப் பரவிக்கொண்டிருந்த காலம்.

பனாரஸ் வீதிகளில் மக்கள் கூட்டம் பீறிட்டுப் பொங்கி வழிந்தது. ''காந்தி வாழ்க!'' ''வந்தேமாதரம்'' எனக் கோஷமிட்டவாறு பெரிய ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. மக்களிடம் ஓர் எல்லையற்ற வேகம்! இரண்டாண்டுகளுக்கு முன்புதான், 1919-ஆம் ஆண்டு, ஜாலியன்வாலாபாக் படுகொலை நிகழ்ந்திருந்தது. நிராயுதபாணிகளான ஆண், பெண், குழந்தைகள் குரூரமாகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். அரசாங்கத்தின் குரூரம் தொடர்ந்தது. இந்நிகழ்ச்சிகள் மக்களைக் கொதித்தெழச் செய்தன.

இப்போது ஆயிரக்கணக்கான இதயங்களிலிருந்து பீறிடும் கோஷம் ஆகாயத்தையே துளைத்து நடு நடுங்கச் செய்தது. திடீரென்று போலீஸ் அவர்களைத் தாக்கியது. கூடவே, சிறைப்பிடித்தலும் ஆரம்பமாகியது. அந்தக் கூட்டத்தில் 13 அல்லது 14 வயது பாலகன் ஒருவன் மிகுந்த ரோசத்தோடு 'வந்தே மாதரம்' எனக் கோஷமிட்டவாறு காணப்பட்டான். போலீஸ் அவனையும் பிடித்துக் கொண்டது.


அவன் பெயர் சந்திரசேகர். ஆனால் மாஜிஸ்டிரேட்டின் முன்னால் அவன் ஆஜராக்கப்பட்டுப் பெயர் கேட்கப்பட்டபொழுது, கர்வத்தோடு தலை நிமிர்ந்து 'ஆஜாத்' (சுதந்திரம்) என்றான் பளீரென்று. பலன் சவுக்கடி தண்டனை!

அடி மீது அடி வீழ்ந்து கொண்டேயிருந்தது. ஒவ்வொரு சாட்டையடிக்குப் பிறகும் இன்னும் ஆவேசத்தோடு அவன் 'வந்தே மாதரம்' எனக் கோஷமிட்டான்; அடிவாங்கி, வாங்கி அவன் மயங்கி விழுந்து விட்டான். அந்தச் சாட்டையடிகள் உண்மையிலேயே விடுதலை உணர்ச்சியை அவனுக்கு ஊட்டிவிட்டன. அது முதல் மிகக் கடுமையான துன்பத்தைக் கண்டுகூட அவனுக்கு அச்சமேற்படவில்லை.

பின் நாளில் சந்திரசேகர ஆஜாத் எனப் புகழ் பெற்றவன், இந்தச் சிறுவனே!

நன்றி : 'சுயராஜ்யத்தின் கதை'

# விடுதலைப் போராட்டப் பாடல்கள்



உடுமலைப்பேட்டை வட்டம் கடத்தூரைச் சார்ந்த தேசியக்கவிஞர் அமரர் ஆர்.கே.பூமிபாலகதாஸ் அவர்கள் விடுதலைப் போரில் பங்கேற்று ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றவர். கோவைச் சிறையிலிருந்து 'முகில் விடுதூது' என்ற தலைப்பில் அவர் பாடிய பாடல் வருமாறு:-

முகிலே முகிலே முன்னீர் முகிலே
நீயும் நின் நேசனாம் நெடுந்திரைக்காற்றும்
தெற்குத் திக்கினை நோக்கிச் செல்வீராயின்
எம்மூர் கடத்தூர் இதம்பெறப் புக்கி
செம்மைகூர் சிற்றில் சீர் புதுமாடம்
முகடு பிரிந்து முன்றில் கதவு
இல்லா நிலையம் பந்தல் வீட்டைப்
பார்த்துள் நுழைந்து
பொன்னும் வெள்ளியும் பூணா ஒருபெண்
மன்னிய தலைக்கெண் ணெண்ணெயு மில்லாள்
வாடிய கொடியென வைகிய மங்கை
அன்னவள் எந்தன் ஆருயிர்க் காதலி
அவள்பால் என்னைக் கண்டனன் என்றும்
உத்தமர் காந்தியின் உயரிய சொற்படி
சத்தியப் போரினில் சார்த்துளேன் அதனால்
கோவையம் பதியில் கொடுஞ்சிறை தன்னில்
தாய்வயி றுற்ற சேயெனப் பந்தம்
பாவும் நீத்து ஆடையும் பாதியாய்
ஈயத்தகட்டின் ராஜ முத்ராங்கம்
ஏழாயிரத்து எழுநூற்று இருபத்து
ஏழாம் நெம்பர் கைதி யாகி
கம்பளிச் சாக்கில் கண்துயில் கொண்டும்
மூட்டுப் பூச்சியின் வாட்டுக் கிரங்கியும்
தண்டங் கீரைச் சாறொரு போதும்
தவறா உணவில் காலங் கழிப்பதாய்
மறவா அன்பில் மகிழ்ந்து கூறுதும்
அறவோன் திருவடி ஆணை பாணையே!





(நாரையைத் தூதுவிட்ட சத்தி முற்றப் புலவரின் செய்யுளை இது நினைவுறுத்துகிறது).



நெல்லை மாவட்டம், கழுகுமலை, அமரர் சிதம்பர சுவாமிக் கவிராயர் அவர்கள், இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் பாடிய பாடலை பிரசித்தி பெற்ற நாடக நடிகரும், தேச பக்தருமான எஸ். எஸ். விசுவநாததாஸ் அவர்கள் நாடக மேடையில் பாடியதால் ஆங்கில அரசினரால் இரண்டு ஆண்டு தண்டனை விதிக்கப் பெற்றுச் சிறை சென்றார். பாடல் வருமாறு :

கொடுப்பதெப்போது சொல்வீர்—சுயராஜியம் நீர் (கொடுப்ப...)
கொடுப்பதெப்போது சொல்வீர்

கடுப்பதும் கையில் வெடி எடுப்பதும்
காலில்தளை தொடுப்பதும் சிறைதந்து (கொடுப்ப...)
விடுப்பதுமாய் இருந்தால்

படிப்பதும் அன்னியர் நாட்டைப் பிடிப்பதும்
கள் சாராயம் வடிப்பதும்—மாறிமாறிக் (கொடுப்ப...)
குடிப்பதுமாய் இருந்தால்

அழிப்பதும் யந்திரங்களை/ஒழிப்பதும் பூனைக்கண்ணை
விழிப்பதும் பல்லைப் பல்லை (கொடுப்ப...)
இளிப்பதுமாய் இருந்தால்

பண்டுக்கும் சிதம்பரன்செய் தொண்டுக்கும்
எலக்ஷன் பார்லிமெண்டுக்கும் (கொடுப்ப...)
இங்கிலண்டுக்கும் இந்தியாவுக்குமாய் அலைந்தால்

புகழ்பெற்ற தேசியக் கவிஞர் அமரர் மதுரபாஸ்கர தாஸ் அவர்கள் பாடிய பாடல் வருமாறு:

சாதிமத பேதச் சண்டை
தானிப் பூமிச் சாசனமே
சம்மதித்தெல்லோரும் ஒன்று (சாதி...)
சார்ந்திடில் விமோசனமே

நீதிதெய்வம் ஒன்றே
நினைப்பீர்கள் இன்றே—நம்முன்
நேசமில்லாமலே (சாதி...)
தேசமதை இழந்தோம்

*தொகையறா*

சங்கரர் ராமானுஜர் பின் சார்ந்த புத்தர்
முகமதுவும் தரையில் தோன்றி
பொங்குமத வெறிபிடித்து அவரவர் அவ்
வழிபோக்கில் போனாரையோ
இங்கதுவும் போதாமல் ஏசுவெனும்
ஒருவர் மதம் இடையிலாச்சே
பங்கமற்ற இந்தியர் நாம்
பலபிரிவாய்ப் போனதுவும் பாவந்தானே

*பாட்டு*

காந்தி மதமே சதம் கதருடையே இதம்
காருண்ய பாஸ்கரன் சொல் கூறுமெய் பக்திப்பதம் (சாதி...)



அனுப்பி உதவியவர்
கவிஞர் கு. அ. ஆறுமுகன்

# டாக்டர் வரதராஜுலு நடத்திய 'தமிழ்நாடு'

'**கா**ற்றையும் தண்ணீரையும்
போல, தமிழ்நாட்டுக்கு இன்றி
யமையாதனவாய் இருந்த தேச
பக்தியையும், மொழிப்பக்தியை
யும் வளர்த்தது. டாக்டர் வரத
ராசலு தமிழ்நாட்டுக்குச் செய்த
இரண்டு பெரிய நன்மைகள்'
என்று டாக்டர் வரதராசுலு
விடம் பத்திரிகைத் தொழில்
பயின்ற திரு டி. என். சொக்க
லிங்கம் பாராட்டியுள்ளார். தமது
'தமிழ்நாடு' பத்திரிகைப்
பாசறையில் பண்பட்ட எழுத்
தாளர் பலரைப் பக்குவப்படுத்தி
பேனா முனைப் படைவீரர்
களாகத் தமிழகத்துக்கு அளித்த
பெருமை, டாக்டர் வரதராசுலு
வுக்கு உண்டு. எழுத்தாள
ரிடையே எழுத்தாளராய் விளங்
கியவர் அவர்.

முதலில் திருப்பூரில் தாம்
தொடங்கிய 'பிரபஞ்சமித்திரன்'
வாரப் பதிப்பிலும் சரி, பின்னர்
சேலத்தில் தொடங்கிய 'தமிழ்
நாடு' வார இதழிலும் சரி,
1927-இல் 'தமிழ்நாடு' நாளித
ழான பின்பும் சரி, அவர் பத்
திரிகை எழுத்து, மக்களிடையே
உணர்ச்சியைத் தட்டி எழுப்பப்
பலமான பிரச்சாரக் கருவியாக
அமைந்தது. அரசியல் நடப்பு
களை அவர் விமர்சித்த வகை,
சூடாகவும் சுவையாகவும் இருந்
தது.

ஒத்துழையாமை இயக்கத்
துக்கு அணை போட, மகாகனம்
ஸ்ரீனிவாச சாஸ்திரியாரை,
அன்னிய ஏகாதிபத்தியம் தந்திர
மாகப் பயன்படுத்தி வந்ததைக்
கண்டு வருந்தி, அவர் 'ஜிண்டான்
சாஸ்திரி' என்ற தலைப்பில்
எழுதிய குறிப்பில், குத்தல் மட்டு
மல்ல, கொள்கைப் பிடிப்பும்
காணப்பட்டது. வயிற்றில் ஏற்
பட்ட கோளாறு வாயில் நாற்
றத்தை உண்டாக்குவதை மாற்ற
ஜிண்டான் மாத்திரையை உட்
கொள்வதுபோல், பிரிட்டிஷ்
ஏகாதிபத்தியம் தன் வயிற்றுக்
கோளாற்றை மறைத்து, வெளிப்
பகட்டைக் காத்துக் கொள்
வதற்கு, சாஸ்திரியைப் பயன்
படுத்துகிறது என்று அவர் இடித்துக்
கூறினார்.

வேகமான விறுவிறுப்பான
தமிழ் நடைக்கு எடுத்துக் காட்
டாக அமைந்தது, 'தமிழ்நாடு'
பத்திரிகையில் டாக்டர் வரத
ராசுலுவின் எழுத்து. கருத்தைப்
பதிய வைக்கும் சுச்சிதமான
வகையில் எழுத, எழுத்தாள
ருக்குப் பயிற்சி அளித்ததில்
ஈடற்ற சேவை செய்தார் அவர்.
பதட்டமில்லாத, ஆனால், பார்
வையைக் கவரும் தலைப்புகள்;
அத்து மீறாது அழுத்தமாகக்
கருத்தை வெளியிடும் குறிப்புகள்;
நிதானம் இழக்காமல், நேர்மை
யான எண்ணங்களை எடுத்
துரைத்த கட்டுரைகள்; பண்பு
தவறாமல், பலமாகக் கொள்கை
யைப் பரப்பிய தலையங்கங்கள்;
ஆகியவை டாக்டர் வரதராசுலு
நடத்திய 'தமிழ்நாடு' பத்திரி
கையின் சிறப்பு முத்திரைகள்.

'தமிழ்நாடு' பத்திரிகையில்
அவர் எழுதிய தலையங்கங்களை
'சுதேச மித்திரன்' பத்திரிகையும் 'இந்து' பத்திரிகையும் வாரந்
தோறும் தங்கள் இதழ்களில்
வெளியிடும் அளவுக்கு, அவை
பொதுமக்களின் பேராதரவைக்
கவர்ந்திருந்தன.

மக்களின் ஆதரவை அவை
கவர்ந்த அதே நேரத்தில் ஆள்
வோரின் ஆத்திரத்தையும்
மூட்டின. 'பிரபஞ்ச மித்திரன்'
பத்திரிகைக்கு ஆயிரம் ரூபாய்
ஈடுகாணம் செலுத்த வேண்டு
மென்று அரசு ஆணையிட்டது.
தமிழ்நாடு பத்திரிகையில் வெளி
யான ஒரு கட்டுரை, அரச நிந்
தனையைப் பரப்பும் வகையில்
அமைந்திருந்தது என்று 1921-
ஆம் ஆண்டில் அரசு அவர் மீது
வழக்குத் தொடுத்தது. காந்தி
அடிகளின் கொள்கையைப் பின்
பற்றி, தாம் ஏற்காத ஓரரசு
இயக்கும் நீதி மன்றத்தில் எதிர்
வழக்காட விரும்பவில்லை என்று
நீதிபதி முன் டாக்டர் வரத
ராசலு அறிக்கை அளித்ததை
ஒட்டி, அவருக்கு ஒன்பது மாதச்
சிறைத் தண்டனை விதிக்கப்
பட்டது.

நாயுடு, முதலியார், நாயக்கர்
என்று செல்லமாக அழைக்கப்
பட்ட செம்மல்கள், வரதராசுலு
திரு வி.க., பெரியார் இராமசாமி
ஆகிய மூவரும், அக்கால கட்டத்
தில் தமிழகத்தைத் தட்டி எழுப்பி
மக்கள் சக்தியை ஈட்டி, மகத்
தான இயக்கத்தில் பூட்டி, வர
லாற்றில் நிலையான இடத்தை
நிலைநாட்டிக் கொண்டவர்கள்.

**—'தேசியம் வளர்த்த தமிழ்'**
**என்னும் நூலிலிருந்து**



# செக்கிழுத்த செம்மல்

வ.உ. சிதம்பரம் பிள்ளை, சிவா ஆகியோர்களின் வழக்கு திருநெல்வேலி மாவட்ட அடிஷனல் மாஜிஸ்திரேட் ஈ.எச். வாலேஸ் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

தீர்ப்பில் சிதம்பரனார் குற்றவாளி எனத் தீர்மானித்தனர். அவருக்கு நாற்பது ஆண்டுகள் தீவாந்தரத் தண்டனை விதிக்கப் பட்டது. அரசு நிந்தனைக்காக இருபது ஆண்டுகள், சிவாவிற்கு உடந்தையாக இருந்ததற்காக இருபது ஆண்டுகள், சிவாவிற்கு அரச நிந்தனைக்காகப் பத்தாண்டுகள் தீவாந்திரத் தண்டனை விதிக்கப்பட்டது.

நீதிபதி பின்ஹே தமது தீர்ப்பில், 'சிதம்பரம் பிள்ளை பெரிய ராஜத் துரோகி. அவரது எலும்புக்கூடுகூட ராஜ விசுவாசத்திற்கு விரோதமானது. சிவா, அவர் கையில் அகப்பட்ட ஒரு கோல். திருநெல்வேலிக் குழப்பத்திற்குக் காரணம் இவர்கள்தாம். பிள்ளையின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும். புரட்சி ஓங்கி எழும்' என்று கூறினார்.

சிதம்பரனார் கோயம்புத்தூர், கண்ணனூர் ஆகிய சிறைகளில் தமது தண்டனைக் காலத்தைக் கழித்தார்.

சிறையில் அவருக்குக் கால்களில் பெரு விலங்கு போடப்பட்டது. மெல்லிய ஆடை அணிந்தவர் முரட்டுத் துணியாலான சட்டை அணிய வேண்டியதாயிற்று. தலையிலிருந்த மயிர் எடுக்கப்பட்டது. விடுதலை நாளைக் குறிக்கும் கட்டைத்தாலி கழுத்தில்!

உடல் நலம் குன்றியிருந்தபோதும், சிறையதிகாரிகள் கடுமையான வேலை செய்யும்படி கட்டளையிட்டனர். சிதம்பரனார் மாடாகவே செக்கிழுத்தார். ஒரு நாள் களைப்புத் தாங்காமல் வெயிலில் மயக்கமடைந்து வீழ்ந்து விட்டாராம். அவர் செக்கிழுத்து வலம் வருவதாக நினைக்கவில்லை. சுதந்திர அன்னையின் திருக்கோயிலைச் சுற்றுவதாகவே அவர் எண்ணினார்.

—'நாட்டுக்குழைத்த தலைவர்'
என்னும் நூலிலிருந்து.

## ரொட்டி கேட்டால் கல்லைக் கொடுப்பதா?

1930-இல் உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்குவதற்கு முன் வைசிராய்க்கு 11 அம்சக் கோரிக்கை வைத்தார் காந்தி அண்ணல். வைசிராய் பதிலே கொடுக்காமல் அலட்சியம் செய்ததையொட்டி காந்தி அண்ணல் விடுத்த அறிக்கை :

''என்னை நீங்களே உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்க நிர்ப்பந்தப் படுத்தி விட்டீர்கள். நான் பசித்த மக்களுக்கு ரொட்டி கேட்டேன், அதற்குத் கல்லைக் கொடுப்பதா ?

''வாயால் எதையும் சொல்லி விட்டு, இருதயத்தால் அதற்குத் துரோகம் எண்ணுவதைவிட அநீதி உலகில் வேறெதுவுமில்லை

''வெள்ளையர்கள், மகாஜனங்களின் கிளர்ச்சிக்கு மட்டுமே வணங்குவார்கள். ஆகவே, வைசிராயின் அலட்சியத்தைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. நேரடியாக மக்களை அணுகுகிறேன்.''





# அன்னிபெசண்ட் அம்மையாரின் 'ஹோம் ரூல்' இயக்கம்

சொந்த நாட்டை அந்நியனிடம் இருந்து விடுவிப்பதற்காகப் போராடுவதும் தொல்லைகளை ஏற்பதும் இயற்கை. ஆனால் மற்றொரு நாட்டு விடுதலைக்காகத் தம்மவரையே எதிர்த்துப் போராட்டம் நடத்துவதும் சிறை செல்வதும் அரியதொரு செயலாகும். அந்த அற்புதத்தைச் செய்துகாட்டினார் ஒரு வீரப் பெண்மணி. இங்கிலாந்திலே பிறந்து இங்கிலாந்திலே வளர்ந்து இந்திய விடுதலைக்காகப் போராடிய அந்த வீர மாது யார் தெரியுமா? அவர்தாம் அன்னி பெசண்ட் அம்மையார்.

நாட்டை ஆளுவதற்கான ஆற்றலும் அறிவும் இந்தியருக்கு இல்லை என்பதை அன்னி பெசண்ட் மறுத்தார். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் மன்னர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். கிராமப் பஞ்சாயத்துகளுக்குத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. ஜனநாயக முறையில் அரசர்களையும் பஞ்சாயத்து உறுப்பினர்களையும் பொதுமக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பரம்பரையில் வந்தவர்களுக்கா தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளத் தெரியாது? அதை எல்லாம் அன்னிபெசண்ட் சிந்தித்துப் பார்த்தார். ஆளத்தெரியாதுஎன்று நொண்டிச் சாக்குச் சொல்லி இந்தியரை ஆங்கிலேயர் ஏமாற்றுவதை அன்னிபெசண்ட் அறிந்தார். அவரே நேரடியாக அரசியலில் குதித்தார்.

இந்தியா சுயாட்சிக்குத் தகுதி உடையது என்பதை அன்னிபெசண்ட் ஆதாரங்களோடு எடுத்துக் காட்டினார்; இந்தியாவுக்குச் சுயராட்சி வழங்குவது நியாயமான கோரிக்கை என்பதையும் விளக்கினார். அவரே ஓர் இயக்கத்தை 1915-ல் தொடங்கினார். அதன் பெயரே 'ஹோம் ரூல்' இயக்கம். இந்த இயக்கம், கற்றவர்களையும், இளைஞர்களையும் மிகவும் கவர்ந்தது. அன்னிபெசண்ட் நாட்டு மக்கள் விரும்பும் தலைவர்களில் ஒருவரானார். ஆயிரக்கணக்கானோர் 'ஹோம் ரூல்' இயக்கத்தில் சேர்ந்தார்கள்.

அன்னிபெசண்ட் காங்கிரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு அவர் ஆங்கில அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்டார்.

—நாட்டுக்கு உழைத்த நல்லவர் என்னும் நூலிலிருந்து.

# வீரன் வாஞ்சிநாதன்

திருநெல்வேலி கலெக்டராக ஆஷ் என்பவர் இருந்தார். அவர் சப்-கலெக்டராக இருந்தபோது செய்த கொடுமைகளுக்காகப் பழிவாங்கத் திட்டமிடப்பட்டது.

1911-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ஆம் தேதி ஆஷ் ரெயிலில் கொடைக்கானலுக்குச் சென்று கொண்டிருந்தார். அவருடன் பயணம் செய்த வாஞ்சிநாதன் என்ற இளைஞர் மணியாச்சி ரெயில்வே ஸ்டேஷனில் அவரைச் சுட்டுக் கொன்று விட்டார். உடனே வாஞ்சிநாதன் தன் வாயில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொண்டார். தலை சுக்கல் சுக்கலாக உடைந்து விட்டது. தம்மை ஆங்கிலேயர் அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது என்று அவர் விரும்பினார். ஆங்கிலேயர்கள் அவரை யாரென்று அடையாளம் கண்டு கொண்டால் தம் நண்பர்களுக்குத் தொல்லைகள் ஏற்படும் என்பதை அவர் அறிந்தார். ஆனால், ஒரு வழிப்போக்கர் அடையாளம் கண்டுபிடித்து விட்டார். "செங்கோட்டையைச் சேர்ந்தவர் அவர். அவர் தந்தையின் பெயர் ரகுபதி ஐயர். அவர் காட்டிலாகா அதிகாரி" என்று அவர் கூறி விட்டார்.



வாஞ்சிநாதன் சட்டைப் பையில் பல கடிதங்கள் இருந்தன. "சிதம்பரனார் கடுந் தண்டனை பெறக் காரணமாயிருந்தவர் ஆஷ் துரைதான். ஆகையால், அவரைச் சுட்டு விட்டேன்" என ஒரு கடிதத்தில் எழுதி வைத்திருந்தார். தொடர்ந்து நடைபெற வேண்டிய புரட்சி பற்றிய கடிதங்களும் இருந்தன.

வெலிங்டன் பிரபுவின் ஆணைப்படி, காந்தியடிகள் 1932-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காம் தேதி அன்று கைது செய்யப்பட்டார். ஆறாம் தேதி அன்று திருப்பூரில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. காந்தி அடிகளைக் கைது செய்ததைக் கண்டிப்பதற்காகவே அந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

பொதுக்கூட்டம் நடந்தது. அப்போது காந்தியடிகளைக் கைது செய்து சிறையில் அடைத்த செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. கூட்டத்தில் இறுதியில், பத்தாம் தேதி காலை அறப்போர் ஆரம்பமாகும் என்றும், அந்த முதல் குழுவுக்குச் சர்வாதிகாரி (தலைவர்) ஈசுவர மூர்த்தி என்றும் அறிவிக்கப்பட்டது. அறப்போர் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதற்காகப் பல தனித்தனிக் குழுக்களாகப் பிரித்திருந்தார்கள். ஒவ்வொரு குழுவிலும் சர்வாதிகாரியும் சேர்த்துப் பத்துப் பேர் இருந்தார்கள். முதல் குழுவைச் சேர்ந்தவர்கள் கைதானால் மறுநாள் இரண்டாவது குழுவினர் அறப்போரை மேற்கொள்ள வேண்டும். இரண்டாவது குழு கைதானால் மூன்றாவது குழுவும் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். அது காங்கிரஸ் கமிட்டியின் முடிவு.

திருப்பூரில் அறப்போர் தொடங்கப் போவதை அறிந்து போலீஸ்படை குவிக்கப்பட்டிருந்தது. போலீசார் தெருக்களிலும் கடைவீதிகளிலும் நடமாடிய வண்ணம் இருந்தனர். மக்கள் மனத்தில் பயத்தை ஏற்படுத்த வேண்டும். போராட்டத்தைப் 'பிசுபிசுக்கச் செய்ய வேண்டும் என்பதே போலீசின் குறிக்கோள். போலீசார் திருப்பூர்த் தெருக்களிலே அட்டகாசம் செய்து கொண்டிருந்தார்கள்.


குமாரசாமியோ மூவண்ணக் கொடி ஒன்றைத் தாங்கிக் கொண்டு முன்னால் சென்றார். மற்றவர்கள் இருவர் இருவராக இணைந்து அவர் பின்னால் சென்றார்கள்.

தொண்டர் படை கிளம்பிய போது காலை மணி எட்டரை. "மகாத்மா காந்திக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே! வந்தே மாதரம்! வந்தே மாதரம்!' என்ற முழக்கங்கள் வானைப் பிளந்தன.

எல்லோருக்கும் முன்னால் மூவண்ணக் கொடியைத் தாங்கி மிடுக்கோடு நடந்துகொண்டிருந்தார், குமாரசாமி.



போராட்டம் நடத்துவது சட்ட விரோதமானது. அதைத்தொண்டர்கள் அறியாதவர்களா? "நீங்கள் நடத்தும் போராட்டம் சட்டத்திற்குப் புறம்பானது. ஆதலால், மரியாதையாகக் கலைந்து சென்றுவிடுங்கள், இல்லை எனில் நாங்கள் சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்டுவதற்காக உங்களைத் தாக்க வேண்டி வரும்" என்று போலீசார் தொண்டர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்க வேண்டும். அதுதான் முறை; நியாயமுங்கூட. ஆனால், அன்று திருப்பூரிலே இருந்த போலீசார் நடந்து




கொண்ட முறை மிகவும் கேவலமானது.

எலியைக் கண்டால் பூனை பாய்ந்துசெல்லுமே அதைப் போல் தொண்டர்களைக் கண்டதும் அவர்கள் மீது போலீசார் பாய்ந்தனர். கண் காது தெரியாமல் மூர்க்கத்தனமாகத் தாக்கத் தொடங்கினர். அவ்விதம் திடீர்த் தாக்குதல் நடத்தினால் தொண்டர்கள் பயந்தோடி விடுவர் என்று நினைத்தார்களோ என்னவோ? அந்த அணியிலே சென்ற அத்தனை பேரும் அஞ்சா நெஞ்சம் படைத்த சிங்கங்கள். அவர்களா போலீஸ் பாய்ந்து வந்ததைப் பார்த்துப் பயந்தோடுவர்? போலீசாரின் மூர்க்கத்தனமான தாக்குதல்களை அவர்கள் பொறுமையோடு தாங்கிக் கொண்டார்கள்.

கொடியைத் தாங்கி முன்னால் சென்று கொண்டிருந்த குமாரசாமிக்குச் சரியான அடி. அங்கு இருந்த அத்தனை போலீசாரின் பார்வையும் குமாரசாமி மீதுதான் விழுந்தது. அவரை ஆளுக்கு ஒரு பக்கம் குண்டாந்தடியால் பலங்கொண்ட மட்டும் தாக்கினர். இடது காதுக்கு மேலுள்ள மண்டையில் ஒரு பலமான அடி விழுந்தது. மண்டை மாங்காய் பிளப்பதுபோல் பிளந்து விட்டது.

தொடர்ந்து அதே இடத்தில் பல அடிகள் சரமாரியாக விழுந்த வண்ணம் இருந்தன. குருதி, ஆறாகப் பெருகி வழிந்தது. அந்த நிலையிலும் அந்த மாவீரன் பயந்து ஓடவில்லை. விழுந்த அடிகள் அனைத்தையும் குன்று போல் நின்று தாங்கிக்கொண்டிருந்தார் குமாரசாமி. என்ன உறுதி! என்ன வீரம்!

அவரது கரத்திலே இருந்த தேசியக் கொடியை மண்ணில் வீழ்த்தி மிதித்துவிட வேண்டும் என்று போலீசார் நினைத்தனர். அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை. குமாரசாமியின் கரங்கள் கொடியை மிக வலிவாகப் பிடித்துக்கொண்டிருந்தன. அந்த மன உறுதியைக் கண்ட போலீசாருக்கு மேலும் மேலும் ஆத்திரம் பொங்கி வழிந்தது. அவர்கள் கைகளில் இருந்த குண்டாந்தடிகள் மீண்டும் குமாரசாமியின் மண்டையைத் தாக்கின. இந்தத் தடவை அடிகள் அனைத்தும் குமாரசாமியின் மூளையில் விழுந்தன. மூளை செயலற்றதும் மாவீரன் குமாரசாமியின் பொன்னுடல் மண்ணில் சாய்ந்தது; குருதியில் தோய்ந்தது.

அப்போதுகூட அவர் கொடியை விடவில்லை; கொடி, மண்ணில் விழாமல் உயர்த்திப் பிடித்திருந்தார். அந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை போலீசாருக்கு. அவர்கள், குமாரசாமியின் கரத்திலிருந்த கொடியைப் பிடுங்கி மண்ணில்போட்டு மிதித்துத் துவைத்தனர். கொடியை மிதித்த அந்தக்கொடியவர்கள், குற்றுயிர் குலையுயிராய்க் கிடந்த குமாரசாமியையும் மிதித்திடத் தவறவில்லை!

—'நாட்டுக்கு உழைத்த நல்லவர்' என்னும் நூலிலிருந்து.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/எஸ்எஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

# இந்திய தேசிய ராணுவம்



சுபாஷ் சந்திரபோஸ்.

ஜப்பானியர்வசம் போர்க் கைதிகளாக சிக்கியிருந்த இந்தியக் கைதிகளை வைத்துக்கொண்டு இந்திய தேசிய ராணுவத்தை அமைத்து, அதற்குத் தாமே தலைவனும் ஆனார் சுபாஷ் சந்திரபோஸ். அது முதல் அவருடைய படை வீரர்கள் அவரை 'நேதாஜி' என அழைக்க ஆரம்பித்தனர். அப்பொழுதுதான் அவர் 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை ராணுவத்துக்காக உண்டாக்கினார்.

1942-இல், ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்டி விட்டால், இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்டுவதில், ஜப்பானியர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கையை ஜப்பானின் சார்பில் ஒரு புறம் இந்திய மக்களுக்கு வானொலி மூலம் ஊட்டி வந்தார் நேதாஜி. இன்னொரு புறம் உள்நாட்டில் காந்தியடிகள் 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைத் துவக்கினார்.

1942 ஆகஸ்ட் மாதம், ஆங்கிலேயர்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் வெளிப்படையாகவே சண்டை ஆரம்பமாகியது-'செயலில் இறங்கு அல்லது செத்துமடி'

காந்தி இப்படி கட்டளையிட்டதும் இருதரப்பினரிடையேயும் தீவிரப் போராட்டம் ஆரம்பமாகியது. இந்தியா முழுவதும் பெரிய, சிறிய எல்லாக் காங்கிரஸ் தலைவர்களையும் அரசு கைது செய்து சிறையில் அடைத்தது. தலைவர்கள் இல்லாத காரணத்தால் மக்கள் ரெயில் தண்டவாளங்களையும், தந்திக் கம்பிகளையும், பாலங்களையும், தெருக்களையும் நாசம் செய்ய ஆரம்பித்தனர். ராணுவமும் போலீஸும் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கின.

ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பதிலுக்கு, மக்களும் போலீசாரில் பலரைப் பழி வாங்கினர். சில தினங்களுக்கு தேசமே தீப்பற்றி எரிவதைப் போல் இருந்தது.

நாடு முழுவதிலும் நாசமாக்கப்பட்டவைகளைப் புதுப்பிக்கவே ஆங்கிலேயர்களுக்குப் பல மாதங்கள் ஆயின.

இவ்வாறான நாசச் செயல்களுக்காகக் கைது செய்யப்பட்ட மக்களுக்குச் சிறையில் பெரும் கொடுமைகள் இழைக்கப்பட்டன. தலைமறைவாக இருந்த தலைவர்களைப் பற்றிய தகவல்களுக்காக அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். பீகார் சிறையிலிருந்து தப்பியோடி தலை மறைவாக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயணனைக் கடைசியில் கைது செய்து லாகூர் சிறையில் அடைத்து, பல மணி நேரங்கள் பனிக்கட்டியின் மீது அமர்த்தி தொடர்ந்தாற்போல் பல இரவுகள் தூங்கவிடாமல் செய்தனர்.

இரண்டு இரண்டரை ஆண்டுகளுக்கு நாடு முழுவதுமே ஒரு பெரும் சிறைக்கூடமாக மாற்றப்பட்டிருந்தது. ஆங்கிலேயப் படைகள் ஒவ்வொரு வினாடியும் துன்பங்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது.


கடைசியில், காந்தி, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மற்ற தலைவர்களும், மெள்ள மெள்ள விடுவிக்கப்பட்டனர். அவர்களின் ஒத்துழைப்பைப் பெற அரசு மீண்டும் முயற்சிகளைச் செய்யத் துவங்கியது. ஆனால், தேசத் தலைவர்கள், முழு சுதந்திரத்தைத் தவிர வேறு எந்த உடன்பாட்டையும் ஏற்கத் தயாராயில்லை.

ஆதாரம் : 'சுயராஜ்யத்தின் கதை'

## அண்ணல் காந்தியும் கதரும்

ஜவகர்லால் நேருவின் தங்கை விஜயலட்சுமிக்குத் திருமண ஏற்பாடு செய்தபொழுது, தந்தை மோதிலால் நேரு மணமகளுக்குப் பட்டுச் சேலை வாங்க ஏற்பாடு செய்திருந்தார். இதை அறிந்த அண்ணல் காந்தியடிகள் மணமகள் கதர் ஆடை தான் அணிய வேண்டும் என்று ஒரு கதர்ச் சேலையை மோதிலால் நேருவுக்கு அனுப்பி ''இது கஸ்தூரிபாய் கையினால் நூற்ற நூலில் இருந்து நெய்யப்பட்டது. இதை மணமகள் அணிந்து கொள்ள வேண்டும்'' என்று கடிதம் எழுதினார். மணமகள் விஜயலட்சுமி மணவறையில் அமர்ந்த பொழுது, அந்தக் கதர்ச் சேலையைத்தான் அணிந்திருந்தார்.

ஃலைப்பாய் இருக்குமிடம்... அதுவே
ஆரோக்கியம் இருக்குமிடம்!




லைப்பாய்
அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM

# 'தமிழ்த் தென்றல்' திரு. வி. க. நடத்திய 'தேசபக்தன்'

பாரதியாருக்கு அடுத்தபடியாகப் பத்திரிகை உலகில் புரட்சி செய்து, தீந்தமிழுடன் தேசிய உணர்வைக் கலந்து ஊட்டியவர் திரு. வி. க., 'தெய்வமிகமேல், தக்கார் நெறிநில், தேசத்தோடொத்து வாழ்' என்ற வாசகங்களை வட்டத்தில் சுற்றிவரைந்து நடுவே இந்திய நாட்டுப் படமும், சென்னை அமைந்த இடத்தில் ஒரு விண் மீனும் பொறித்த இலச்சினைச் சின்னத்தைத் தாங்கி, திரு. வி. க. வின் 'தேசபக்தன்' 7-12-1917 அன்று தோன்றியது. இரண்டரை ஆண்டுகள் தேசபக்தனின் ஆசிரிய பீடத்திலிருந்து திரு. வி. க. எழுதிய கட்டுரைகள் 'தேசபக்தாமிர்தம்' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டு, முதல் மலர் 1919-இல் வெளியிடப்பட்டது.

**விடுதலைப் போரின்போது, 'தேசபக்தன்', 'நவசக்தி' ஆகிய இதழ்களை நடத்தி உத்வேகம் ஊட்டும் கட்டுரைகளையும், தலையங்கங்களையும் எழுதியவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க அவர்கள். அவரைப் பற்றிய இந்தக் கட்டுரையில், அக்காலச் சூழல் விளக்கப்படுகிறது.**

'தேசபக்தன் சுதந்திரத்தை விரும்புகின்றான்; சுய ஆட்சி கேட்கின்றான்; இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்கும் சகோதரத்துவத்தை உண்டு பண்ணுகின்றான். 'பக்தன்' பாரத மாதாவின் அடித்தொண்டன். அவன் பாரத நாட்டில் தோன்றிய ஒவ்வொருவருக்கும் உரியவன்' என்று 7-3-1918 இதழில் எழுதிய தலையங்கத்தில், பாரத நாட்டுக்குப் பத்திரிகையை அவர் காணிக்கையாக்கினார். தேசபக்தனில் தம் எழுத்து பற்றி, 'யான் உருத்திரனானேன். என் எழுதுகோல் பாசுபதமாயிற்று' என்று திரு. வி. க. விமர்சித்தார். பஞ்சாப் படுகொலை, சத்யாக்கிரக இயக்கம், ஆகியவை நிகழ்ந்த வேளையில், 'தேசபக்தன்' நிலையம் காளி கட்டமாயிற்றென்றும், காளி வீர நடம் உமிழும் சுவாலை எரிமலை போன்று விளங்கியதென்றும் அவர் நெஞ்சம் நிமிர்ந்து கூறினார்.

'தேசபக்தன் தோன்றியிராவிடில் வகுப்புவாதம் கிளைத்து ஓங்கியிருக்கும். வகுப்பு வாதக் கட்சியின் நச்சுப்பல் தேசபக்தனால் பிடுங்கப்பட்டது. அக்கட்சியின் வேகம் ஒடுங்கியது. அது வறுத்த நெல்லாயிற்று; பல் விழுந்த பாம்பாயிற்று' என்று தேச பக்தனின் தொண்டைத் திரு.வி.க. மதிப்பிட்டார்.

'டாக்டர் சுப்ரமணிய ஐயர், சர் பட்டத்தைத் துறந்தபோது 'மயிலை முனீந்திரர்' என்ற




திரு. வி. க.வை ஆசிரியராகக் கொண்ட ''தேச பக்தன்'' (1919 [illegible] 23 இதழ்)

தலைப்பில் 21-6-1918- இல் திரு. வி. க. எழுதிய ஆசிரியர் கட்டுரையை சுப்ரமணிய ஐயர் பாராட்டினார். 'நானா எழுதினேன்? தங்கள் வீரத்தில் தோய்ந்த பக்தி அதை எழுதியது. தாங்கள், மூலம்; யான் கருவி'' என்று திரு. வி. க. பதிலிறுத்ததில், தன்னடக்கம் மட்டுமல்ல, கொள்கைக்குத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்ட தகைமை விளங்கியது.

தெய்வபக்தி, ராஜபக்தி, தேசபக்தி, மூன்றும் அவர் நோக்கில் மேலோங்கியிருந்தது. 16-8-1918-இல் அவர் எழுதிய தலையங்கத்திலும் புலனாகிறது; 'எங்கள் மன்னர் மன்னராகிய ஐந்தாம் ஜார்ஜுக்கு வெற்றி ஓங்கச் செய்து, எங்கள் பந்தத்தை அவர் வாயிலாக ஒழிக்கக் கருணை புரிவாயாக. நாங்கள் விரும்புவது சுதந்திரம்; வெறுப்பது அடிமைத்தனம். சாந்தி, சாந்தி, சாந்தி. அவனன்றி ஓரணுவும் அசையாது'' மன்னரை நம்புகிறாரே, மகேசுவரன் துணையை நாடுகிறாரே, மக்கள் சக்தியின் வல்லமையை மறந்து விட்டாரோ, என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு, அவர் எழுத்தில் பக்தியும் பழமையும் பதிந்திருந்தன.

''காந்தி அடிகள் ஆறு வருடக் காவல் பெற்றார் என்னுஞ் செய்தி எமக்கெட்டியபோது, எமது அடியிலிருந்து முடிவரை மின்சாரம் ஊடுருவிப் பாய்ந்தாலென ஒருவித நடுக்கம் உண்டாயிற்று'' என்று 24-3-1922-இல் நவசக்தியில் எழுதத் தொடங்குகிறார்''. முடிவில், ''இங்கிலாந்தே உனது அரசு கிறிஸ்து தர்மத்தை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது. உன்பெயரால் இங்கு எம்மை ஆளும் அதிகாரவர்க்கத்தார் கிறிஸ்து போன்ற காந்தியடிகளை ஓர் உலகச் சட்டத்தால் கட்டி இருக்கிறார். உனக்கு உண்மை வேண்டாமா? அன்பு வேண்டாமா? பொறுமை வேண்டாமா? - மனிதர்கள் செய்த சட்டக் கண் கொண்டு காந்தியடிகளை நோக்காதே. கிறிஸ்துவக் கண்கொண்டு நோக்கு! உண்மையும் அன்பும் பொறுமையும் புலனாகும்- சாந்தி! சாந்தி! சாந்தி!'' என்று முடிக்கிறார்.

திரு வி.க. வின் தமிழால் தேசியம் வளர்ந்தது; திரு வி.க. வின் தேசியத்தால் தமிழ் தழைத்தது.

—'தேசியம் வளர்த்த தமிழ்' என்னும் நூலிலிருந்து.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சாதனையாக விளங்குகிறது இந்திய-இலங்கை உடன்பாடு. ஏறத்தாழ நாற்பது ஆண்டுக்காலமாக முடிவு காண முடியாமல் மூண்டுவிட்ட பெருந்தீயாகி கொழுந்துவிட்டு எரிந்த இலங்கைத் தமிழர் இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வை உருவாக்கியுள்ளது இந்த உடன்பாடு.

அண்மையில் ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தால் இலங்கையின் வடக்கு கிழக்கு மாநிலங்களில் அமைதி நிலவத் தொடங்கியது. அல்லல்பட்டு தாங்கவொண்ணாக் கொடுமைக்கு ஆளாகிய இலங்கையின் பாரம்பரியத் தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றப்பட்டது.

பாரம்பரியமான இந்திய - இலங்கை நட்புறவை வலுப்படுத்துவதும், வளர்ப்பதும் அத்தியாவசியமானது என்பதையும், இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதின் அவசியத்தையும், இனப் பிரச்சினையின் உடன் விளைவான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதின் அவசியத்தையும் உணர்ந்து அனைத்து மக்களின் நலனுக்காக 29-7-'87 இந்தியா - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இதன் தொடர்பாக,

*(1—1)* இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பராமரிப்பதில் ஆர்வம் கொண்டு,

*(1—2)* இலங்கை பல இன, பல மொழி பேசும் மக்களை அதாவது சிங்களவர், தமிழர் முஸ்லீம்கள், பர்ஹர்கள் ஆகியோரைக்கொண்டது என்பதையும் ஏற்றுக்கொண்டது.

*(1—3)* ஒவ்வொரு இனமும் தனி பண்பாடு, மொழியைக்கொண்டது, அவற்றை வளர்ப்பது அவசியம் என்பதை ஏற்று.

*(1—4)* இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியமான வாழுமிடமான வடக்கு- கிழக்கு மாகாணங்கள்இருந்துவந்திருக்கின்றன. இங்கு மற்ற இனத்தவருடன் தமிழர்கள் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பதையும் அங்கீகரித்தது.

# இந்தியா-இலங்கை ஒப்பந்தம்

## (முழு விவரம்)





*(1—5)* இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை, ஆகியவற்றைப் பலப்படுத்துவதின் அவசியத்தை உணர்ந்து, இலங்கையின் பல இன, பலமொழி, மதங்கள் கொண்ட சமூகத்தின் தன்மையைப் பாதுகாப்பதில் தேவையையும் உணர்ந்து அதன் அனைத்து குடிமக்களும் உரிமைகளுடனும், மகிழ்ச்சியோடும் வாழ கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்படுகிறது.

2. *(2—1)* கீழ்க்கண்டவாறு வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாகப் பகுதியாக இணையவும், அவைகளைப் பொது மக்கள் வாக்கெடுப்பு மூலம் தனியாகப்பிரிக்கவும், அனுமதிக்க இலங்கை அரசு தீர்மானிக்கிறது.

*(2—2)* மாகாண கவுன்சிலுக்கான தேர்தல் தேதிக்கும், பொது மக்கள்வாக்கெடுப்பு தேதிக்கும்,

*(2—3)* இடைப்பட்ட காலம் இடைக்காலமாக கருதப்படும், இந்தக் காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாகப் பகுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண கவுன்சிலுடன் இயங்கும். இந்த ஒரே நிர்வாகப் பகுதிக்கு ஒரு ஆளுநர், ஒரு முதல்வர், ஓர் அமைச்சரவையும் இருக்கும்.

*(2—3)* 1988-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதியோ அதற்கு முன்னரோ பொது மக்கள் வாக்கெடுப்பு நடைபெறும். இந்த வாக்கெடுப்பு (ஏ) வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் ஒரே நிர்வாகப் பகுதியாக இணைந்து இருப்பதா? தொடர்ந்து 2-2ல் கண்டுள்ளபடி ஆளப்படுவதா அல்லது (பி) தனி நிர்வாகப் பகுதியாக தனக்கென தனி மாகாண கவுன்சில், தனி ஆளுநர், தனி முதல்வர், தனி அமைச்சரவையுடன் இயங்குவதா என்பதைத் தீர்மானிக்கும்.

இலங்கை ஜனாதிபதி அத்தகைய பொது மக்கள் வாக்கெடுப்பைத்தனது விருப்பப்படி ஒத்தி வைக்கவும் உரிமை உண்டு.

*(2—4)* இன வன்முறை அல்லது மற்ற காரணங்களுக்கான அல்லது வேறு காரணங்களுக்காகவும் இடம் பெயர்ந்தவர்களும் அத்தகைய பொது மக்கள் வாக்கெடுப்பில் வாக்களிக்க உரிமை உண்டு அவர்கள் எந்த இடத்திலிருந்து வெளியேறினார்களோ அந்த இடங்களுக்குத்திரும்பத்தேவையான சூழ்நிலைகள் உருவாக்கப்படும்.

*(2—5)* அத்தகைய பொதுமக்கள் வாக்கெடுப்பு நடைபெறும் பொழுது, இலங்கைத் தலைமை நீதிபதி தலைமையில் இலங்கை அரசால் குறிப்பிடப்பட்டு, இலங்கைஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒருவர் கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரதிநிதிகளால் குறிப்பிடப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர் இடம்பெறும் கமிட்டி அப்பொது வாக்கெடுப்பைக் கண்காணிக்கும்.

*(2—6)* பொதுமக்கள் வாக்கெடுப்பு முடிவு சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் அமையும்.

*(2—7)* பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு முன்னதாக இலங்கைச்சட்டங்கள் அனுமதிக்கும் பிரச்சார முறைகளுக்கு உரிமை உண்டு.

*(2— 8)* மாகாண கவுன்சில்களுக்கான தேர்தல் அடுத்த 3 மாதங்களுக்குள் 1987 டிசம்பர் 31-ந் தேதிக்கு முன்னதாக நடைபெறும். வடக்கு, கிழக்கு மாகாண தேர்தல்களின்போது, இந்தியப் பார்வையாளர்கள் வரவேற்கப்படுவார்கள்.

*(2—9)* 1987-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ந் தேதி வாக்கில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசர நிலை நீக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான 24 மணி நேரத்திற்குள் போர் நிறுத்தம் அமலுக்கு வரும். போராளிகள் தங்களது ஆயுதங்களை இலங்கை அரசு குறிப்பிடும் அதிகாரிகளால்ஒத்துக் கொள்ளப்பட்ட நடைமுறைப்படி ஒப்படைப்பார்கள். போர் நிறுத்தம், ஆயுத ஒப்படைப்பு ஆகியவைகளின் உடன் விளைவாக இலங்கை ராணுவமும், மற்றப் பாதுகாப்புப் படைகளும் 1987-ஆம் ஆண்டு மே மாதம் 25-ந் தேதி நிலவரப்படி முகாம்களுக்குத் திரும்புவார்கள். ஆயுத ஒப்படைப்பு, இலங்கை பாதுகாப்புப்படைகள் முகாம்களுக்குத்திரும்புவது, போர் நிறுத்தம் ஏற்பட்ட 72மணி நேரத்திற்குள் நடைபெறும்.

*(2—10)* வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சட்ட அமல் பாதுகாப்பு பராமரிப்புப் பணிகளுக்காக நாட்டில் மற்ற பகுதிகளில் உள்ளது போன்ற அமைப்புகள் பயன்படுத்தப்படும்.

(2—11) எல்லா அரசியல் கைதிகளுக்கும் பயங்கரவாத சட்டம், மற்ற அவசர நிலை சட்டங்களின் கீழ் சிறையிலுள்ள வழக்கு விசாரணையில் உள்ள அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். தேசிய வாழ்க்கை நீரோட்டத்திற்கு இளைஞர்களான போராளிகளைக் கொண்டுவர விசேஷ முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ளும். இந்த முயற்சிகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு தரும்.

(2—12) மேலே கண்ட ஷரத்துக்கள் அனைத்தையும் இலங்கை அரசு ஏற்று அமல் செய்யும், மற்றவர்களும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

(2—13) இந்தத் தீர்மானங்களுக்கான நடைமுறை ஏற்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட திட்டங்களை இலங்கை அரசு உடனடியாக அமல் செய்யும்.

(2—14) இந்தத்தீர்மானங்களுக்குஇந்திய அரசு உத்தரவாதம் அளிக்கும். இந்தத்திட்டங்களை அமல்படுத்துவதில் ஒத்துழைக்கும்.

(2—15) இந்தத்திட்டங்கள் 4-5-1986-ந் தேதிக்கும், 19-12-1986-ந் தேதிக்கும் இடைக் காலத்தில் விவாதிக்கப்பட்ட திட்டங்களுக்கு சம்மதிப்பதை நிபந்தனையாக கொண்டுள்ளன மேற்கண்ட காலத்தில் இறுதியாக்கப்படாத விவரங்கள் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் தேதியிலிருந்து ஆறுவார காலத்திற்குள் இந்திய-இலங்கை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும். மேலும் இலங்கை அரசோடு, இந்திய அரசு நேரடியாக இந்த திட்டங்களை அமல் செய்ய ஒத்துழைப்பதையும் நிபந்தனைகளாக கொண்டுள்ளன.

(2—16) மேலும் இந்த ஒப்பந்தத் திட்டங்களை இலங்கையில் செய்யப்படும் எந்த ஒரு போராளிகளின் குழுவாவது ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் இந்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் இந்தத் திட்டங்கள் நிபந்தனைகளாக கொண்டுள்ளன.

இதன்படி (ஏ) இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு இந்தியப்பகுதி பயன்படாமல் பார்த்துக் கொள்ள இந்தியா தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். (பி) இலங்கை கடற்படையுடன் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளைத் தடுக்க, இந்திய கடற்படை, கடலோரக்காவல்படை ஒத்துழைப்பு தரும். (சி) இந்தத் திட்டங்களை அமல் செய்ய ராணுவ உதவிகள் வழங்கும்படி இலங்கை அரசு கோரினால், கோரிய உதவியைக் கோரிய சமயத்தில் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்.

(டி) இலங்கையில் உள்ள இந்தியக்குடி மக்களை இந்தியாவுக்கு அழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு துரிதப்படுத்தும். உடன் விளைவாக தமிழ் நாட்டிலிருந்து தமிழ் அகதிகள் இலங்கை திரும்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஈ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் அனைத்து இனத்தவரின் உயிருக்கும் உடலுக்கும் ஊறு ஏற்படாமல் பாதுகாப்பை உறுதி செய்ய இந்திய - இலங்கை அரசுகள் ஒத்துழைக்கும்.



## இராசேந்திரப் பிரசாத்

1920ஆம் ஆண்டு முதல் விடுதலைப் போர் மிக விரைவாக வளர்ந்து வந்தது. ஆங்கிலேய அரசும் அடக்கு முறைகளைக் கையாளத் தவறவில்லை. பீகார் மாநிலத்தில் மூலைமுடுக்குகளில் எல்லாம் இராசேந்திரப்பிரசாத்திற்கு தனிப் பெருஞ் செல்வாக்கு இருந்து வந்தது.

1930ஆம் ஆண்டு உலகமே கண்டிராத உப்புச் சத்தியாகிரகத்தை காந்தியடிகள் தொடங்கியபோது இராசேந்திரப்பிரசாத் அதில் கலந்து கொண்டார். அரசாங்கம் அவருக்கு ஆறுமாதம் சிறைத்தண்டனை அளித்தது. 1932 ஆம் ஆண்டில் மீண்டும் இராசேந்திரப்பிரசாத் ஆறுமாத காலம் சிறைக்குள் அடைக்கப்பட்டார்.

மூன்றாம் முறையாக இவர் பதினைந்து திங்கள் சிறைத்தண்டனை பெற்றார்.


(2—17) இந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாண தேர்தல்களில் அனைத்து இனத்தவரும் சுதந்திரமாக முழுமையாக, நேர்மையாகப்பங்குபெறுவதை இலங்கை அரசு உறுதி செய்யும். இதன் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்திய அரசு முழு ஒத்துழைப்பு தரும்.

(2—18) இலங்கையின் அரசு அலுவல் மொழியாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலியன அமலுக்கு வரும்.

(3) இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதும் அமலுக்கு வரும்.

(இந்த ஒப்பந்தத்தின் இறுதியில் இந்தியப் பிரதமர் ராஜீவும், இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனேவும் கையெழுத்திட்டுள்ளனர்.)

# விடுதலைப் போரில் வீரத் தமிழகம்



**இந்திய நாட்டின் அடிமை இருள் நீங்க, பாஞ்சாலங்குறிச்சியில் முதல் முழக்கமிட்டான் வீரபாண்டியக் கட்டபொம்மன்; அவனிலிருந்து தொடர்ந்த கிளர்ச்சிகள், வெடித்த புரட்சிகள், தீரர்கள் செய்த தியாகங்கள் ஆகியவற்றின் காரணமாக ஒளி பெற்ற சுதந்தர ஜோதி மகாத்மா காந்தியடிகளால் ஏந்திப் பிடிக்கப்பட்டது. இந்தியத் திருநாட்டில் அந்த வரலாற்றுச் சம்பவங்களில் குறிப்பிடத்தக்க தமிழக நிகழ்ச்சிகள் சுருக்கித் தரப்படுகின்றன இந்தக் கட்டுரையில்.**

இந்திய விடுதலைக்கு நாற்பது வயதாகிறது. 'முப்பது கோடியும் வாழ்வோம்-வீழில், முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்' என்கிற தேசியக்கவி பாரதியாரின் பாடலுக்கேற்ப, தேசம் அடிமைப்பட்டபின் இந்தத் தேகம் இருந்தென்ன லாபம் என்று சுதந்திரப்போரில் ஈடுபட்டு வெற்றிகண்ட வீரர்களை இந்நாளில் நினைவு கூர்வது நமது கடன். நாடுமீள, நாள்தோறும் அவ்வீர மறவர்கள் சந்தித்த சங்கடம் மிக்க வாழ்க்கைச் சம்பவங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றவைகளாகும்.

விடுதலை நாள் விழாக்காணும் இந்நேரத்தில், இந்த விழாவுக்கு மூலாதாரமான முக்கியச் சம்பவங்களை - அதிலும் குறிப்பாக விடுதலைப் போரில் தமிழகத்தின் ஈடுபாடுகள் யாவை என்பவைகளை நினைத்துப் பார்ப்போம் கொஞ்சம்; அதனால் நிம்மதி கொள்ளும் நெஞ்சம்.

அன்னை பாரதத்தை அடிமை கொள்ள வந்த அந்நியக் கும்பினிக்கு அடிவணங்கி விடாமல், 'எங்களிடம் தீர்வைப் பணம் கட்டியே ஆகவேண்டும்' என்று அவர்கள் ஆணவத்தோடு ஆணை பிறப்பித்தபோது—

''வானம் பொழியுது பூமி
விளையுது
அந்நிய னுக்கேது தீர்வைப்
பணம்?''

என முதன் முதலாக வீர முழக்கம் எழுப்பிப் பெருமை கொண்ட மாவீரன் வீரபாண்டியக் கட்டபொம்மன்.

இந்திய நிர்வாகத்தைக் கும்பினியார் ஏற்ற நேரத்தில்- பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரராக இருந்து மறைந்த ஜகவீரபாண்டிய நாயக்கருக்கு நான்கு மனைவிகள்; முதல் மனைவியாகிய ஆறுமுகத்தம்மாளுக்குப் பிறந்த தலைமகனே வீரபாண்டியன்.

அவரது தம்பி குமாரசாமி. இவரைத் தளவாய் குமாரசாமி 'ஊமைத்துரை' என்றும் அழைப்பார்கள். மூன்றாவது தம்பியே கறுத்தையா எனக் கூறப்படும் துரைசிங்கம்.

1791-இல் முப்பதாவது வயதில் வீரபாண்டியக் கட்டபொம்மன் பட்டத்துக்கு வந்தார். அப்போது கும்பினியாரின் தளகர்த்தராயிருந்த கர்னல் மார்க்ஸ்வெல் என்பார், பாளையக்காரர்களுக்குப் பெருந் தொல்லையானார்.

கும்பினி அதிகாரிகளை மதியாதிருந்ததாலும், கிஸ்தி கட்ட மறுப்பதாலும் - இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வந்து தன்னிடம் விளக்கம் அளிக்கும்படி கட்டபொம்முவுக்கு கலெக்டர் ஜாக்சன் துரை, 1798 ஆகஸ்ட் 18-ல் ஒரு கடிதம் அனுப்பினார்.

கலெக்டர் பேட்டி முடிந்ததும் வெளியே செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் போரிட்டு மீண்டான் கட்டபொம்மு. கலெக்டர் அலுவலகம் இரத்தக் களரியாகியது. இதனால் கலக்கமடைந்த கும்பினியார் கலெக்டரை நீக்கிவிட்டு லூஷிங்டன் என்பவரைப் புதிதாக நியமித்தார்கள். அவரால் இன்னும் பிரச்னைகள் அதிகமாகவே, 1799இல் மேஜர் பானர்மென் தலைமையில், கட்டபொம்மனை அடக்க ஒரு பெரும் படையே அமைக்கப்பட்டது. அப்படையினர் செப்டம்பர் 4ஆம் தேதி திரண்டு சென்று, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இரவோடு இரவாகத் தாக்கலாயினர். அவர்கள் கனவு பலிக்கவில்லை; மறுநாள் காலையில் கட்டபொம்மன் தம்மிடம் வந்து சரணடைய வேண்டும் என்று செய்தியனுப்பப்பட்டது.

'பிறர்க்கு அடிமைப்பட நம் மனம் சம்மதிக்காது' என்ற வகையில் - அதற்கு இணங்காத கட்டபொம்மன், தனக்கு மிக நெருக்கமான சிலரோடு அங்கிருந்து நப்பிவிட்டார். அவரை உயிருடனோ பிணமாகவோ பிடித்துத் தருபவர்களுக்கு இரண்டாயிரம் சக்கரம் பரிசு வழங்கப்படுமெனக் கும்பெனியாரால் அறிவிக்கப்பட்டது. மாவட்டமெங்கும் தேடுதல் தொடங்கியது.

கட்டபொம்மனும் மற்றவர்களும், சிவகங்கைச் சீமையைச் சேர்ந்த ஆனியூர் என்ற இடத்தை அடைந்தனர். இதை அறிந்த கும்பினியார், புதுக்கோட்டைத் தொண்டைமான் உதவியோடு கலியபுரத்தில் மடக்கிப் பிடித்துவிட்டனர்.

விடுதலை வேள்வியில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்தி, களம் பல கண்டும் களச்சாவைக் காணாத நிலையில், 1799 அக்டோபர் 16-ஆம் நாளன்று கொடிய கும்பினியாரால் மாவீரன் கட்டபொம்மன் தூக்கிலிடப் பட்டார். மீதமிருந்த பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டனர். 1801 அக்டோபர் 16-ல் ஊமைத்துரை தலைமையில் தப்பிச் சென்ற அவர்கள், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இரவோடு இரவாக உறுதிமிக்கதாகக் கட்டி முடித்தனர்.

அப்போது திருநெல்வேலிச் சீமையின் சேனாபதியாக இருந்த மேஜர் மெக்காலே துரை, பெருஞ்சேனையோடு அங்கே படையெடுத்துச் சென்றான். விட்டுவிட்டு ஐந்தாறு மாத காலம் நடந்தது இந்தப் போர். கடைசியாக மே மாதம் 24-ஆம் தேதி, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை கும்பினியரால் கைப்பற்றப்பட்டது.

ஆனால், சுதந்திர நெருப்பைச் சுடர்வீசச் செய்த விடுதலை விரும்பியான வீரன் ஊமைத்துரை, அவர்களிடமிருந்து தப்பி, சிவகங்கை போய்ச் சேர்ந்தான்.

மன்னர் முத்துவடுகர் மறைவுக்குப் பின்னால், அவர் துணைவியார் வீரப்பெண்மணி வேலு நாச்சியாரிடமிருந்த சிவகங்கைச் சீமை, வீரதீரமிக்க தளகர்த்தர்களாக விளங்கிய பெரிய மருது சின்னமருதுவால் ஆளப்பட்டு வந்தது. அப்போது. கும்பினி ஆட்சி மீது நம்பிக்கை அற்றிருந்த அவர்கள், ஊமைத் துரையைஅன்போடு வரவேற்று ஆங்கிலப் பகைக்கும் அஞ்சாமல் ஆதரவளித்தார்கள்.

இதனால் வெகுண்டெழுந்த கும்பினிப்படையினர் சிவகங்கைச் சீமை மீது போர் தொடுத்தார்கள். இரத்த ஆறு பெருக்கெடுத்தது. ஆயுத பலமும் ஆள் பலமும் கொண்டிருந்ததால், எளிதில் வென்று சிவகங்கைச் சீமையை மட்டுமல்ல; வீரன் ஊமைத்துரையையும் பிடித்து விட்டார்கள் அந்தக் கொடியவர்கள்.

அந்தப் போரில் அவர்களிடமிருந்து தப்பிவிட்டாலும், அடுத்த பத்து நாட்களுக்குள் பெரிய மருதுவும், சின்னமருதுவும் வஞ்சனையால் வளைத்துப் பிடிக்கப் பட்டார்கள் கும்பினியாரால்.

குலையநல்லூருக்கு வடக்கில் உள்ள பரம்புக்குத் தென் சரகில்,



கயத்தாற்றிலிருந்து ஒட்டப்பிடாரத்திற்குச் செல்லும் வழியில் ஊமைத்துரை தூக்கிலிடப்பட்டான்.

1801-ஆம் ஆண்டு அக்டோபர் 10-ஆம் தேதி, பெரிய மருதுவும் சின்னமருதுவும் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர்.

சுதந்திர வேட்கை கொண்டோரைப் பொது இடத்தில் இப்படித் தூக்கில் போடுவதன் மூலம் - அந்த உணர்வுள்ள மற்றவர்களும் இது கண்டு அஞ்சி அடங்கிப் போவார்கள் என்பது கோணல்புத்தி கும்பினியாரின் நம்பிக்கை. ஆனால் அந்த எழுச்சிக் கனல், சுதந்திர தாகம் அவர்கள் எதிர்பார்த்ததுபோல அடியோடு அடங்கி விட்டதா என்றால் அதுதான் இல்லை! மாறாக-நெய்விடப்பட்ட விளக்குப் போல, மேலும் சுடர்விடலாயிற்று. தமிழ்நாட்டு வீர மண்ணின் வேகத் தீ, அவர்களை எங்கும் எதிலும் தலை தூக்க விடாமல் சுட்டெரிப்பதாயிற்று!

இந்தக் காலகட்டத்தில் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்' என்றெழுந்து, அன்னை மண் அடிமைப்படுகிறதே என்று கண்ணீர் சிந்தி, அதை மீட்கப் போரிட்டுச் செந்நீர் சிந்திய இணையற்ற வீரன் புலித்தேவனையும் நாம் மறந்து விடமுடியாது.

பின்னர், இந்தியாவில் உருவான வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வேரறுக்க ஆங்காங்கே கனன்ற தீ பெரிதாக மூண்டது 1806-ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர் புரட்சியிலேதான்! அன்றைக்கு அணை கடந்த மக்கள் எழுச்சியே 1857-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய சிப்பாய்ப் புரட்சியின் முதல் வித்தாகவும் விளங்கியது.

தமிழ்நாட்டு மக்களின் சுதந்திர ஆவேசம் பிரிட்டிஷ் படையிலிருந்த எண்ணிலாத் தமிழர்களின் இதயத்தில் பொங்கிப் பிரவகித்த நிகழ்ச்சிதான் வேலூர்ப் புரட்சி.

பாண்டி மண்டலத்தில், வீரபாண்டியக் கட்டபொம்மனால் தொடங்கி வைக்கப்பட்ட பாளையக்காரர்களின் விடுதலைப் போர், 1801-இல் பெரிய மருதுவும் சின்ன மருதுவும் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டதோடு முடிவுற்றது. அதற்குப் பின்னால் அடிமை வாழ்வு வாழ்ந்த ஆர்க்காட்டு நவாபின் கடைசி மன்னனான உமதுத் - உல் - உமரா மாண்டு போனார். அவனுக்குப் பின்னாலே அவர்கள் கதை முடிந்து - பிரிட்டிஷார் ஆட்சி தொடர்கதை ஆயிற்று.

அந்த நேரத்திலேதான் கர்நாடகம் முழுவதையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தது கும்பினி ஆட்சி. வட இந்தியாவில் இருந்த பாளையக்காரர்களும் அவர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பலம்மிக்க வைரியாகத் திகழ்ந்த ஐதர் அலி 1782இல் இறந்துபோன பின், அவனுடைய வீரமகன் திப்பு, அரியணை ஏறினான். பிரெஞ்சுக்காரர்களோடும், மாவீரன் நெப்போலியனோடும் தோழமை கொண்டிருந்த அவன், வெள்ளையராட்சியின் வேரறுக்க எண்ணி 1799இல் சீரங்கப் பட்டணத்தில் பெரும்போர் தொடுத்தான். ஆனால் அவன் எண்ணம் ஈடேறவில்லை. தலையில் குண்டடிபட்ட திப்பு மாண்டு போனான். அவ்வீரனின் புதல்வர்களும் குடும்பத்தாரும் கும்பினியரால் வேலூர்க் கோட்டையிலே சிறை வைக்கப்பட்டார்கள்.

1806 ஜூலை 9-ஆம் நாள் திப்புவின் மகளுக்குத்திருமணம். முன்கூட்டியே திட்டமிட்டிருந்தபடி பல்லாயிரவர் ஆயுதபாணிகளாகவே திருமணத்திற்கு வந்திருந்தார்கள். மறுநாள், 10-ஆம் தேதி அதிகாலையில் வேலூர்க் கோட்டைக்குள்ளே இராணுவப் புரட்சி வெடித்தது. இந்தியச் சிப்பாய்களால், கோட்டைக்குள்ளிருந்த தளவாட அறையும் கைப்பற்றப்பட்டது. முக்கிய இடங்களெல்லாம் புரட்சியாளர்கள் வசமாயின. 372 பேர் இருந்த வெள்ளைப் படைப்பிரிவில் 199

பேர் படுகொலை செய்யப்பட்ட னர்.

வேலூர்ப் புரட்சியில் முக்கிய மானவனாய்க் குறிப்பிடப்படும் நம் இந்திய வீரன், ஜமேதார் ஷேக் காசிம் என்பவனாவான்.

வெள்ளைப் பட்டாளத்தின் மூலம் இந்தச் செய்தி உடனே, ஆர்க்காட்டிலிருந்த கர்னல் கில்ப்ஸிக்குத் தெரிவிக்கப்பட்டது. பெரும்படையோடும் பீரங்கி யோடும் வந்த அவன், வேலூர்க் கோட்டைக்குள்ளே ஆடிய வெறி யாட்டம் - போதுமான ஆயுத மற்ற காரணத்தாலும், தக் கோர் தலைமை தாங்கி வழி நடத்த இல்லாமையாலும் - இர வெல்லாம் விழித்திருந்து ஐந்து மணி நேரமாகக் களத்தில் நின்ற களைப்பாலும், ஒரு வீரனின் நிதானம் கெட்ட உளறலாலும் இந்தியச் சிப்பாய்களைப் பிணக் காடாக்கியது. அந்த பூகம்பப் புரட்சி, கொடிய அடக்குமுறை ஆட்டத்தால் நசுக்கப்பட்டது. கோட்டை மீண்டும் அவர்கள் வசமாயிற்று.

விடுதலை பெற்ற இந்தியநாடு வேலூர்ப் புரட்சிகண்ட இணை யற்ற அந்த இந்தியச் சிப்பாய் களை என்றும் மறவாது. ஏனென் றால் இந்திய விடுதலைப்போ ருக்கு, நீண்ட இடைவெளிக்குப் பின்னாலே பிள்ளையார் சுழி போட்ட பெருமையாளர்கள் அவர்கள்.

தேசிய இயக்கம் தமிழ்நாட் டில் அதன்பின் விரைந்து பரவிய விதமும், இங்கே நாம் எண்ணி இறும்பூது எய்தத் தக்க ஒன்றா கும்.

சென்னை சுதேசிகள் சங்கம், சென்னை இந்து விவாதமன்றம் போன்ற பெயரால் உருவான தேசிய இயக்கங்களையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். கிழக் கிந்தியக் கம்பெனியின் சாச னத்தைப் புதுப்பிப்பது பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்ட் பரி சீலித்த 1852-ல், மக்கள் குறைகள் பற்றி விவரிக்கும் மனு ஒன்று அச் சங்கத்தாரால் பார்லிமெண் டுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் குறைகளுக்குப் பரிகாரம் காண 'ராயல் கமிஷன்' ஒன்றை அமைக்கும்படியும், பிரிட்டிஷ் ராணியே நேரடியாக ஆட்சிபுரிய வேண்டும் என்றும், அரசாங்கம் மக்களுக்குச் சட்டபூர்வமாகப் பொறுப்பு வாய்ந்ததாக ஆக்கப் பட வேண்டும் என்றும் கோரப் பட்டிருந்த அந்த மனு, சாசனச் சட்டம் நிறைவேற்றப்பட்ட 1855-லும் வலியுறுத்தப்பட்டது.

1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம், அரசியல் இராணுவப் புரட்சிகளைப் பரவலாக ஏற் படுத்தியது. நம் தமிழ் நாட்டார் பலாத்காரத்தில் பற்றில்லாத வர்கள் ஆகையால் தமிழகத்தில் அதன் பிரதிபலிப்பு எதுவு மில்லை. சமாதானமான சட்ட பூர்வ முறைகள் மூலமே நம் அரசியல் சீர்திருத்தங்களைக் காண முயன்றார்கள்.

ஆனாலும், இங்கும் இராணுவப் புரட்சி ஏற்படுமோ என்றஅச்சம் ஆட்சியாளர்களுக்கிருந்தது. எனவே, 1857-ஆம் ஆண்டில் 14-வது சட்ட விதிகள் அமல்படுத் தப்பட்டன. அரசுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க எல்லா மாவட்டங்களிலும் செஷன்ஸ் நீதிபதிகளுக்கு அதிகாரம் தரப் பட்டது.

வடக்கே நடைபெற்றஇராணுவ பலாத்கார சம்பவங்களுக்குத் தமிழக மக்கள் கண்டனம் தெரி வித்தார்கள். பாதிக்கப்பட்ட அங்குள்ள மக்களுக்குத் தாமாகவே நன்கொடைகள் அனுப்பினார்கள்.

சுயாட்சி வேண்டும் என்பதை மறவாதிருந்தாலும் - கிழக்கிந்தி யக் கம்பெனி ஆட்சிக்கு முடிவு கட்டி, இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை விக்டோரியா மகாராணியே ஏற்றதைப் பாராட்டினார்கள் அன்றிருந் தோர்.

மன்றோவுக்குப் பிறகு சென்னைக் கவர்னராக இருந்த டிரவல்யன், திரும்ப அழைக்கப் பட்டபோது - ஏழாயிரத்துக்கு மேலான தமிழர்கள் கையொப்ப மிட்டு அவருக்கோர் வாழ்த்திதழ் பெருந்தன்மையோடு அளித்தார் கள். அதில், முக்கியமாக சுயாட்சிக் கோரிக்கை வலியுறுத் தப்பட்டிருந்தது.

அதன்பின் அவர்களால் இயற் றப்பட்ட சட்டங்கள் நகராட்சி களையும், உள்ளூர் ஆட்சி மன் றங்களையும் தோற்றுவித்தனவே தவிர, பொறுப்பாட்சி பற்றி எதுவுமே பேசப்படவில்லை.



1855-ல் இந்திய தேசிய காங் கிரஸ் இயக்கம் துவக்கப்பட்டது. அதற்குப் பிறகு சுயாட்சிக் கிளர்ச்சி சூடுபிடித்தது. சென்னை யிலும் மாவட்டங்களிலும், தேசிய வாதிகளை ஊக்குவிக்கும் வகை யில் ஆங்கிலத்திலும் இந்திய மொழிகளிலும் சில பத்திரிகைகள் வெளியிடப்பட்டன.

உப்பு வரி, வருமான வரி போன்றவை அந்த ஏடுகளில் வன் மையாகக் கண்டிக்கப்பட்டன. கவர்னர் மற்றும் அதிகாரிகளின் போக்கு எதிர்த்து எழுதப்பட் டது. சுயாட்சியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

1887-ல் சென்னையில், இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மகாசபைக் கூட்டம் நடைபெற் றது. அகில இந்தியத் தலைவ ரான திரு பக்ருதீன் தயாப்ஜி தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் - டி. மாதவராவ், எஸ். சுப்பிரமணியஐயர், ரங்கைய நாயுடு, ஜி. சுப்பிரமணிய ஐயர், சபாபதி முதலியார், எஸ். ஏ. சுவாமிநாத ஐயர், பி. சோம சுந்தரம் செட்டியார். சி. விஜய ராகவாச்சாரியார். எர்ட்லே நார்ட்டன், எ. ஓ. ஹ்யூம், போன்ற சிலர், அக்கூட்டத்தில் பங்கேற்றவர்களில் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

பல்வேறு கோரிக்கைகள் வலி யுறுத்தப்பட்ட அக்கூட்டத்தில், தேசியப் பிரச்சாரத்திற்கென ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டது. இதன் காரணமாகத் தமிழக மெங்கும் விறுவிறுப்பான விடு தலைவேட்கைச் சொற் பொழிவுகள் நடத்தப்பட்டன. 'சென்னை மகாஜன சபை' போன்ற அமைப்புகளும் இப் பணியில் வேகம் காட்டின. 'ஹிந்து' 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிகைகள், அரசின் அன்றாட நடவடிக்கைகளைக் கண்டித்து எழுதலாயின.

மாவட்டங்களிலெல் லாம் ஆண்டுதோறும் மாநாடுகள் தொடர்ந்தன. பி.எஸ். சிவசாமி ஐயர், ஜி. சுப்பிரமணிய ஐயர், வி.பி. மாதவராவ் போன்றோர் அவற்றிற்குத் தலைமை தாங்கி னார்கள். அந்த மாநாடுகள், பிராமணர்கள், பிராமணரல்லா தார், முஸ்லீம்கள் போன்ற பல தரப்பு மக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டன. இவ்வாறான மாநாடுகள் சிலவற்றில் பிரச் சாரம் அமைதியாக நடக்கும்; சிலவற்றில் சூடு பறக்கும்.

1908-ல் தஞ்சை மாவட்டத்தில், ஜி. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடந்த மாநாடு குறிப்பிடத்தக்கதாகும். அவர் தமது உரையில் - பிரிட்டிஷ் அரசின் ஏதேச்சாதிகாரப் போக்கையும், அடக்கு முறைகளையும் அவசரச் சட்டங்களையும் கண்டித்தார். சூரத் காங்கிரசில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட மோதலைக் குறிப்பிட்டு, சுயாட்சி பெறுவதற்கு நமக்குள் ஒற்றுமை முக்கியம் என்று வலியுறுத்தினார். சுதேசி, அந்நியப் பொருள் பகிஷ்காரம், தேசியக் கல்வி, சுயராஜ்யம் ஆகியவற்றை அடைய எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும் என்று கேட்டு கொண்டார்.

மாநாட்டுத் தீர்மானங்களெல்லாம், அவ்வப்போது அரசுக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஆனால் அவற்றின் பிரதிபலிப்புகள் தெரியாமலிருந்தன.

இவ்வாறான மாநாடுகளாலும் பத்திரிகைச் செய்திகளாலும் தமிழகமெங்கும் சுதந்திரச் சுடர் கொளுத்தப்பட்டது.

இதே கால கட்டத்தில்தான்...

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷ்துரை, வாஞ்சிநாதனால் மணியாச்சி ரயில்நிலையத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வ.உ. சிதம்பரம் பிள்ளையின் முயற்சியால், சில தேசியவாதிகள் ஒன்றுகூடி 'இந்தியன் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' துவக்கினார்கள்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இங்கிருந்து புதுவைக்குத் தப்பிச் சென்று - அங்கிருந்து தேசிய கீதங்கள் இயற்றி, அவற்றின் மூலம் தீவிரமாக சுதந்திரப் பிரச்சாரம் மேற்கொண்டார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், வ.வே.சு. ஐயர், சுத்தானந்த பாரதி ஆகியோர் அவருக்குத் துணை நின்றார்கள்.

சுப்பிரமணிய சிவா, மேடைக்கு மேடை ஆணித்தரமான விவாதங்களை ஆவேசமாக நடத்தலானார்.

1915-ல் திருமதி அன்னி பெசண்ட் அம்மையார், சுதந்திரத்திற்காக அக்கினிவேகக் கிளர்ச்சியைத் (Red-hotagitation) துவக்கம் செய்தார். தன்னுடைய பத்திரிகையான 'நியூ இந்தியா' வில் ஹோம் ரூல் கோரிக்கை பற்றிய சிறந்த கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினார். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியப் பிரதிநிதிகளே இந்தியாவை ஆளவேண்டும்; சுதேசி, அந்நியச் சரக்குகள் பகிஷ்காரம் தேசியக் கல்வி, தொழிலாளர் நலம், போன்றவைகளோடு - சுதந்திரம் பெறுவதான காங்கிரஸ் இலட்சியங்களும் அவர் நிறுவிய ஹோம்ரூல் லீக் மூலம் பரப்பப்பட்டது. கிளர்ச்சியும் நடத்தப்பட்டது. கவர்னரே முயன்றும் அவரது வேகத்தைத் தணிக்க முடியவில்லை.

மாணவர்களே நம்பிக்கைச் சின்னம் எனக் கருதிய திருமதி அன்னிபெசண்ட் அம்மையார், தனது செயலாளரான ஜி.என். அருண்டேல் பேருதவியோடு மாணாக்கரிடையேயும் தம் இயக்கத்திற்கு ஆதரவு திரட்டினார். தாம் தலைமையேற்றிருந்த பிரம்ம ஞான சபையையும் ஓர் அரசியல் நிறுவனமாக்கினார்.



அவர் ஏற்பாடு செய்த கூட்டங்களும், வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களும் உண்டாக்கிய எழுச்சி காரணமாக, மாணவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இதன் காரணமாகத் திருமதி பெசண்ட்டும், அருண்டேல், வாடியா ஆகியோரும், 1917 ஜூனில் நீலகிரியில் கைது செய்யப்பட்டார்கள். எனினும் இயக்கத்தின் வேகம் குறையவில்லை.

உதகையிலே திருமதிபெசண்ட் அம்மையார் வாழ்ந்த இல்லமான 'ஆல்காட் லாட்ஜ்' - எஸ். சுப்பிரமணிய ஐயர், சி.பி. இராமசாமி ஐயர், டாக்டர் பட்டாபி சீதாராமையா போன்ற அரசியல் அறிஞர்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் இடமாயிற்று. அங்கே அவர்களால் அரசியல் பிரச்னைகள் விவாதித்து முடிவெடுக்கப்பட்டன.

ஹோம் ரூல் இயக்கம் விரைவிலேயே ஒத்துழையாமை இயக்கம், கிலாபாத் இயக்கம் ஆகியவற்றோடு இணைந்தது. இவை யாவும் இந்திய தேசிய காங்கிரசோடு ஐக்கியமானபின் இந்தியாவில் பெரும் அரசியல் புயலே வீசலாயிற்று என்றே கூறலாம்.

தென்னாப்பிரிக்காவில் இந்திய மக்கள் நல்வாழ்வு காண சாத்வீகப் போராட்டம் நடத்தி வெற்றிகண்டு, 1915-ல் மகாத்மா காந்தியடிகள் இந்தியா திரும்பினார். அவரது வருகையால் சுதந்திர இயக்கம் முழு பலமும் பெற்றதாயிற்று.

1920 ஆகஸ்ட்டில், காந்தியார் தென்னாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். முகமதலி ஜின்னா, சவுகத் அலி போன்ற முஸ்லீம் தலைவர்களும் அவர்களோடு தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். சென்னை நகரிலும், மாவட்டங்களிலும் நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் பங்கேற்ற அவர்கள், சுதந்திரக் கொள்கையின் அவசியத்தை வலியுறுத்திச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இவ்வியக்கம் இன்னும் வலிமைபெற 1921-ல் மீண்டும் இரண்டு முறை காந்தியார் சென்னைக்குவந்தார்.

தமிழகமெங்கும் அன்றைய ஆட்சிக்கு எதிர்ப்புக் கிளம்பியது. அந்நிய ஆட்சிக்கிருந்த மதிப்புக்கு உலைவைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் அவ்வாறான எதிர்ப்பு உணர்ச்சிக்கு முக்கியத் தூண்டுகோலாக இருந்தவர்கள்- வ.உ. சிதம்பரம் பிள்ளை, கஸ்தூரி ரங்க ஐயங்கார், பெரியார் ஈ.வெ. ராமசாமி, சீனிவாச ஐயங்கார், சி. விஜயராகவாச்சாரியர், எஸ். சத்தியமூர்த்தி, திரு. வி. கல்யாணசுந்தரனார், சிங்காரவேலர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, யாகூப்ஹாசன் சி. ராஜகோபாலச்சாரியர் ஆகியோராவர்.

'ஹிந்து' 'மகமடன்' 'தேசபக்தன்' 'தமிழ்நாடு' 'சுதேசமித்திரன்' 'குடியரசு'. 'தினமணி' போன்றிருந்த பத்திரிகைகளின் மூலம் நடந்த தேசியப் பிரச்சாரங்களையும் இங்கே நாம் குறிப்பிட்டேயாக வேண்டும்.

1909-ஆம் ஆண்டில், மக்களிடையே ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சி காரணமாக மார்லே-மின்டோ சீர்திருத்தம் மூலம் சென்னை சட்டசபைக் கவுன்சில் விரிவாக்கப்பட்டது. 1919-ல் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் வந்தது.

கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில், அதாவது 1916-ஆம் ஆண்டு இறுதியில் தமிழகத்தில் 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' அல்லது 'நீதிக்கட்சி' என்ற புதியதோர் கட்சி தோன்றியது. பிராமணரல்லாதார் கட்சி எனப்பட்ட அதன் போக்கு தேசிய விரோதமானதல்ல; ஆனால், காங்கிரசைக் காட்டிலும் அது மிதவாதக் கட்சியாக இருந்தது. அவ்வளவே!

சர். பி. தியாகராய செட்டியார், டாக்டர் டி.எம். நாயர் இருவரும் அக்கட்சியின் ஆணிவேராக விளங்கினார்கள். நீதிக் கட்சியின் சார்பில் 'ஜஸ்டிஸ்' என்ற பத்திரிகை நடத்தப்பட்டது. நாளடைவில் அப் பத்திரிகையின் பெயராலேயே அந்தக் கட்சியும் குறிப்பிடப்பட்டது.


1929-ல் லாகூர் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின் முடிவுப்படி சாத்வீக சட்டமறுப்பு இயக்கம் வந்தது. அதன்படி தஞ்சையில் வரிகொடா இயக்கம் ஆரம்பமாயிற்று. இதன் வேகம் தமிழகம் முழுவதும் பரவியது. பிரிட்டிஷ் அரசாங்கம் இதன் மூலமே முதன் முதலாகத் தேசிய இயக்கத்தின் வேகத்தை உணர்ந்தது.

அந்த நேரத்தில் இவ்வியக்கத்தின் முக்கிய அம்சங்களாக உப்பு சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல், தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆகியவை இருந்தன.

சாத்வீக சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆதரவாகத் தமிழ் நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட மிகப்பெரிய கிளர்ச்சி, சி. ராஜகோபாலச்சாரியார் தலைமையில் நடத்தப்பட்ட உப்புச் சத்தியாக்கிரகம் ஆகும். காந்தியடிகளுடன் மிக நெருக்கமான நட்பினராயிருந்த அவர் தலைமையில், திருச்சியிலிருந்து உப்புச்சத்தியாக்கிரகப்போராட்ட வீரர்கள், யாத்திரை தொடங்கினர். 1930 மார்ச் 30-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமான வேதாரண்யம் கடற்கரையில் உப்பு எடுக்க முற்பட்டபோது சி. ராஜகோபாலாச்சாரியாரும், கே. சந்தானம், சர்தார் வேதரத்தினம் பிள்ளை, கு. காமராசர், திருமதி லட்சுமிபதி, டாக்டர் டி.எஸ். எஸ். ராஜன் உள்ளிட்ட பல்லாயிரவர்களும் கொடுமையான அடக்குமுறைக்கு ஆளாகிக் கைது செய்யப்பட்டார்கள்.

இந்த மக்கள் எழுச்சி அரசைக் கலங்க வைத்தது. காங்கிரஸ் கட்சி சார்பில் காந்தியாருக்கும், பிரிட்டிஷ் அரசின் சார்பில் வைஸ்ராய் லார்டு இர்வினுக்கும் இடையில் 1931 மார்ச்சில் நடைபெற்ற ஓர் ஒப்பந்தப்படி, தீவிரமான அந்த இயக்கத்தை நிறுத்திவிடவும், இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேஜை கூட்டத்தில் கலந்து கொள்ளவும் காங்கிரஸ் இசைந்தது.

அந்த உடன்பாடு சரிப்படாத நிலையில் 1932 ஜனவரியில், சட்டமறுப்பு இயக்கம் மீண்டும் தீவிரமாகியது. 1934-இல் காந்தியார் சென்னைக்கும் பிற மாவட்டங்களுக்கும் வந்து பிரச்சாரம் செய்து, சென்றார். அதுவரையில் அவ்வியக்கம் தொடர்ந்து நடந்தது.



1926 பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி, சுயராஜ்யக் கட்சியால் தோற்கடிக்கப்பட்டது. சட்டமன்ற நுழைவில் நம்பிக்கை கொண்ட காங்கிரஸ் வாதிகளின் பிரிவே சுயராஜ்யக்கட்சி. மெஜாரிட்டி பெற்றும்கூட அக்கட்சி அமைச்சரவை அமைக்க மறுத்துவிட்டதால் டாக்டர் சுப்பராயன் தலைமையில், அந்தக் கட்சி ஆதரவுள்ள ஓர் சுயேச்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது.

இதை எதிர்த்த நீதிக்கட்சியினர் 1927 ஜூலையில் பிராமணரல்லாதார் மாநாடு ஒன்றை நடத்தினார்கள். பனகல்ராஜா, ஏ.பி. பாத்ரோ, ஆர்.கே. சண்முகம் செட்டியார், ஏ. இராமசாமி முதலியார், ஓ. தணிகாசலம் செட்டியார், எஸ். குமாரசாமி ரெட்டியார் போன்ற பலரும் அதில் கலந்து கொண்டார்கள். இம் மாநாட்டையடுத்து நீதிக்கட்சி உறுப்பினர் பலரும் வெறுப்புற்றுக் காங்கிரசில் சேர்ந்தார்கள்.

1930 பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் சுயராஜ்யக் கட்சியும் பொதுத்தேர்தலில் போட்டியிட மறுத்தன. எனவே, எளிதில் நீதிக்கட்சி வெற்றி பெற்று பி. முனிசாமி தலைமையில் அமைச்சரவை அமைத்தது.

1932-ல் பொப்பிலி ராஜா அமைச்சரவை ஏற்பட்டது. 1934 பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி காங்கிரஸ் கட்சியால் தோற்கடிக்கப்பட்டது.


இதற்குப் பின்னாலேதான் காங்கிரசிலிருந்து வெளியேறிய பெரியார் ஈ.வெ. இராமசாமியால் சுயமரியாதைக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு அவருக்கிருந்தது. 1934-ல் காந்தியார் தென்னாட்டிற்குப் பயணம் வந்தபோது அக்கட்சியினரால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நிலச்சுவான்தார்களின், முதலாளிகளின், தனி உடைமைவாதிகளின் கோட்டையே காங்கிரஸ் என்று கூறி தங்களை சோசலிஸ்ட்டு எனவும் கூறிக்கொண்டு கம்யூனிஸவாதிகள் பலம் பெறலாயினர். அவர்களால் வன்முறை தூண்டப்படுவதாக கம்யூனிஸ்ட் கட்சியை அரசு தடை செய்தது. தனக்கும் கம்யூனிஸ்ட்டுக்கும் தொடர்பில்லை என அறிக்கை விட்டார் பெரியார் ஈ.வெ.ரா.

1935-ஆம் ஆண்டு, இந்திய அரசாங்க சீர்திருத்தச் சட்டங்கள் திருத்தப்பட்டன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இரட்டையாட்சிக்கு அது முடிவு கட்டியது. சில நிபந்தனைகளோடு மாகாண சுயாட்சி வழங்கப்பட்டது.

சட்ட மன்றம் 215 அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கும் என்றும், மேலவை 46 அங்கத்தினர்களைக்கொண்டதாக இருக்கும் என்றும் வரையறுக்கப்பட்டது. பெரும்பான்மை பெற்ற சட்டமன்றக் கட்சியின் விருப்பப்படி முதலமைச்சரையும், அமைச்சர்களையும் நியமிக்கும் அதிகாரம் கவர்னருக்கு அளிக்கப்பட்டது. சட்டமன்றத்தைக் கூட்டுவதும், ஒத்தி வைப்பதும், கலைப்பதுமான அதிகாரங்களும் அவருக்கிருந்தன. 1937 ஏப்ரல் 1-ல் இது தொடர்பான சட்டம் அமுலுக்கு வந்தது.

சென்னைக்கு வருகை தந்த பண்டித ஜவகர்லால் நேருவின்



இனிய எளிய ஆணித்தரமான பேச்சாற்றல் மக்களைப் பெரிதும் கவர்ந்தது. தமிழகமெங்கும் சுறுசுறுப்பாகச் சுற்றுப்பயணம் செய்தார் அவர். 1937 பொதுத்தேர்தலில் 215 இடங்களுடைய சட்டமன்றத்தில் 159 இடங்களைப் பிடித்து, காங்கிரஸ் கட்சி பெருவெற்றி கண்டது. மேலவையில் இருந்த 46 இடங்களில் 26 இடங்களைக் கைப்பற்றியது.

அரசின் அன்றாட நிர்வாகத்தில் கவர்னர் தலையீடு இருக்காது என்ற உத்தரவாதம் அளித்தால்தான் அமைச்சரவை அமைக்கச் சம்மதிப்போம் என்று அப்போது காங்கிரசார் கூறிவிட்டதால், கே.வி. ரெட்டி தலைமையில் இடைக்கால அமைச்சரவை அமைக்கப்பட்டது. அடுத்த சில மாதங்களிலேயே வைஸ்ராய் அதற்கு உத்தரவாதம் அளித்ததால், காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்றது. சி. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் அமைச்சரவை அமைக்கப்பட்டது.

1942 மே - ஜூனில் 'இந்தியாவை விட்டு வெளியேறு' இயக்கத்தைக் காந்தியடிகள் உருவாக்கினார். அது பற்றிய விவரங்கள் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, ஆகஸ்ட் 9 முதல் அவ்வியக்கம் நடத்தப்படலாயிற்று.

இந்தியாவிலிருந்து பிரிட்டன் உடனடியாக வெளியேற வேண்டும் என்று எங்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாகக் காந்தியடிகளும் முக்கியக் காங்கிரஸ் தலைவர்களும் கைதாயினர்.

கொந்தளிப்படைந்த மக்கள் பலாத்காரத்தில் ஈடுபடலாயினர்.

ஹர்த்தால், தொழிலாளர் வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்ட ஊர்வலம் தொடர்ந்தது. டெலிபோன், தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. ரயில் தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. அரசு அலுவலகங்கள் அரசு வாகனங்கள் தீயிடப்பட்டன. மாணவ, மாணவிகள் பெரும் கிளர்ச்சியில் இறங்கினார்கள். பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டன.

தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களுமே இப்படிப் போர்க்கோலம் பூண்டிருந்தன. அரசினரால் எங்கும் போலீஸ் தடியடி நடத்தப்பட்டது; சில இடங்களில் துப்பாக்கிச் சூடும் நிகழ்ந்தது.

சென்னையில், 'பிரிட்டனே இந்தியாவை விட்டு வெளியேறு' இயக்கம் 1942 ஆகஸ்ட்டிலிருந்து டிசம்பர் வரை தீவிரமாக இருந்ததோடு சரி. எனவே, கம்யூனிஸ்ட் மீதிருந்த தடை நீக்கப்பட்டு, காங்கிரஸ் மீது தடைவிதிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் பாகிஸ்தான் பிரச்னையைக் கிளப்பினார் ஜின்னா. 1944 மே மாதத்தில் விடுதலை செய்யப்பட்ட மகாத்மா காந்தியடிகள், இப்பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க அரும்பாடு பட்டும் பலன் காண முடியவில்லை.

இந்நேரத்தில், தமிழ்நாட்டில் காமராசரின் கரம் ஓங்கியது. தமிழகமெங்கும் தீவிர சுற்றுப்பயணம் செய்து காங்கிரசுக்குப் பேராதரவு திரட்டினார் அவர். அரசுக்கு ஆதரவாக இருந்த கம்யூனிஸ்ட்டுகள் மக்களால் பெரிதும் வெறுக்கப்பட்டனர்.

1946-ல் நடந்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. சட்டமன்ற மொத்த இடம் 215-ல் 164 இடங்கள், மேலவை மொத்த இடங்கள் 52-இல் 32 இடங்களும் காங்கிரஸ் வசமாயிற்று. சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக்கு டி. பிரகாசம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1946 ஏப்ரலில் அவர் அமைச்சரவை அமைத்தார்.

பிற கட்சிகள் ஒவ்வொரு கொள்கை அடிப்படையில் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வரலாயின. எனவே 1947 துவக்கத்தில் மக்கள் அமைதி-பாதுகாப்புச் சட்டம் அரசால் பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில் - அனைத்திந்திய அரசியல் அரங்கில் மாபெரும் சம்பவங்கள் பல, சரங்கோத்தன. காங்கிரசார், ஜின்னா, பிரிட்டிஷ் அரசினர் ஆகிய முத்தரப்புக்கும் இடையே தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட ஏற்பாடாயிற்று.



இந்தியாவிலிருந்து திரும்பச் சென்று விடுவது என பிரிட்டன் முடிவு செய்தது. புதிய வைஸ்ராயாக லார்டு மவுண்ட்பேட்டன் வருகை தந்தார். நமது மாபெரும் இந்திய நாடு, இந்தியா என்றும், பாகிஸ்தான் என்றும் இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.

இந்தியப் பெருநாட்டைக் கப்பியிருந்த அந்நிய இருள் விலகியது!


வி.வி. கிரி, ஏ.டி. பன்னீர் செல்வம், எழுத்தாளர் வ.ரா. ஏ. [illegible] லட்சுமணசாமி முதலியார் ஆர். வெங்கட்ராமன், சோமசுந்தரபாரதியார், ப. ஜீவானந்தம், உ. முத்துராமலிங்கத் தேவர், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, பி.எஸ். குமாரசாமி ராஜா, மதுரை ஜோஸப், குத்தூஸ் பாஷா, ஜி.ஏ. நடேசன், டி. செங்கல்வராயன், சிவராவ், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மறை திருநாவுக்கரசு, அய்யாமுத்து, சுத்தானந்த பாரதியார், ந. சோமயாஜுலு, ம.பொ. சிவஞானம் ஆகியோரும் விடுதலைப் போர் வெற்றி பெறத் தியாகம் புரிந்தோர் பட்டியலில் அடங்குவர்.

1947 ஆகஸ்ட் 15-ஆம் நாளன்று சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது.

'ஆடுவோமேபள்ளுப்பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோம் என்று
ஆடுவோமேபள்ளுப்பாடுவோமே'

—என மகிழ்ச்சிக் கடலில் ஆர்ந்த தமிழக மக்கள், சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் விடுதலை நாள் விழாவைத் தத்தம் இல்ல விழாவாக இதய பூரிப்போடு கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

—தொகுப்பு: பி.எல். ராஜேந்திரன்



# சுதந்திரம்

உழைப்பு எப்போது ஒரு கலையாக, அறிவைப் பெருக்கும் ஊற்றாக அமைகின்றதோ அப்போதுதான் உழைப்பு சுதந்திரத்தின் சின்னமாகிறது; சுய பூர்த்தியாகிறது.

பொருளாதாரச் சமத்துவம்தான் சுதந்திரத்தின் உயிர்நாடி. முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே உள்ள நிரந்தரப் பூசலை அகற்றுவதுதான் பொருளாதாரச் சமத்துவத்திற்கான ஒரே வழி.

ஆடம்பரமும், சுதந்திரமும் ஒன்றாகாது. நம்முடைய நிதி நிலவரத்திற்கு ஏற்றபடிதான் வாழ்க்கை நடத்த வேண்டும்.

சுயராஜ்யம் என்பது இந்தியாவில் வசிக்கும் ஒவ்வொரு பிரஜையும் தன் சொந்தச் சகோதரனாகவும், சகோதரியாகவும் குறிக்கிற தன்மையாகும்.

சுயராஜ்யப் போராட்டம் என்பது வெறும் அரசியல் துறையில் மட்டும் விழிப்பு ஏற்படுவது அல்ல. சுற்றியுள்ள எல்லாத் துறைகளிலும், சமூகம், கல்வி, ஒழுக்கம், பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகள் அனைத்திலுமே விழிப்பு ஏற்படுத்தும் போராட்டத்தையே குறிப்பதாகும்.

சுயநலம், பேராசை, கோழைத்தனம் முதலானவைதான் நம் சுதந்திரத்தை இழக்கச் செய்த ஜன்மச் சத்ருக்கள்.

தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை அதே தூய்மையான நேர்மையான வழிகளின் மூலம் காப்பாற்றி வர வேண்டும்.

சுதந்திரத்தின் சாவி மாணவர்களின் கையில்தான் இருக்கிறது.

# அகிம்சை

நாளைய உலகம் அகிம்சையின் அடிப்படையில்தான் இருக்கும்; இருக்க வேண்டும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

அகிம்சை எனக்கு ஒரு கொள்கையல்ல; அது ஒரு நெறி; ஒரு மதம். மனிதகுலத்திற்குக் கிடைத்துள்ள மாபெரும் சக்தியாகும் அகிம்சை.

அகிம்சைதான் நம் எண்ணத்தின் சட்டம். வன்முறை காட்டுமிராண்டிகளின் சட்டம்.

அகிம்சையைப் பற்றி அறிவுரை கூற முடியாது. அதைப் பின்பற்றித்தான் ஆக வேண்டும். வன்முறைக்கிடையே அகிம்சை நெறியைக் கடைப்பிடித்த முனிவர்கள், நியூட்டனைவிடச் சிறந்த மேதைகள்; வெலிங்டனைவிடச் சிறந்த போர் வீரர்கள்.

செயல்வடிவத்தில் அகிம்சை மிகுந்த வேகத்துடன் செல்கிறது. அப்போது ஒரு அற்புதம் அற்புதமாகி விடுகிறது.

அகிம்சையின் அகராதியில் அச்சம் என்ற சொல்லுக்கு இடம் இல்லை.

அகிம்சையின் மூலமாக நான் பொருளாதாரச் சமத்துவத்தைக்கொண்டு வருவேன்.

விரோதம், கோபம், குரோதம், முதலான இருட்டையெல்லாம்; அகிம்சையென்னும் சூரியன் ஒழித்து விடுகிறான்.

நாம் அகிம்சையைக் கடைப்பிடிப்பதன் மூலமாகக் கடைசியில் நமது எதிரியும் அகிம்சையைக் கடைப்பிடித்துத் தீர வேண்டிய நிலை வரும்!

அகிம்சையை இந்தியாவின் ஆயுதமாக உபயோகிக்க எண்ணுகிறேன். ஆனால், இது பலவீனர்களின் ஆயுதமன்று, பலவான்களின் ஆயுதமே ஆகும்.

அகிம்சையையும், சத்தியத்தையும் பின்பற்றுகிற பாதை மிக நெடிதாகத் தோன்றினாலும், அதுவே குறுக்குப் பாதை என்பது என் எண்ணம்.

உண்மையையும், அகிம்சையையும், நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்றால் அச்சத்தை அறவே விட்டுவிட வேண்டும்.

# செய்திப் படத்தில் அண்ணல் காந்தி

ஏ. கே. செட்டியார்

**அண்ணல் காந்தியடிகளின் டாக்குமெண்டரியை மிகுந்த சிரமத்திற்கிடையில் உருவாக்கியவர் திரு ஏ. கே. செட்டியார். அவரது அநுபவம் இங்கே நினைவு கூரப்படுகிறது.**

காந்தியடிகள் படத்தில் மிக முக்கியமானது தண்டி யாத்திரை உப்பு சத்தியாக்கிரகம் ஆகும். இந்தியாவில் எங்களுக்கு இது சம்பந்தமாக ஒரு படமும் கிடைக்கவில்லை; வெளிநாடுகளில் சேகரித்த சுமார் 200 அடி படத்தைக் கொண்டு அப்பகுதியை எடிட் செய்து படத்தில் சேர்த்து விட்டோம்.

தனிப்பட்ட ஒரு நபரிடம் தண்டி யாத்திரை சினிமாப்படம் இரண்டு சுருள்கள்-சுமார் இரண்டாயிரம் அடி இருப்பதாகச் செய்தி கிடைத்தது; உடனே அவரை அணுகினோம். அவர் ஒரு சாதாரண மனிதர்; வசதி உள்ளவர் அல்லர்; காந்தியடிகளின் மீதுள்ள பக்தியால் தம் சொந்தப் பணத்தைச் செலவு செய்து, தண்டி யாத்திரை ஆரம்பம்முதல் கடைசி வரை படம் எடுத்ததோடு பம்பாயில் நடந்த பெரிய ஊர்வலங்கள், போலீஸ் தடியடிப் பிரயோகம் ஆகியவற்றையும் நல்ல முறையில் படம் பிடித்திருந்தார். அரசியல் நிலை காரணமாக அப்படங்களைப் புதைத்து மறைத்து வைத்திருந்தார்.

'இந்தப் படப்பிடிப்புக்காக சுமார் 3000 ரூபாயும் செலவு செய்திருக்கிறேன். எனக்கு இப்பொழுது மிகவும் பணக்கஷ்டம். உங்களுக்கு விருப்பமானதைக் கொடுங்கள்'' என்றார்.

அந்த அன்பருடைய பணக் கஷ்டத்தை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு குறைவான விலைக்கு அந்தப் புதையலை வாங்க என் மனம் ஒப்பவில்லை. அவரிடம், 'எங்களுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுக்க வசதியில்லை. உங்கள் படத்தில் எங்களுக்கு வேண்டிய பகுதிகளை - சுமார் ஆயிரம் அடி எங்கள் செலவில் பிரதி எடுத்துக் கொண்டு படத்தை உங்களிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறோம். இப்படத்திற்கு நல்ல எதிர்காலம் உண்டு. சிலர் விரும்பிக் கேட்பார்கள். அப்பொழுது தங்களுக்கு தாங்கள் போட்ட முதலோ அல்லது அதற்கு அதிகமாகவோ கிடைக்க வழி உண்டு' என்றேன். அவர் சம்மதித்து எனக்கு நன்றி செலுத்தினார். ஆனால் உண்மையில் நன்றி செலுத்த வேண்டியவன் நான்!

காந்தியடிகளின் தண்டி யாத்திரை மிகவும் அற்புதமான படம். படப்பிடிப்பு மிகவும் தரமுள்ளது பம்பாயில் போர்பந்தரில் நடைபெற்ற போலீஸ் தடியடிப் பிரயோகத்தை மிகவும் சிறந்த முறையில், தம் உயிரையும் பொருட்படுத்தாது படம்பிடித்தவரின் துணிவையும் .தேச பக்தியையும் வியந்து ஊர், பெயர் தெரியாத அவரை வணங்கினேன்.

லண்டனுக்குச் சென்ற பொழுது மகாத்மாவின் தென்னாப்பிரிக்க நண்பரும் சகாவுமான ஹென்றி எஸ். எல்.போலக் அவர்களைச் சந்தித்தேன். அவர் ஒரு யூதர். சைவ உணவு உண்பவர். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளின் எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். லண்டன் திரும்பிய பின்னர் பாரிஸ்டராகத் தொழில் நடத்தினார்.



ஸ்ரீ போலக்கை அவர் காரியாலயத்தில் சந்தித்தேன். மறுநாள் மாலை அவர் வீட்டுக்குச் சென்றேன். உள்ளே சென்று, சிறிய பழைய பிலிம் டப்பா ஒன்றைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார். உடனே அவர் 'இது கோபால கிருஷ்ண கோகலே தென்னாப்பிரிக்காவுக்கு வந்த போது 1913-இல் எடுத்த படம். இதனைக் கறுப்பர்களுக்குமட்டும் உள்ள ஜோகன்ஸ்பர்க் திரைப் படக் காட்சிச் சாலை ஒன்றில் காண்பித்தனர். பின்னர் அதை நான் வாங்கிப் பத்திரமாக வைத்திருக்கிறேன். இது மிகப் பழைய படம். ஜாக்கிரதையாகப் பிரதி எடுங்கள்; திரையிலிட்டுப் பார்ப்போம்'' என்றார் போலக். மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தேன்.

மறுநாள் காலையில் எனக்கு நன்கு பழக்கமுள்ள நார்மல் பிலிம் லைபிரரிக்கு அந்தச் சுருளை எடுத்துச் சென்றேன்; அந்தச் சுருள் சுமார் 200 அடி நீள மிருக்கும். படம் பழைய படமாய் இருந்தாலும், அதிக நாள் திரையிடாததால், பிலிம் துவாரங்கள் நல்ல நிலையில் இருந்தன. 'ஜாக்கிரதையாக



# சிறைச்சாலை என்ன செய்யும்?

**1930**-ஆம் ஆண்டு இந்தியாவின் விடுதலைப் போரில் முக்கியமானதோர் ஆண்டு. காந்தி அடிகள் வரலாற்றுப் புகழ்பெற்ற தண்டி யாத்திரையை மேற்கொண்டார்; உப்புச் சட்டத்தை மீறுவது அவரது நோக்கம்.

நாடு முழுவதும் சத்தியாக்கிரகம் மூண்டது. பெண்மணிகளும் இக்கிளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டனர். உப்புக் காய்ச்சி உப்புச்சட்டத்தை மீறினர்; கள்ளுக்கடைகளில் மறியல் செய்தனர்; விதேசித் துணிக்கடைகளிலும் மறியல் நடத்தினர்.

மதன்மோகன்மாளவியா விதேசித் துணி பகிஷ்காரத்தில் சிறப்பாகப் பங்கு கொண்டார். பெரும் வர்த்தகர்களை அணுகி விதேசித் துணிகளை விற்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

வல்லபாய் படேலும், மாளவியாவும் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். சுதேசிப் பொருள்களை உபயோகிக்க வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு விளக்கினார்கள்; விதேசிப் பொருள்களை அறவே மறுக்க வேண்டும் என்று கூறினார்கள். மாளவியா பேசிய கூட்டங்கள் பல.

1930-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-ஆம் நாள் பம்பாய்க்குப் போனார் மாளவியா. லோகமான்ய பாலகங்காதர திலகரின் பிறந்த நாள்; அன்று பெரியதோர் ஊர்வலம் நடத்தினார்; சுமார் ஒரு லட்சம் பேருக்கு மேல் திரண்டிருந்தனர்; ஏராளமான பெண்மணிகளும் இருநதனர். மாளவியா முன்னணியில் இருந்தார்.

போலீஸ் அதிகாரிகள் ஊர்வலத்தை மறித்தனர்; முன் செல்லலாகாது என்று தடுத்தனர்; கட்டளை இட்டனர். முன்னே செல்லும்படி ஊர்வலத்தினருக்குக் கட்டளை இட்டார் மாளவியா,. அவரும் படேலும், மற்றும் பல தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

மாளவியாவுக்குப் பதினைந்து நாள் காவல் அல்லது நூறு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அவருக்குத் தெரியாமல் யாரோ ஓர் அன்பர் அபராதம் செலுத்தி, அவர் சிறை செல்லாமல் தடுத்துவிட்டார்.

விடுதலையான மாளவியா சத்தியாக்கிரக இயக்கம் தளர்ச்சி பெற்றுவிடக்கூடாது என்பதற்காக மீண்டும் சுற்றுப் பிரயாணம் தொடங்கினார். குஜராத் பிரதேசம் பூராவிலும் பல இடங்களில் பல கூட்டங்களில் பேசி உற்சாகமூட்டினார்.

அரசாங்கம் அடக்குமுறையை அதிகரித்து வந்தது. சுமார் ஒரு லட்சம் பேருக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டனர்; பல சிறைச்சாலைகள் நிரம்பி வழிந்தன!

—நன்றி: 'நாட்டுக்கு உழைத்த நல்லவர்'

இதிலிருந்து ஒரு நெகடிவ் எடுத்து உடனே அதிலிருந்து ஒரு காப்பி தயாரிக்கிறோம். மாலை 4 மணிக்கு வாருங்கள்' என்று கூறினார். குறிப்பிட்ட நேரத்தில் ஸ்ரீபோலக் அவர்களையும் அழைத்துக்கொண்டு, அங்கு சென்றேன்; மிகச் சிறிய பிரத்தியேகமான திரைப்பட அரங்கில் திரையிட்டனர். 1913-இல் எடுத்த படம் ஆதலால், எல்லாமே மிகமிக வேகமாக நடப்பது போல் இருந்தன; கோபால கிருஷ்ண கோகலே அவர்கள் உயிர் பெற்று நடந்தார். பலருடன் கைகுலுக்கினார்.

படத்தில் மகாத்மாவை நான் காணவில்லை; சிறிது ஏமாற்றத்துடன் 'மகாத்மா எங்கே?'' என்று ஸ்ரீபோலக்கைக் கேட்டேன் 'அதோ கோகலேயுடன்மேனாட்டு உடையணிந்து, கத்தியவார் தலைப்பாகையுடன் காட்சியளிக்கிறாரே, அவர்தான் மகாத்மா'' என்றார் போலக். ஆச்சரியத்தில் மூழ்கி விட்டேன்!

இந்த ஒப்பற்ற படம் நமது நாட்டின் அருமையான சரித்திரச் சின்னங்களில் ஒன்று என்று துணிந்து கூறலாம். 1913-ஆம் ஆண்டில், எந்தத் துறையிலும் பின் தங்கியிருந்த ஆப்பிரிக்காக் கண்டத்தில்,ஒருசினிமாச்செய்திப் படம், அதிலும் கோகலேயையும் காந்தியையும் கொண்ட சரித்திரப் படம் எடுத்திருப்பார்கள் என்று யாராவது எதிர்பார்க்க முடியுமா? அதைவிடப் பெரிய அதிசயம் ஸ்ரீபோலக் அவர்கள் அதனை 27 ஆண்டுகள் காப்பாற்றி வைத்திருந்ததுதான். இந்த அருந் தனத்தைக் காப்பாற்றி இந்தியனுக்கு அளித்த ஸ்ரீபோலக்குக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

படத்தின் பிரதியை மட்டும் நான் வைத்துக்கொண்டு, ஒரிஜினல் காப்பியையும் புதிய காப்பி ஒன்றையும் ஸ்ரீ போலக்கிடம் கொடுத்துவிட்டேன்.

''எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?'' என்று தயக்கத்துடன் கேட்டேன்.

''இது எனது அன்பளிப்பு. இப்படம் என்னிடமிருந்து கிடைத்ததாக நீங்கள் குறிப்பிட்டால் போதும்' என்றார்.

(குமரி மலரிலிருந்து)

# சும்மா கிடைத்ததா சுதந்திரம்?

கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி



ஆயிரம் ஆண்டுகள் அடுத்தடுத்து இந்தியத்
தேசம் அடிமைச் சிறுமையில் உழன்றது!
காந்தியெனும் ஒரு கருணைச் சூரியன்
சாந்தம், சத்தியம், அகிம்சைச் சுடரொளி
பாய்ந்து அடிமையின் இருளை அழித்தது
சாய்ந்துத் தகர்ந்தது வெள்ளை ஆதிக்கம்!
விடுதலை பெற்றது பாரத தேசம்!

விடுதலை பெற்றநம் பாரத நாட்டில்
அன்றைய நிலையை எண்ணிப் பார்த்தால்
இன்றைக்கும் நம் இதயம் நடுக்குறும்!

இந்திய நாட்டை இரண்டு துண்டாக்கும்
தந்திரம் வெள்ளையர் சதியால் விளைந்தது!
பிரிவினை யென்னும் பேய்க்குணம் மிகுந்து
ஒருமைப் பாடெனும் ஒற்றுமை குலைந்தது!
மதவெறி மனிதனை மிருகமாய் மாற்றிச்
சதிச்செயல் புரிந்தது! தலைகள் உருண்டன!
எங்கும் கொலைவெறி! எதிர்ப்பட்டவரெலாம்
அங்கம் அங்கமாய் வெட்டிச் சாய்த்தனர்!
பெண்கள் கற்பை அழித்துக் கொன்றனர்!
கன்னியர் குழவிகள் காளையர் முதியோர்
நவகாளி, திப்பேரா, நர்ப்புற மெல்லாம்
சவக்காடாய் ரத்தச் சகதியில் மிதந்தனர்!

ஐயன்காந்தி அடிகள் அதிர்ந்து போய்
வெய்ய வன்கொலைக் களத்திடை விரைந்து
கொலைவெறிக் கொடியர்தம் கொடுவாள் பறித்தும்
அலைத்திடும் மதவெறி அநீதியைத் தடுத்தும்
'என்னைக் கொன்று என் பிணத்தின்மேல்
நின்று தான்
இன்னொரு உயிர்தனை வீழ்த்திட வேண்டும்'!
என்று மதவெறி இராக்கதர் முன்னே
குன்றென நிமிர்ந்து நின்று முழங்கிய
அண்ணலின் ஆத்ம சக்திமுன் வெறியர்கள்!
மண்ணிடை வீழ்ந்து மண்டியிட்டழுதனர்!
சத்தியம் வென்றது! தர்மம் தழைத்தது!
எத்தர்கள் திருந்தினர்! இணையடி தொழுதனர்!
அகிம்சை வென்றது! அநீதி அழிந்தது!
அகிலமே ஐயனின் ஆற்றலை வியந்தது!
சுதந்திரம் என்ன சும்மா கிடைத்ததா?
எதிரிகள் அதைத்தர ஏமாளிகளா?
ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள், தியாகிகள்
தூய தேச பக்தர்கள், தலைவர்கள்
படிப்பையும், பெற்ற பட்டமும் துறந்து
தடியடி பட்டும், தலைகள் நொறுங்கியும்,
துப்பாக்கிக் குண்டினைத் துணிவுடன் ஏற்றும்,
கற்பனைக் கெட்டாக் கடுந்துயருற்றும்,
தூக்கு மேடையைத் துச்சமாய் மதித்தும்
யாக்கை அநித்தியம் என்பதை உணர்ந்தும்
இரண்டு ஜன்ம தண்டனை பெற்றும்
மருண்டு அன்னியர்க் கடி பணியாமல்
மக்களை, மனைவியைத் துக்கத்தில் ஆழ்த்திச்
செக்கி ழுத்தும், சிப்பி யேந்தியும்,
சிறையிற் பட்ட சித்தர வதையெலாம்
பொறுமையாய்ச் சகித்த புண்ணிய வான்களால்
பெற்ற சுதந்திரம் தன்னை எளிதாய்
விற்றிடத் துணியும் வீணரை விடுவதா?
இருநூறு ஆண்டுகள் இந்திய நாட்டைச்
சுரண்டிச் சுரண்டிச் சுடுகா டாக்கிப்
பஞ்சமும் நோயும் பட்டினிக்கொடுமையால்
நெஞ்சம் அயர்ந்து துடித்திடும் நிலையில்
திக்குத் திசை தெரியாமல் இந்திய

மக்கள் தவித்ததை மறக்க முடியுமா?
எத்தனை அணைகள்! எத்தனை ஆலைகள்!
எத்தனை நீண்ட இணைப்புச் சாலைகள்!
மதச் சார்பற்ற மக்கள் ஆட்சியால்
புதிய சகாப்தம் பொலிவுறச் செய்தார்!
கூட்டுச் சேராக் கொள்கையை வகுத்த
நாட்டில் அமைதியை நிலைபெறச் செய்தார்!



# சத்தியமூர்த்தியும் பாரதியும்



நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, சென்னை சட்டசபையில் ஆளும் வர்க்கத்தினரின் சகாக்களாக அமர்ந்திருந்த பாரத மக்களாகிய அமைச்சர்களின் செவிகளில் எதிரொலிக்கும் வகையில் சத்தியமூர்த்தி, பாரதியின் பெருமைகளைப்பற்றி எடுத்துரைக்கிறார். இரட்டையாட்சியின் விபரீத விளைவான அமைச்சரவையின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது சத்தியமூர்த்தி பேசுகிறார். அமைச்சரவைத்தலைவர் ஜஸ்டிஸ் கட்சியின் அமைப்பாளர்களில் ஒருவரான பனகல் ராஜா. அது தான் சட்டசபையில் சத்தியமூர்த்தியின் முதற்சொற்பொழிவு. அந்தச் சமயத்தில் பள்ளிக் குழந்தைகளின் பாடம் சம்பந்தமாக சத்தியமூர்த்தி பேசியது மிகவும் பொருத்தமாக இருந்தது.

'தமிழ்நாட்டில் பாரதி என்ற மனிதர் ஒருவர்இருந்தார்' என்று சத்தியமூர்த்தி மந்த புத்தி படைத்த குழந்தைகளுக்குக் கதை சொல்லும் வகையில் ஆரம்பித்தார். 'அந்த மனிதன் இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அரசாங்கக் கவிஞராக நியமிக்கப்பட்டிருப்பார். அவருடைய கவிதைகள் உயர்ந்தவை. தேசிய உணர்ச்சி ஊட்டுபவை. திருநெல்வேலி தாலுக்கா போர்டு அந்த மனிதரின் பாடல்களைப் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தபோது, கனம் முதன் மந்திரி அவர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டுவிட்டது. இந்தப் பாடல்களின் மூலம் புரட்சி ஏற்பட்டுவிடும் என்று அவர் நினைத்தார்'' என்று சத்தியமூர்த்தி முழங்கினார்.

இந்தச் சொற்களில் அந்த முதலமைச்சருக்குஒரு பாராட்டுக் கூட தொனித்தது என்றும் சொல்லலாம். சுதந்திர வேட்கை கொண்ட நாட்டில் பாரதியாரின் பாடல்களால் புரட்சி ஏற்படக் கூடும் என்று முதல்வர் உணர்ந்ததை சத்தியமூர்த்தி எடுத்துக் காட்டினார்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சத்தியமூர்த்தி, மீண்டும் பாரதி பாடல்கள் விஷயமாகச் சட்டசபையில் பேசினார். போலீசார் பாரதி பாடல் புத்தகங்களைக் கைப்பற்றி விட்டார்கள். இது பற்றி கொண்டு வரப்பட்ட ஒத்தி வைப்புப் பிரேரணை ஒன்றின்மீது சத்தியமூர்த்தியின்சொற்பொழிவு அந்தச் சந்தர்ப்பத்தில் சத்தியமூர்த்தியின் உரை சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பாரதியின் பாடல் பற்றிய இலக்கிய விளக்கமாக அமைந்தது.

'காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியின் நாவில் சரஸ்வதிதேவி நாட்டுப்பற்று நடனம் ஆடிக் கொண்டிருந்தாள். இந்தியா தவிர வேறு எந்தச் சுதந்திர நாட்டில் பிறந்திருந்தாலும், பாரதி அந்த நாட்டின் அரசாங்கக் கவிஞர் ஆக இருந்திருப்பார். ஆனால் அடிமை நாடாகிய இந்தியாவில் பிறந்ததால் அவர் புதுச்சேரியில் தேசப் பிரஷ்டராக வாழ்ந்து மனம் நொந்து மறைய வேண்டிய துர்பாக்கியம் ஏற்பட்டது. இந்த மாதிரிதான் அவருக்கு முன்பும் தேச பக்தர்களும் தியாகிகளும் வாழ்ந்து மறைந்தார்கள். சுப்பிரமணிய பாரதிக்கும், அதே கதி தான் நேர்ந்தது. சபாநாயகர் அவர்களே, நான் ஒரு விஷயத்தை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். பாரதி பாடல்கள் அடங்கிய புத்தகங்கள் எல்லாவற்றையும் நீங்கள் கைப்பற்றி விடலாம். எழுத்தில் பொறிக்கப் படாத வேதங்கள் கர்ணபரம்பரையாகத் தொன்று தொட்டு தலைமுறை தலைமுறையாக வழங்கி வருவதைப் போல், தமிழ் உள்ளவரையிலும், தமிழன் என்று ஒருவன் உள்ள வரையிலும் பாரதியின் பாடல்கள் தமிழ் மக்களின் மதிப்பற்ற செல்வமாக நிலைத்து நிற்கும்.''


ஒரு தீர்க்கதரிசியைப் பற்றி மற்றொரு தீர்க்கதரிசி கூறிய சொற்கள் இன்று நடைமுறையில் நிருபிக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

சத்தியமூர்த்தி தம்முடைய அரசியல் பணி முழுவதிலும் பாரதியாரின் பாடல்களை விரிவாகக் கையாண்டு வந்தார். 'பாரதி தேசபக்திப் பாடல்கள் மட்டுமே பாடினார் என்று நினைப்பது தவறு'' என்று 1933-ஆம் ஆண்டு நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் சத்தியமூர்த்தி கூறினார். பாரதியாரின் பாடல்கள், வரலாறு, பொருளாதாரம், சமூக இயல் போன்ற எல்லாத் துறைகளையும் பற்றிய விளக்கங்களாகும். அவருடைய பாடல்களில் காணும் கருத்துச் செறிவு வியக்கத்தக்கது. அந்தப் பாடல்கள் அவைகளின் பொருளுக்கேற்ப இசைக்கப்பட வேண்டும். நன்றாய் பொருள் அறிந்து பாடினால் பாரதியின் பாடல்கள் தேசிய உணர்ச்சியை எழுப்புவதுடன், சஞ்சலமடைந்த மனதுக்கு ஆறுதலாகவும் அமையும்' என்று சத்தியமூர்த்தி விளக்கினார்.

மீண்டும் 1939-ஆம் ஆண்டில் பாரதி தின விழாவில் பேசும் போது, அவர் 'தமிழ்நாட்டில் தேசிய எழுச்சி ஏற்பட்டதற்குப் பாரதியின் பாடல்களே முக்கிய காரணம்' என்று கூறினார். 'காந்தி சகாப்தத்திற்கு நெடு நாட்களுக்கு முன்னதாகவே வாழ்ந்த பாரதி ஒரு தீர்க்கதரிசியின் திருஷ்டியுடன் பாடிவைத்த பாடல்கள் மனிதருக்கு என்றும் உற்சாகம் கொடுக்கும் சக்தியாக உருவெடுத்தன. சுதந்திரப் போராட்டத்தில் யாருக்காவது சந்தேகங்கள் ஏற்பட்டால் பாரதியின் பாடல்களைப் படித்து விளக்கம் பெற வேண்டும். அந்தப் பாடல்களைப் படித்தவர்களுக்கு புதிய நம்பிக்கையும் ஊக்கமும் உண்டாகும்.'' என்று சத்தியமூர்த்தி எடுத்துரைத்தார்.

—'சுடர்'—

**சத்தியமூர்த்தி மலரிலிருந்து**




எண்ணரிய தியாகிகளின் கண்ணீரும் செந்நீரும்
இந்திய மண்ணதனில் சிந்தியதன் விளைவாய்க்
கண்ணினு மினியாற் சுதந்தரத்தை அடைந்தோம் !
கவினுறும் நாற்பதாம் ஆண்டின்று கண்டோம் !

குமரிக்கடல் தொட்டு இமயக் கொடுமுடி
கொண்டது பாரதப் பொன்னாடு ! — ஒன்றாய்க்
கூடிக்குலவி மகிழும் பாடிவீடு — அதுவே
நாம் வாழும் சுதந்தரத் திருநாடு !

மண்ணிலே இணையிலாச் சாதனை படைத்திட
மாற்றலரும் வியந்து போற்றிப் பரவிடத்
திண்ணிய வினைகள் ஆற்றி யின்றிடுவோம்
தேவைகள் ஆயிரம் பூர்த்தி செய்திடுவோம்.

தொழில்உழவு பெருக தொட்டதெலாம் துலங்க
எழில் கொஞ்சும் வியன்கலைகள் உலகு கண்டு வியக்கப்
பீடுநடை போடவைப்பது நம் வீர வரலாறு
பிணக்குகள் நீக்கிப் பெருமைசேர்ப்பது தேசியஒருமைப்பாடு !

நாடு துலங்கிட வீடு விளங்கிடப்
பாடுகள் பற்பல முடிப்போம் — வாழ்வில்
பண்பு தழைத்திட அன்பு செழித்திடப்
பார்புகழ் பெற்றுமே வாழ்வோம்!







—அண்ணல் காந்தியடிகள்

நான் கனவு காணும் புதிய இந்தியாவானது தன்னுடைய இயற்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ற புதியதோர் வாழ்வுக்கு அஸ்திவாரம் போட வேண்டும் என்று விரும்புகிறேன்......மிகச் சிறந்த சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்குப் புதிய இந்தியா தன்னை அர்ப் பணித்துக் கொள்ள வேண்டும்.

இந்தியா பூரண சுதந்திரம் பெற்றுவிட்டதாக எப்போது கருதலாம்?''

தங்கள் சொந்த முயற்சியால் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள முடியும் என்றும், தங்கள் விருப்பப்படி தங்கள் கதிமோட்சத்தை உருவாக்கிக் கொள்ள முடியும் என்றும் வெகு ஜனங்கள் எப்போது உணர்கிறார் களோ அப்போதுதான் அவ்வாறு கருதலாம்.

சுதந்திரத்தில் மிக உயர்ந்த உருவிலே மிகப் பெரிய கட்டுப் பாடும், பணிவும் அடங்கியிருக் கின்றன. கட்டுப்பாடு, பணிவு ஆகியவற்றிலிருந்து விளையும் சுதந்திரத்தை யாராலும் மறுக்க முடியாது. ஆனால், கட்டுப் பாடற்ற தறிகெட்ட நடத்தை யானது ஆபாசத்தின் அறிகுறி யாகும்; அண்டை அயலாருக்கு மாத்திரமன்றி, அவ்வாறு நடப்ப வருக்கும் அது தீங்கு விளை விக்கும்.

இந்தியா இப்போது சுதந்திர மடைந்து விட்டது எதார்த்த நிலைமை இப்போது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அடிமைச் சுமை நீங்கிவிட்டதால், நல்ல சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி, நாட்டை நிரு மாணிக்கும் பிரம்மாண்டமான பணியில் ஈடுபடுத்த வேண்டும்; மனிதர்களிடையே உள்ள பூசல் களைத் தீர்ப்பதற்குப் பலாத் காரத்தை உபயோகிக்கும் வழக் கத்தை இந்நாடு கைவிட வேண் டும்.



# விடுதலைப் போரில் நாடகத்தின் பங்கு

'நாடக அரங்குகள் பாமர மக்களின் பல்கலைக்கழகம்' என்றார், கவிதையில் குயிலாகவும் களத்தில் வீராங்கனையாகவும் விளங்கிய சரோஜினி தேவி. விடுதலைப் போராட்டக் காலத்தில் மக்களின் உணர்வை எழுப்பி நாட்டுப்பற்றில் உறுதியான ஈடுபாடு கொள்ளச் செய்ததில் தமிழ் நாடகத்துறைக் குப் பெரும் பங்கு உண்டு.

முதல் தமிழ்த் தேசிய நாடகம் என்ற சிறப்பு தமிழ்ப் பண்டிதர் க. கோபாலச்சார் 1894-இல் எழுதி வெளியிட்ட 'ஸ்ரீ ஆர்ய சபா' என்ற நாடகத்துக்கு உரியது.

**விடுதலைப் போரில் நாடகங்கள் பெரும் பங்கேற்று தேசிய உணர்வை ஊட்டின. விஸ்வநாததாஸ், கே.பி. சுந்தராம்பாள், கே.பி. கேசவன், காளி என். ரத்தினம், டி. கே. எஸ், சகோதரர்கள், நவாப் ராஜமாணிக்கம் முதலானோர் நடித்தும், பாடியும் விடுதலை வேட்கையை உண்டாக்கினர்.**

தொழில் முறையாக நடிக்கப்பட்டு, நல்ல நாடகமாக மக்களால் வரவேற்கப்பட்டு கருத்துப் பரப்புப் பணியிலும் கனிந்த வெற்றி கண்ட தேசிய நாடகம், சதாவதானம் திரு தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலரால் எழுதப் பட்டு, 1922-ஆம் ஆண்டில் அரங்கேற்றப் பட்ட 'கதரின் வெற்றி' என்ற நாடகமாகும்.

தேசியத் தமிழ் நாடகங்களில் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்ட மற்றொரு நாட கம், தேசபக்தர் வெங்களத்தூர் சாமிநாத சர்மா எழுதிய 'பாணபுரத்து வீரன்'. ஸ்காத் லந்து நாட்டிற்கு நல்வாழ்வளித்த ராபர்ட் ப்ரூஸ் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு ஆக்கப்பட்டது இந் நாடகம், ஆங்கிலேய அரசினரால் இந்நூல் தடை செய்யப்பட்ட காரணத்தால், சிற்சில பகுதிகளை மாற்றியும் திருத்தியும் ஆசிரியர் வரைந்து தந்ததை, 'தேச பக்தி' என்ற பெயரிலேயே டி.கே.எஸ். சகோதரர்கள் அரங்கேற்றி, அந்நாடகத்தைப் பலமுறை வெற்றிகரமாக நடத்தினர்.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துடன் இந்தியா நடத்திய போராட்டத்தை நிழற் படம் போல் காட்டியது இந்நாடகம். பகத் சிங், சுகதேவ், ராஜகுரு ஆகியோர் தூக்கி லிடப்பட்டுச் சில நாட்களே சென்றிருந்தன. அச்சூழ்நிலையில் வாலீசன் தூக்கு மேடை ஏறிய காட்சியில், நாடகம் பார்த்தவர்கள், உணர்ச்சி மேலிட்டு 'பகத்சிங்குக்கு ஜே' என்று முழக்கமிடுவார்களாம். 'தேச பக்தியே முக்தி யாம், தெய்வ சக்தியாம்' என்று புரேசன் பாடிக் கொண்டு நாடக அரங்கில் காட்சி யளித்தபோது, மக்கள் சக்தி வீறுற்று எழுந்து மகத்தான ஆரவாரம் பெருகுமாம்.

1921-ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கி, இந்நாடகத்தில் நான்குகளங்கள் வரை, திரு. வி. க.வின் நவசக்தி இதழில் 'நாடகாசிரியன்' என்ற புனை பெயரில் வெளி வந்தது, முற்றும் வெளிவராமல் நின்றுவிட் டது. 1924-ஆம் ஆண்டில் மீண்டும் அது அப்பத்திரிகையில் முழுமையாக வெளிவந்தது. 1924-ஆம் ஆண்டில், பண்டித அசலாம்பிகை அம்மை முகவுரையுடன் நூல் வடிவில் வெளி யிடப்பட்டது.



# ஜாலியன்வாலாபாக் படுகொலை!

அமிருதசரசைச் சேர்ந்த ஜாலியான் வாலாபாக் என்ற பெயருள்ள ஒரு சிறிய மைதானத்தில் மக்களுடைய பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

ஜெனரல் டயர் என்ற ஆங்கிலேய அதிகாரி 100 இந்திய சிப்பாய்களையும், 50 வெள்ளைச் சிப்பாய்களையும் அழைத்துக் கொண்டு அந்த மைதானத்துக்கு வந்தார்.

ஆயுதமேதும் அற்றவர்களாகச் சுமார் இருபதாயிரம் பேர் அங்கே கூடியிருந்தார்கள்-குழந்தைகள், வயதானவர்கள், பெண்கள்.

ஜெனரல் டயர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த உத்தரவிட்டார். எந்தவித முன் அறிவிப்பும் இல்லாமல், கூட்டத்தைக் கலைய விடாமல், கூட்டம் வெளியேறுவதற்குக் கூட வழி இல்லாமல், துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. உண்மையில் அங்குள்ள மக்களைக் குண்டுகளால் துளைத்தெடுக்கவே அவர் அங்கு வந்தார். சந்தர்ப்பம் அவருக்குக் கை கொடுத்தது. அந்தச் சிறிய மைதானம் நான்கு பக்கங்களிலும் பெரிய, உயர்ந்த சுவர்களால் சூழப்பட்டிருந்தது. வெளியே செல்வதற்கு ஒரு குறுகிய பாதையே இருந்தது.

சிப்பாய்களின் துப்பாக்கியிலிருந்து தொடர்ச்சியாக மடமடவென்று குண்டுகள் வெளிப்பட்டன. மக்களின் நடுவில் குழப்பம் ஏற்பட்டு எல்லோரும் பயந்து ஓட ஆரம்பித்தனர். ஆனால், வெளியே போக வழி ஏது? குண்டுகள் தீரும் வரை தொடர்ச்சியாக வெடித்தன. 1600 குண்டுகள்!

நூற்றுக்கணக்கானவர் மாண்டனர். ஆயிரக்கணக்கானவர் காயம் அடைந்தனர். இதை விடப் பெரிய கொடுமை ஒன்றும் உண்டு. இறந்தவர்களையும், காயம் அடைந்தவர்களையும் அங்கிருந்து எடுத்துச் செல்ல முடியாதவாறு இரவு முழுவதும் சிப்பாய்கள் காவல் இருந்தனர்! காயம் அடைந்தவர்களுக்கு மருந்தோ கட்டோ கூடப் போட முடியவில்லை.



ஜாலியன்வாலாபாக் நினைவுச் சின்னம்

1925 முதல் 1934 வரை தமிழகத்தில் தேசிய நாடக மன்றங்கள், தனியார் நாடகக் குழுக்கள், தொழில் முறை நாடகக் கம்பெனிகள் தங்கள் பங்கை நாட்டின் தேச சேவைக்கு அர்ப்பணித்திருக்கின்றன.

திருவண்ணாமலையில் காங்கிரஸ் இளைஞர்கள் திலகசாஸ்திரி, போளூர் நாகேசுவரன் ஆகியோர் தேசிய நாடகங்கள் பலவற்றைத் தயாரித்து வீதிகளில் தெருக் கூத்தாக நடத்தியுள்ளனர்.

வேலூர் உபயதுல்லா' விஸ்வநாத தாஸ் (கொக்கு பறக்குதடி பாப்பா புகழ்) 'அவர்களைத் தருவித்து பல நாடகங்களை நடத்தி தேசபக்தியைப் பரப்பியதுடன் அவரைக் கொண்டே வேலூர் நகரசபையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொழில் நடிகர்களான கே. பி. சுந்தராம்பாள், ஆரியகான அனந்தநாராயண ஐயர் போன்றோர் நாடகங்களில் தேசபக்திப் பாடல்களையும், வெள்ளையர் எதிர்ப்புப் பாடல்களையும் கனல் தெறிக்கப் பாடி மக்களின் கரகோஷத்தையும், ஆரவாரத்தையும், ஆதரவையும் பெறுவார்கள்.

தொழில் முறை நாடகக் கம்பெனியான மதுரை ஒரிஜினல் பாயிஸ் கம்பனியார். 'கதரின் வெற்றி' 'கவர்னர்ஸ் கப்' போன்ற தேசிய நாடகங்களையும் பிற சமூகச் சீர்திருத்த நாடகங்கள் மூலம் கதர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு ஆகிய பிரச்சாரங்களையும் சேர்த்து நடத்துவர். அதில் கே. பி. கேசவன் காளி என். ரத்தினம் ஆகியோரின் நடிப்புப் பேச்சும் மற்றவர்களின் சிந்தனையைத் தூண்டும்.

டி. கே. எஸ். சகோதரர்கள் தேசபக்தி (பாணபுரத்துவீரன்) குமாஸ்தாவின் பெண், நாமிருவர், அந்தமான் கைதி போன்ற தேசிய சமூகச் சீர்திருத்த நாடகங்களை நடத்தினர்.

நவாப் ராஜமாணிக்கம் 'இன்பசாகரன்' என்ற தேசபக்தி நாடகம் மற்றும் பல சீர்திருத்த நாடகங்களையும் நடத்தியிருக்கிறார்.

சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் தோன்றி, தாய்மொழிக்கும், தாய்த் திருநாட்டிற்கும் உயர்ந்த தொண்டாற்றி ஓங்குபுகழ் எய்தியவர் விடுதலைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்.

'வாழிய செந்தமிழ்' என்று பெற்ற மொழியையும் 'வாழிய மணித்திருநாடு' என்று பிறந்த பொன்னாட்டையும் போற்றி அவர் பாடிய நாட்டு வாழ்த்தை அறியாதார் உண்டா? **'இந்தியா'** போன்ற பத்திரிகைகள் மூலம் நெருப்பு மழை பொழியும் கட்டுரைகளையும், கனல் தெறிக்கும் கவிதைகளையும் எழுதி மக்கள் மத்தியில் தேசபக்தியை ஊட்டி வளர்த்த பெருமைக்குரியவர் பாரதியார்.



# விடுதலைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்

## வீர வரலாறு

எட்டையபுரத்தில் *1882*-டிசம்பர் 11 அன்று சின்னசாமி-லட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்து, பதினாறு ஆண்டுக்காலம் எட்டையபுரத்திலும், மூன்றாண்டுக் காலம் காசியிலும், மூன்றாண்டுக்காலம் எட்டையபுரம் அரசவைப் பணியிலும், சில மாதங்கள் மதுரையிலும், 1904-ஆம் ஆண்டு நவம்பரில் சென்னை வந்து சுதேசமித்திரன் உதவி ஆசிரியர் பொறுப்பேற்றது முதல் நான்காண்டுகள் சென்னையிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை காரணமாக 1908 செப்டம்பர் முதல் 1918 நவம்பர் வரை பத்து ஆண்டுகள் புதுச்சேரியிலும், சில மாதங்கள் மனைவியின் ஊரான கடையத்திலும், 1920 ஆகஸ்ட் முதல் 1921 செப்டம்பர் வரை மீண்டும் சென்னையிலும், வாழ்ந்து, நாட்டிற்காக, நாட்டு விடுதலை உணர்வை வளர்ப்பதற்காக, மக்கள் சமுதாய ஏற்றத்திற்காக அருந்தொண்டாற்றி 39 வயது முடிவதற்குள்ளாகவே, அழியாப் புகழை நிலை நாட்டிவிட்டுச் சென்ற பாரதியாரின் வாழ்க்கையை, **ஓர் இலட்சியவாதியின் வீர வரலாறாக** உலகமே போற்றுகிறது.

நாட்டு விடுதலைக்கு வித்திட்ட தியாக மறவர்கள் திலகர், தாதாபாய் நௌரோஜி, லாலா லஜபதிராய், அண்ணல் காந்தியடிகள், வ. உ. சிதம்பரனார், குருகோவிந்தர் ஆகியோரைப் போற்றிப் புகழ்ந்து அவர் பாடிய பாடல்கள் தேசபக்தியை என்றும் மக்கள் உள்ளங்களில் நிலைத்திடச் செய்யும் ஆற்றல் பெற்றவை.

## சுதந்திர வேட்கை

இத்தாலியில் மாஜினி என்ற மாவீரனின் உழைப்பால் எழுச்சி பெற்ற மக்கள் நடத்திய உரிமைப் போர், யுகப்புரட்சி நடத்தி, ஜாரின் தளைகளைத் தகர்த்து, வீறுடன் எழுந்து நின்ற புதிய ருஷ்யா, சுதந்திர பெல்ஜியம்- இத்தகு சொற்சித்திரங்களைத் தீட்டி, நாட்டு மக்களிடையே சுதந்திர வேட்கையை வளர்த்ததை நல்லோர் போற்றுகின்றனர்.

> **"கனல் தெறிக்கும் கவிதைகளையும், நெருப்பு மழை பொழியும் கட்டுரைகளையும் எழுதி நாட்டு மக்களிடையே சுதந்திரக் கனலை மூட்டி வளர்த்து, இந்தியத் திருநாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனிச் சிறப்பைப் பெற்றிருப்பவர் விடுதலைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்."**

1905-இல் வங்கப் பிரிவினையை ஒட்டி, வங்கத்தில் எழுந்த கிளர்ச்சியில் சுயராஜ்யக் கிளர்ச்சி வெடித்தது. அவ்வமயம் சென்னைக் கடற்கரையில் பாரதியார் பாடிய 'வங்கமே வாழிய' என்ற பாடல் இளைஞர் நெஞ்சில் எழுச்சியை ஊட்டியது.

1905-இல் காசியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கும், 1906-இல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிற்கும், 1907-இல் சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்கும் பாரதியார் சென்று வந்தார்.

மராட்டிய மாவீரர் லோகமான்ய திலகரின் தீவிர வாதக் கொள்கையை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். வங்கச் சிங்கம் விபின்சந்திரபாலை அழைத்துச் சென்னைக் கடற்கரையில் பேச வைத்தார். பாரதியார் லாலாலஜபதிராய் நாடு நடத்தப்பட்டதைக் கண்டித்து, உணர்ச்சிமிகு பாடல்களைப் பாடினார். வ.உ. சிதம்பரனாரின் தன்னலமற்ற நாட்டுப் பணியை பத்திரிகைகளில் போற்றி எழுதினார். அவரது சுதேசிக் கப்பல் கம்பெனி முயற்சியை ஆதரித்து எழுதினார். நாடு முழுவதும் சுயராஜ்ய தினம் கொண்டாடப்பட்டதை ஒட்டி, தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும் சுயராஜ்ய தினம் கொண்டாடியதால், கைது செய்யப்பட்டனர். பாரதியார் ஆங்கிலேயர் செயலைக் கண்டித்ததோடு, அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்பதற்காக வழக்கு நிதி திரட்டத் துணை நின்றார்.

1908-இல் விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த பாரதியார் நண்பர்களின் யோசனைப்படி புதுச்சேரிக்குத் தப்பிச் சென்றார். 1918 நவம்பர் 20-ல் புதுவையை விட்டு, பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் நுழைய முயற்சி செய்தபோது, எல்லையில் கைது செய்யப்பட்டு, கடலூர் சிறையில் 21 நாட்கள் காவலில் வைக்கப்பட்டார்.

## அண்ணல் காந்தியடிகளுடன் பாரதியார்

பிறகு டிசம்பர் 14-இல் நிபந்தனைகளுக்குட்பட்டு விடுதலை அடைந்தார். 1919-இல் காந்தியடிகளைச் சென்னையில் சந்தித்து ஒத்துழையாமை இயக்கத்திற்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

சுதந்திரம் பெறுவதற்கு முன்பாகவே 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று, ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே'' என்று பாம சுதந்திரக் கனலை நாட்டு மக்கள் நெஞ்சில் வளர்த்து நம்பிக்கை ஊட்டிய மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் பாரதியாரின் புகழ் சுதந்திர வரலாற்றில் என்றும் ஒளி வீசிக்கொண்டிருக்கும்.

— வ. இராசமனோகரன்

நம் இந்தியத் திருநாட்டில் விடுதலை வேள்வி துவக்கப்பட்ட காலத்தில் அதில் பெரும் பங்கு வகித்தது தமிழகம். குறிப்பாகத் தமிழ்நாட்டு வீராங்கனைகளும் ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் பங்கேற்றனர். அந்த மங்கையர் திலகங்கள் பற்றிய விவரக் கட்டுரை இது.

# விடுதலைப் போரில் வீராங்கனைகள்



இந்தியாவில் கும்பினி ஆதிக்கத்தை எதிர்த்து விடுதலை வேள்வி துவக்கப்பட்ட ஆரம்பக் கால கட்டம், இந்திய விடுதலையின் 40-வது ஆண்டு விழா கொண்டாடும் இந்நாளில் நாம் எண்ணிப் பார்த்து இறும்பூது எய்தத்தக்கது ஆகும். அதிலும் குறிப்பாக, எழுச்சிகொண்டு அந்நாளில் வெகுண்டெழுந்த தாய்க் குலத் தலைமையாளர்களை நாம் நினைவுகூர்தல் நன்று.

ராஜபுத்திர குலத்தில் பிறந்த பத்மினி, கோண்ட்வானா மாநிலத்தில் பிறந்த துர்க்காவதி, மகாராட்டிரத்தில் பிறந்த தாரா பாய், ஜான்சி நாட்டு அரசி ராணி லட்சுமிபாய் போன்ற மங்கையர் திலகங்கள் இந்தியாவைச் சூழ்ந்த அடிமை இருள் விலக்க அரும்பாடு பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

மதுரை மங்கம்மாளைப் போலத் தமிழகத்தில் போராட்டக் களம்கண்டு புகழ்பெற்ற பெண்மணிகள் பலராவர். இந்திய விடுதலைப் போரில் தம் வாழ்வையே தியாகம் செய்த அந்தத் தன்மானப் பெண்மணிகள் பற்றிய விவரக் குறிப்புகளின் தொகுப்பே இந்தக் கட்டுரை.

'விடுதலைப் போரில் கர்நாடகம்' என்ற நூலில், இந்தியாவில் முதன்முதலாக விடுதலை எழுச்சிக்கு வித்திட்டவரே பெண்மணி தான் என்கிற குறிப்புக் காணப்படுகிறது.

'1824-ல் நடந்த கிட்டூர்ச் சென்னம்மாளின் போராட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஜான்சி ராணி லட்சுமி பாய்க்கு ஒரு தலைமுறைக்கு முன்பாகவே, கிட்டூர் ராணி சென்னம்மா ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி, இந்தியாவிலேயே முதல் புரட்சியாளராக விளங்கினார்' என்று அந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதற்குக் கால்நூற்றாண்டுக்கு முன்பே தமிழகத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டியக் கட்டபொம்மனால் எழுச்சிக் கனல் மூட்டப்பட்டதும், அந்நூலில், தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விடுதலைப் போரில் இறங்கிய முதல் பெண்மணி என்கிற பெருமை வேண்டுமானால் அவருக்குச் சேரக்கூடுமா என்றால் அப்படியும் தெரியவில்லை.

## வேலு நாச்சியார்

ஏனென்றால் 1783க்கு முன்பே கர்னல் ஸ்மித் என்பானோடு, சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த முத்துவடுகரும், அவரது அன்பு மனைவி வீரமங்கை வேலு நாச்சியாரும் போரிட்டார்கள் என்கிறது நம் சுதந்திர காலத் தமிழக வரலாறு.

போரில் முத்துவடுகர் மாண்ட பின்னர், அதே வீர உணர்வுகளோடு சிவகங்கையை வேலு நாச்சியாரே ஆட்சிசெய்து வந்திருக்கிறார். பிறகுதான் பெரிய மருது சின்னமருது இருவரும் ஆட்சிப் பொறுப்பேற்றனர்.

ஆகவே, விடுதலைப் போரில் முதலிடம் பெறுகின்ற பெண்மணி யார் என்பதை ஆய்வாளர்கள் கருத்துக்கே விட்டுவிடுவோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே, நியூயார்க்கைச் சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையாரும், கர்னல் ஆல்காட் என்பாரும் 'தியோசாபிகல் சொசைட்டி' என்ற பிரம்மஞான சங்கத்தைத்தோற்றுவித்தார்கள். 1875 ல் தொடங்கப்பட்ட அச்சங்கத்தில், அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான அன்னி பெசண்ட் அம்மையார்சேர்ந்தார். பின்னர் அவர் சென்னை வந்து சேரவே, 1883ல் அச்சங்கத்தின் தலைமை நிறுவனம் அடையாறில் நிறுவப்பட்டது.

இந்தியாவில் தேசியக் கல்வி பரப்புவதில் இச்சங்கம் மிகவும் ஈடுபாடு கொண்டது.

1916ல், பெசண்ட் அம்மையார் காங்கிரசில் சேர்ந்தார். அவரால் தோற்றுவிக்கப்பட்ட 'ஹோம் ரூல்' இயக்கத்தை மகாத்மா காந்தியடிகளும் ஆதரித்துப் பிரச்சாரம் செய்ததுண்டு.

## அன்னிபெசண்ட்

தமிழ்நாட்டைத் தாய்வீடு போல் கொண்ட அவ்வம்மையார் இந்தியக்குடி மகளாகவே தம்மைப் பதிவுசெய்து கொண்டார். இதனாலேயே, 1917ல் கல்கத்தா காங்கிரஸ் தலைவராக்கப்பட்டார், அன்னிபெசண்ட் அம்மையார். கோவையிலும் உதகமண்டலத்திலும் இருந்த அவரது இல்லம் இரண்டும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவ்வப்போது வந்து பல்வேறு அரசியல் பிரச்னைகள் பற்றிக் கலந்தாலோசிக்கும் கேந்திரமாயின.

'காமன்வீல்' 'நியூ இண்டியா' ஆகிய பத்திரிகைகளையும் துவக்கிய அவ்வம்மையார், தமிழகத்தில் இந்திய விடுதலைக் கனல் மூட்டிய முதல் பெண்மணி என்று கூடக் கூறப்படுவதுண்டு. அந்த அளவுக்குப் பாடுபட்ட அன்னி பெசண்ட் அம்மையார், பிரிட்டிஷ் மக்களின் பார்வையை இந்தியாவின்மேல் திருப்பி வெற்றி கண்டவரும் ஆவார்.

திருமதி மார்கரெட் கசின்ஸ் என்கிற வெள்ளைக்காரப் பெண்

மணியும் தியோசாபிகல் சங்கத்தின் சார்பில் காங்கிரசில் சேர்ந்தார். 1932ல் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைபுகுந்தவர் இவர், 1893ல், இந்தியக் கம்பனியின் வழக்கொன்றை நடத்துவதற்காகத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார் காந்தியடிகள். அந்நாட்டில் இந்தியர் படும் அல்லல் அவர் கவனத்தில் பட்டது. அங்கே நிறவெறி பிடித்த வெள்ளையரால் ஒப்பந்தக் கூலிகளாக நடத்தப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலோர் சென்னையிலிருந்து கொண்டு செல்லப்பட்டோரோவார்.



## தில்லையாடி வள்ளியம்மை

இதனால், அங்கு நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்களில் பெரும்பாலும் தமிழர்களே பங்கேற்றார்கள். தில்லையாடி வள்ளியம்மை என்ற தமிழகத்து வீராங்கனை அப்படிப் போராடியவர்களில் குறிப்பிடத்தக்கவராவார். சத்தியாக்கிரகப் போராட்டம் காரணமாகத் தமது 17ஆம் வயதில் சிறையில் அடைக்கப்பட்ட அவர், சிறைக்கொடுமை தாங்காமல் நோயுற்று, விடுதலை செய்யப்பட்ட சில நாளிலேயே மாண்டுபோனார். மணவிழாக் கூட காணாத அப்பெண்மணிக்கு மரணவிழா எடுக்கப்பட்டது.

இதற்கெல்லாம் பின்னாலே தான அப்போராட்டத்தில் தாமே ஐக்கியமாகித்தீவிரம் காட்டினார் காந்தியடிகள். சத்தியாக்கிரகப் போராட்டம் வெற்றிபெற்றது.

தென்னாப்பிரிக்காவிலிருந்து 1914ல் இந்தியாவுக்குத் திரும்பிய காந்தியார், அப்படியொரு விடுதலை வேள்வி இங்கேயும் துவக்கப்படவிருப்பதை உணர்ந்தார். கோபாலகிருஷ்ண கோகலே அவருக்கு அரசியல் வழி காட்டியானார்.

''பலன் ஏதும் கருதாமல் தென்னாப்பிரிக்காவில், தியாகம் செய்து வெற்றிகண்டவர்கள்தான் எனக்கு முதன்முதலில் விடுதலை உணர்வூட்டிய பெருமைக்கு உரியவர்கள்'' என்று பின்னர் சென்னை வந்திருந்தபோது திருவல்லிக்கேணி கடற்கரை திலகர் கட்டடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசும்போது பெருமிதத்தோடு குறிப்பிட்டார் காந்தியார். மாயவரம் சென்று, அதற்கு அருகாமையில் உள்ள தில்லையாடியில் இருந்த வீரமாது வள்ளியம்மாள் வீட்டுக்குச் சென்று மரியாதை செலுத்தி வரவும் அவர் தவறினாரில்லை.

## நாகம்மையார்-கண்ணம்மாள்

1921ல் இரண்டாவது முறையாகச் சென்னைக்கு வந்த காந்தியடிகள், தமிழகத்தின் பல ஊர்களுக்கும் சென்றார். அப்போது ஈரோட்டுக்குச் சென்றபோது பெரியார் ஈ.வே. இராமசாமியின் இல்லத்திற்குப் போய்த்தங்கினார். பெரியாருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் கைராட்டையில் நூல் நூற்கும் விதத்தைக் கற்றுக் கொடுத்தார். தனது மனைவியார் நாகம்மையார், தமையனார் ஈ.வே.கிருஷ்ணசாமி நாயக்கர், ஆகியோருடன் சேர்ந்து ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்ட தியாக குடும்பத்தின் தலைவரே பெரியார் ஈ.வே.ரா. கள்ளுக்கடை மறியலின்போது தமக்குச் சொந்தமான தென்னை மரங்களையெல்லாம் குத்தகைக்குவிட மறுத்ததோடு, இலாபம் எண்ணாமல் அவைகளை வெட்டித் தள்ளவும் செய்தார்.

அம்மறியலில் அவர் மனைவியார் நாகம்மாளும், சகோதரி கண்ணம்மாளும் காட்டிய தீவிரம் காந்தியடிகளாரையே வியக்க வைப்பதாக இருந்தது.

கள்ளுக்கடை மறியலைக் கைவிடுமாறு ஒருமுறை காந்தியாரிடம் வலியுறுத்தப்பட்டபோது ''அதைக் கைவிடுவது என் கையில் இல்லை; தமிழ்நாட்டைச் சேர்ந்த ஈரோட்டில் இருக்கும் நாகம்மாள், கண்ணம்மாள் என்கிற இரண்டு பெண்மணிகள் தான் அந்த அமைப்பைத் தலைமை தாங்கி நடத்துகிறார்கள்; அவர்களிடம் போய்ப்பேசிப் பாருங்கள்'' என்றார் அவர்.

அந்த அளவுக்கு விடுதலைப் போர்க்காலத்தில் சிறப்புற்றிருந்தார்கள் அந்தப் பெண்மணிகள்!

கேரள மாநிலத்தைச் சேர்ந்த வைக்கத்தில், அரிசன மக்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வந்தார்கள். ஆலயங்களுக்குள்ளே புக மட்டுமல்ல; முக்கிய வீதிகளிலே நடக்கவும் கூடாதென தடுக்கப்பட்டிருந்தார்கள். அந்த நிலை நீங்க, 'வைக்கம் போராட்டம்' பெரியார் ஈ.வே.ரா. தலைமையில் நடத்தப்பட்ட போதும் திருமதி நாகம்மாளும், திருமதி கண்ணம்மாளும் அதில் ஈடுபட்டுச் சிறைத்தண்டனை பெற்றார்கள்.

நாகம்மையார்



அந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலே வெற்றிகண்ட பெரியார் ஈ.வே.ரா. 'வைக்கம் வீரர்' என்றே சிறப்புறக் குறிப்பிடப்பட்டார்.

7.8.1724ல் திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீமூலம் இறந்துபோன பின், பட்டத்திற்கு வந்த மகாராணி சேதுபார்வதியம்மாள் அந்தச் சத்தியாகிரகத் தியாகிகளுக்கெல்லாம் பொது விடுதலையளித்தார்.

1930ஆம் ஆண்டு, இந்திய விடுதலைப் போரின் ஓர் அங்கமாகத் தமிழ்நாட்டில் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது. அப்போது, அப்போராட்டத்தில் பங்கேற்று ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றவர்களில் செல்வி துர்க்காபாய், திருமதி ருக்மணி லட்சுமிபதி இருவரும் குறிப்பிடத்தக்க தியாகப் பெண்மணிகளாவர்.

மதுரையைச் சேர்ந்த எல். கிருஷ்ணசாமிபாரதியின் மனைவி

# அரவிந்தர்



1908ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், முப்பதாம் நாள், குதிராம்போஸ், பிரபுல்லாசாகி என்ற இரண்டு வாலிபர்கள், பீகார், முசப்பர்பூரின் மாவட்ட நீதிபதி கிங்ஸ்போர்டின் வண்டி என்று எண்ணி, ஒரு வண்டி மீது வெடிகுண்டு எறிந்தார்கள். அந்த நீதிபதி பல பத்திரிகை ஆசிரியர்களுக்கும் கடும் தண்டனை அளித்தவர்; ஒரு சிறுவனுக்குச் சவுக்கடித் தண்டனையையும் விதித்தவர். அதற்குப் பழிவாங்கவே புரட்சியாளர்கள் திட்டமிட்டுக் குண்டு வீசினார்கள்.

ஆனால், வண்டியில் கிங்ஸ்போர்டு வரவில்லை. இந்தியர்களின் அன்புக்குப் பாத்திரமான பிரிங்கல் கென்னடி என்பவரின் மனைவியும் மகளும் குண்டு வீச்சின் காரணமாக உயிர் இழந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியால் நாடெங்கும் பரபரப்பு உண்டாயிற்று. போலீஸ்காரர்கள் விரைவில் இரண்டு புரட்சிக்காரர்களையும் கைது செய்து விட்டார்கள்; கல்கத்தா மானிக்தல்லாவில் ஒரு வெடிகுண்டு உற்பத்திச்சாலை இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். அது சம்பந்தமாக, அரவிந்தரின் தம்பி பாரீந்திரகுமார் கோஷையும் இன்னும் சில இளைஞர்களையும் கைது செய்தார்கள்.

புரட்சிக்காரர்களைத் தூண்டிவிடுபவர் அரவிந்தரே என்பது அரசின் எண்ணம். அரவிந்தர் கைது செய்யப்பட்டார்.

'அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு என்று பிரபலமான இவ்வழக்கு ஓராண்டுக்காலம் நடந்தது. மற்றவர்களோடு அரவிந்தரும் அலிப்பூர் சிறையிலேயே வைக்கப்பட்டார். அப்போது, சிறையில் ஏ.பி.சி. என்ற வகுப்புப் பிரிவினைகள் ஏற்படவில்லை. எல்லா விதக் கைதிகளும் ஒரே சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஒரேவிதமாகவேலை வாங்கப்பட்டார்கள். வெடிகுண்டு வழக்கு என்பதால் இக்கைதிகள் அதிகமாய்த் துன்புறுத்தப்பட்டார்கள்.

அரவிந்தருடைய சொற்பொழிவுகள், - வந்தேமாதரத்தில் அவர் எழுதிய கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றை ஆதாரமாக வைத்து அவர்மீது குற்றம் ஜோடனைசெய்யப்பட்டிருந்தது. அவர் சதிகாரர்களைத் தூண்டிவிட்டதாகவும், சுதந்திரத் தாகத்தை உண்டாக்கியதாகவும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது.

புகழ் பெற்ற ஈ.நார்டன் துரை அரசாங்கத்தின்சார்பில் தோன்றினார். சித்தரஞ்சனாரின் குறுக்கு விசாரணைத் திறனும், சட்ட ஞானமும் நீதிபதியையும், வக்கீல்களையும், மக்களையும் பிரமிக்க வைத்தன.

நீதிபதி தீர்ப்புக் கூறினார்: அரவிந்தர் குற்றவாளி அல்ல.

அவர் விடுதலையானார்; இன்னும் சிலரும் விடுதலை பெற்றார்கள்; பெரும்பாலோர் நாடு கடத்தப்பட்டனர்.

---

யார் திருமதி கே. லட்சுமி பாரதி என்பாரும் இந்திய விடுதலைப் போரில் களம்கண்டுசிறைசென்று சிறப்புற்றார். தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1937ஆம் ஆண்டிலும் 1946ஆம் ஆண்டிலும் உறுப்பினராக அங்கம் வகித்தவர் இவர்.

## அம்புஜம்மாள்

அந்நியத் துணிக்கடை மறியலில் ஈடுபட்டு திருமதி எஸ். அம்புஜம்மாள், ஜானாம்பாள், கமலா பாய், லட்சுமிசங்கர ஐயர் போன்றோரும் சிறைத் தணடனை ஏற்றார்கள். அந்த போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைத்தண்டனை ஏற்ற திருமதி பி. லீலாவதி, லலிதா பிரபு இருவரும் தலைச்சேரி நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிக்கப்பட்டனர். அவாகள் கழுத்தில் கிடந்த தாலிக்கயிறும் போலீசாரால் அகற்றப்பட்டது. இதனால், 'தாலியறுத்தான் தலைச்சேரி' என்றே அவ்வூர் அப்போது குறிப்பிடப்பட்டது.

அதை எதிர்த்து இந்திய மகளிர் சங்கம் சார்பில்-திருமதி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, அம்மு சுவாமிநாதன், ஜி. விசாலாட்சி ஆகியோரால் கண்டனக் கூட்டங்கள்நடத்தப்பட்டன; எதிர்ப்பு அறிக்கைகள் விடப்பட்டன.

திருமதி சுப்பம்மாள், கன்னட மாநிலத்தில் உள்ள பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டார். சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக இருந்த மாதவ மேனன் என்பாரின் மனைவி திருமதி குட்டியம்மாளு அம்மாள் கைக்குழந்தையோடு சிறை புகுந்தார்.

## சரஸ்வதி பாண்டுரங்கம்

ஒரு சந்தர்ப்பத்தில், தேசபக்தர்களுக்கு யாரும் வீடு வாடகைக்குத் தரக்கூடாது என்று அரசே அறிவித்ததால், திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் அம்மையாரும் திருமதி அஞ்சலையம்மாளும் போலீஸ் கமிஷனர் அலுவலக வளைவுக்குள்ளேயே போய் அடுப்புப் பற்ற வைத்துச் சோறாக்கி எதிர்ப்பைக் காட்டினார்கள்.

திருமதி மரகதம் சந்திரசேகர், திருமதி ராதாபாய் சுப்பராயன், மீராபாய், திருமதி நீலாவதிசுப்பிரமணியம், டாக்டர் பிச்சமுத்து அம்மாள், என்.எம்.ஆர்.எஸ். பர்வதவர்த்தனி, கே.எஸ். பர்வதவர்த்தனி போன்ற இன்னும் பல பெண்மணிகளும் விடுதலைப் போர்க்களம் புகுந்து சிறை சென்றார்கள்.

சுதந்திரப்போர் மூண்ட காலத்தில், அந்த எழுச்சிக் கனல் மங்காமல் ஒளி விட அரும்பாடுபட்ட தமிழகப் பெண்மணிகளை நினைவுகூரும் நாம், அனைத்திந்திய அளவில் இவ்வகையில் பங்கேற்றவர்களையும் மறந்துவிட முடியாது.

கடமை வீரரான காந்தியடிகளாரின் துணைவியார் கஸ்தூரிபா அம்மையாரும், மோதிலால் நேருவின் மனைவியார் சொரூபராணியும், கவியரசி சரோஜினியும், அவரது சகோதரிகளில் ஒருவரான மிருணாளி சட்டோபாத்யாயாவும், அனுசூயா தேவியும் இன்ன பிறரும் இந்திய விடுதலைக்காகச் செய்த தியாகங்களும் இணையற்றவைகளாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

— ராஜு



# மூதறிஞர் இராஜாஜி
# சேலம் விஜயராகவாச்சாரியார்

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இராஜகோபாலாச்சாரியார் அவர்களும், விஜயராகவாச்சாரியார் அவர்களும் சேலம் மாவட்டத்தில் இருபெரும் மனிதர்களாகத் திகழ்கின்றனர்.

இராஜாஜி அவர்களும், விஜயராகவாச்சாரியார் அவர்களும் சேலத்தில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து, மக்களின் நல்வாழ்வுக்காகவும், நீதிக்காகவும், நேர்மைக்காகவும் பாடுபட்டு வந்தனர். பின்னர் இராஜாஜி அவர்கள், சேலம் நகரசபைத் தலைவராகப் பதவி வகித்தார். 'இந்து சமூகத்திலுள்ள சாதி வேற்றுமையை ஒழித்துத் தேச முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்'' என்று மக்களுக்கு எடுத்துக் கூறினார்; அதன் பின்னர், சென்னை உயர்நீதி மன்றத்தில் தமது வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்.

சென்னையில் இருந்த இராஜாஜியின் விருந்தினராக, காந்தயடிகள் வந்து தங்கியிருந்தார். ஒவ்வொரு நாளும் தலைவர்கள் கூடி விவாதித்தனர். காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்தின் தத்துவங்களை இராஜாஜி தெளிவாக விளக்கினார். சென்னை நகரின் சத்தியாகிரகச் சபைக்குச் செயலாளராக இராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர், நாகபுரியில் 1920-ஆம் ஆண்டில் நடந்த காங்கிரசில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். விஜயராகவாச்சாரியார் அந்தக் காங்கிரசின் தலைவர். இராஜாஜி அந்தக் காங்கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளர்கள் மூவரில் ஒருவர். காந்தியடிகள் சத்தியாக்கிரக இயக்கத்தின் தளபதிப் பதவியை ஏற்றார்.

நாடு முழுவதும் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் 1920-ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. அதன்படி மாணவர்கள் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்வதைத் தவிர்த்தனர். வழக்கறிஞர்கள் நீதிமன்றம் செல்வதை நிறுத்தினர். அரசியல்வாதிகள் தேர்தல்களைப் புறக்கணித்தனர். படித்தவர்கள் தாங்கள் அரசாங்கத்திடம்பெற்ற பட்டங்களையும், பரிசுகளையும் துறந்தனர். அந்நிய நாட்டுத் துணிகள், பொருட்கள் வாங்குவதை மக்கள் நிறுத்தினர். இவற்றால் அரசாங்கம் பாதிக்கப்பட்டது.

பிரிட்டிஷார் தங்களது பொருட்களை முக்கியமாக இந்தியாவில்தான் விற்றனர். இப்போது இந்தியர்கள் அந்நியப் பொருட்களைப் புறக்கணித்தவுடன் பிரிட்டிஷாரின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. எனவே அரசாங்கம் அடக்கு முறையைக் கையாண்டு மக்களைச் சிறையில் அடைத்தது. காந்தியடிகள், சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு, பண்டித நேரு, இராஜாஜி, இராஜேந்திர பிரசாத், டாக்டர் அன்சாரி, வல்லபாய் படேல், அபுல்கலாம் ஆசாத், சுபாஷ் சந்திரபோஸ் போன்ற பெருந்தலைவர்கள் தங்கள் திரண்ட செல்வத்தையும், தொழிலையும் துறந்து சிறையில் வதைபட்டனர்.



காங்கிரஸ் முதலில் டொமினியன் பொறுப்பாட்சி முறை அடையப் பாடுபட்டது; ஆனால் 1929-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி லாகூரில் பண்டித நேருவின் தலைமையில் காங்கிரஸ் கூடி 'பூரண சுதந்திரம் இந்தியாவின் குறிக்கோள்' என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

'பூரண சுதந்திரம்' பெற வேண்டிய காந்தியடிகள் தமது சத்தியாக்கிரகத்தின் இரண்டாவது கட்டமாக சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். இந்தியாவின் மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருப்பினும் உப்புத்தயாரிக்க இந்தியர்கள் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு உப்பு வரி கட்ட வேண்டியிருந்தது. இந்த உப்புச் சட்டத்தை எதிர்த்து காந்தியடிகள் குஜராத்திலுள்ள தமது ஆசிரமத்திலிருந்து 150 மைல்கள் நடந்து மேற்குக் கரையில் தண்டி என்னும் இடத்தை அடைந்தார். தேசிய வீராங்கனை சரோஜினி தேவி யாரும், ஆயிரக்கணக்கான தொண்டர்களும் அவருடன் சென்று உப்புச் சட்டத்தை மீறி உப்பு எடுத்தனர்


அதே நாளில் இந்தியாவெங்கும் தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறினர்.

தமிழ்நாட்டில் இராஜாஜி தலைமையில் வேதாரண்யம் என்னும் இடத்தில் உப்பு எடுக்கப்பட்டது. அரசாங்கம் அடக்கு முறையைப் பயன்படுத்தி, இலட்சக்கணக்கானவர்களைச் சிறையில் அடைத்தது. தமிழகத்தில் காமராஜ், சர்தார் வேதரத்தினம்பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை போன்றவர்கள் இராஜாஜி தலைமையில் சிறை சென்றனர். நேரு, பட்டேல், லால்பகதூர் போன்ற தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

நன்றி: 'சேலம் மாவட்டம்'
— மணிமேகலைப் பிரசுரம்

# சர்தார் வல்லபாய்படேல்

குஜராத்தில் உள்ள கெய்ராவில் மழையின்மையால் உழவர்கள் அவதிப்பட்டனர். ஆனால் ஆங்கிலேயரோ வரி கொடுக்கச் சொல்லி அப்போதும் துன்புறுத்தினர். வரிகொடா இயக்கம்நடத்த காந்தியடிகள் விரும்பினார். அதேநேரத்தில் காந்தியடிகளுக்கு பீகாரில் இருந்து கவனிக்கவேண்டிய பணிகள் பல காத்திருந்தன. எனவே வரி கொடா இயக்கத்தை வல்லபாய்படேல் தலைமையில் நடத்துவதென முடிவு செய்தார். ஒத்துழையாமை நெறியை முழுமையாகக் கையாளும் முறைகளை வகுத்தளித்தார். காந்தியடிகள் இந்தியாவில் நடத்திய முதல் அறப்போர் இதுவேயாகும். இம் முதல் போருக்குத் தலைமை வகித்தவரே வல்லபாய்படேல் ஆவார்.



பர்தோலி உழவர்கள் மீது அளவிற்கு அதிகமான வரிவிதித்திருந்தது. திடீரென மேலும் 25 விழுக்காடு உயர்த்திவிட்டது. இக்கொடுஞ்செயலை எதிர்த்து வரிகொடா இயக்கம் வல்லபாய் படேலின் தலைமையில் நடந்தது. இதில் 17000 குடும்பங்கள் பட்டேலுடன் ஈடுபட்டன. பர்தோலி மாநில ஆளுநர் வல்லபாய் படேலை ''வெளியூர்ப் பேர்வழி வெளியேற வேண்டுமென'' செய்தி அனுப்பினார். அதற்குப் படேல் ''நாங்கள் வெளியூர்ப் பேர்வழிகளானால்? வெள்ளையர்கள் உள்ளூர்ப்பேர்வழிகளா, இது பர்தோலிக்கு மட்டுமல்லாமல் இந்தியாவின் எல்லாப் பகுதிக்கும் உரிமையுடையவர்களின் உரிமைப்போராகும்,, என விடையளித்தார்.

வல்லபாய்படேலின் விடா முயற்சியால் அப்போராட்டம் வெற்றியடைந்தது. உள்ள உறுதியுடன் இந்த அறப்போரை நடத்திய வல்லபாய் படேலை காந்தியடிகள் சர்தார் (தளபதி)என்று விளித்தார். இப்பட்டம் பின்னால் நிலைபெற்று விட்டது.

1930இல் உப்பு சத்தியாகிரகத்தில் சேர்ந்து போராடி மூன்று மாதம் சிறையிலிருந்தார் 1939இல் இரண்டாம் உலகப் போர் மூண்டதும் சிறைப்பட்ட பட்டேல் 1941இல் விடுதலை பெற்றார். 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் நாள் ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தில் ஈடுபட்டு சிறைப்பட்ட பட்டேல் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 1945 ஜூன் 18-ல் தான் விடுதலை ஆனார்.

# 'பாரதரத்னா' எல்லை காந்தி



காந்தியடிகள் தலைமையில் அறவழிப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களுள், குறிப்பிடப்பட வேண்டியவர் 'எல்லை காந்தி' என இந்தியர்களால் அன்புடன் அழைக்கப்படும் கான் அப்துல் கபார்கான் ஆவார்.

98 வயதான எல்லை காந்தி, இந்தியக் குடிமகனாக இல்லாவிட்டாலும் இந்திய மக்களின் சுதந்திரத்துற்காகவும், இந்தியாவின் ஒற்றுமைக்காகவும் போராடித் தியாகத் தழும்புகள் பல பெற்றவர்.

இந்தியாவின் 40-வது ஆண்டு சுதநதிரத் திருநாளையொட்டி எல்லை காந்தி கான் அப்துல் கபார்கானுக்கு இந்தியாவின் மிக உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது 14-8-87 அன்று டெல்லியில் வழங்கப்பட்டது.

எல்லை காந்தி உடல் நலமின்றிச் சிகிச்சை பெற்று வருவதால், அவரது புதல்வர் திரு கான் அப்துல் வாலிகான் தமது தந்தையின் சார்பில் இந்த விருதை இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கடராமன் அவர்களிடம் பெற்றுக் கொண்டார்.



# தமிழ் நாடகத்தில் விடுதலைப் போராட்ட உணர்வு!


—எஸ். ஆர். ஜானகி

சின்ன வயதிலேயே நாடக ஆர்வம் ஏற்பட்டு, அதில் பங்கேற்றேன். பாலபார்ட்டாக நடித்தேன். நல்லதங்காளில் அவளது குழந்தையாகவும் - அரிச்சந்திரன் நாடகத்தில் லோகிதாசனாகவும் நடித்திருக்கிறேன். வயது வந்த பின்னர் சேலம் சென்று, ஆர்ட்டிஸ்ட் பொன்னுசாமி பிள்ளை நாடகக் கம்பெனியில் தோழி வேடம் போட்டேன். அதன் பின்னர் பவளக்கொடி, அல்லி அர்ஜுனா, கோவலன் ஆகிய நாடகங்களில் ராஜபார்ட் வேடம் ஏற்றேன்.

எம். ஆர். சந்தானலட்சுமி, டி.பி. ராஜலட்சுமி, ரத்னாபாய், சரஸ்வதிபாய் போன்றவர்களுடன் ராஜபார்ட் வேடத்திலும், பி.எஸ். வேலுநாயர், வி.ஏ. செல்லப்பா போன்றவர்களுடன் ஸ்திரீபார்ட் வேடத்திலும் நடித்திருக்கிறேன்.

அக்காலத்தில் கலை ஆர்வத்தின் காரணமாக நாடகத்தில் நடித்து வந்தாலும், நாட்டின் மீதுள்ள ஆர்வத்தால் எத்தனையோ நடிகர்கள் தேசபக்தி மிகுந்த பாடலைப் பாடி வந்தார்கள். நானும் தேச பக்தியினால் ஈர்க்கப்பட்டு நாட்டுப்பற்று மிக்க பாடல்களைப் பாடி வந்தேன்.

**'கதர்க் கப்பல்' கொடி தோணுதே'**
**'பகதூர்' பகவத்' சிங்கம்',**
**'சுதந்திர ஜோதி தெரியுது பாரீர்''**



—போன்ற பாடல்களையும், மகாகவி பாரதியாரின் 'நெஞ்சில் உரமுமின்றி' என்ற பாடலையும் பல முறை மேடையில் பாடியிருக்கிறேன்.

இவை தவிர அன்றாடச் செய்தித்தாள்களைப் படித்து அதிலுள்ள அரசியல் முக்கியத்துவமுள்ள நிகழ்ச்சிகளை நாடகப் பாடலாசிரியர் இசக்கி முத்து வாத்தியாரிடம் சொல்லி, பாடல்களாக எழுதிவாங்கி, அவற்றை மக்கள் மன்றத்தின் முன்னே பாடி, அவர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறேன்.

**நாடகத்துறையிலும் திரையுலகிலும் புகழ்க் கொடி நாட்டிச் சிறந்து விளங்கும் திருமதி எஸ்.ஆர். ஜானகி அவர்கள் விடுதலைப் போர்க் காலத்தில் நாடக மேடையில் தேசிய உணர்வு ததும்பும் பாடல்களைத் துணிவுடன் பாடி, வீர வரலாறு படைத்தவர். அவர் தமது அனுபவத்தைத் தெரிவிக்கிறார்.**

அக்காலத்தில் நடிகர்களுக்குப் பாட்டுப் பாடவும் தெரிந்திருக்க வேண்டும். பாடத் தெரிந்தவர்களுக்குத்தான் நடிக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

மேலும், அந்த நாட்களில் மேடைகளில் ஒலிபெருக்கிக் கருவி கிடையாது. கடைசி வரிசையில் அமர்ந்திருக்கும் ரசிகருக்குக்கூட நன்கு கேட்கும் வண்ணம் சத்தம் போட்டுப் பேச வேண்டும். மின் விளக்குகளும் கிடையாது. கியாஸ் விளக்கை வைத்துத்தான் நாங்கள் நாடகம் நடத்தி வந்தோம். சுருக்கமாகச் சொன்னால் விளக்கு வெளிச்சத்தில் தான் நாங்கள் கலை விருந்து படைத்தோம். இந்தக் காலத்து நாடகங்கள் அரங்கின் உள்ளே இருட்டில்தான் நடத்தப்படுகின்றன.

ஒருமுறை தூத்துக்குடியில் 'டம்பாச்சாரி' என்ற நாடகத்தில் ராஜபார்ட் வேடம் ஏற்று தேசபக்தி மிகுந்த பாடலைப் பாடி நடித்துக் கொண்டிருந்தேன்.

வந்தேமாதரம் என்னுங்கள்—சுயாட்சி
வந்தே தீரும் என்னுங்கள்

—என்ற பாடலைப் பாடிக்கொண்டிருந்தேன். அன்று எங்கள் நாடகத்திற்கு வந்திருந்த 'சுதந்திர வீரன்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் ஜே.பி. ரோட்ரிக்ஸ் 'தேச பக்திமிக்க பாடல்களைப் பாடுறீங்களே தவிர கதர் ஆடை அணியாமல் இருக்கிறீங்களே' என்ற சொல்லியவாறு ராஜபார்ட் வேடம் தாங்கியிருந்த என்னிடம் வந்து ஒரு ஜோடி கதர் கால்சராய், சட்டை, குல்லா ஆகியவற்றை வழங்கி, 'இதைத்தான் நீங்கள் இனிமேல் அணிந்து கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் சொண்டார்.

இந்த நிகழ்ச்சிக்குச் சில மாதங்கள் கழித்து மதுரையில் நாடகம் போடுவதற்குச் சென்றோம். அப்போது ஒரு நாள் ரோட்ரிக்சும், காமராஜரும் என் இருப்பிடத்திற்கு வந்து 'முத்துராமலிங்கத் தேவரின் பிரசங்கம் இன்று நடைபெறுகிறது' என்று சொல்லி, என்னை அழைத்துச் சென்றார்கள். தேவரின் வீர முழக்கம் கேட்டு நான் பிரமித்துப் போய் விட்டேன். அவரது பிரசங்கம் என்னை வெகுவாக ஈர்த்தது; இனிமேல் கதராடையே அணிவது என்ற குறிக்கோளை மேற்கொண்டு, அன்று முதல் கதராடை அணியத் தொடங்கினேன்.

நாடக மேடையில் தேச பக்திப் பாடலைப் பாடியதால் பயங்கரமான தொல்லைக்கு நான் ஆளாக நேர்ந்தது. 1932ஆம் ஆண்டு என்று நினைவு. கள்ளிக்கோட்டையில் நாங்கள் முகாமிட்டிருந்தோம். கணபதி கான சபாவின் சார்பில் டவுன் ஹால் தியேட்டரில் எங்களது 'அல்லி அர்ஜுனா' நாடகம் நடந்து கொணடிருந்தது. நான் அதில் அர்ஜுனன் வேடம் ஏற்று நடித்துக்கொண்டிருந்தேன். அந்நியத் துணி பகிஷ்கரிப்பு நிகழ்ச்சி நடைபெற்ற சமயம் அது. கண்ணனூர், கள்ளிக்கோட்டை ஆகிய ஊர்களில் பொது மக்கள் ஏராளமாகத் திரண்டு சென்று அந்நிய மில் துணிகளை நெருப்பிலிட்டுக் கொளுத்தினார்கள். அந்த வீர உணர்ச்சி என்னுடைய உள்ளத்தில் ஓர் உந்துதலை ஏற்படுத்தியிருந்தது.

நாடகத்திலே அல்லியால் அர்ஜுனன் தண்டனை அடையும் காட்சி வருகிறது. தண்டனை அடைந்த அர்ஜுனன், கிருஷ்ண பரமாத்மாவிடம் அல்லியின் அதிகார வெறியால் தனக்குக் கிடைத்த தண்டனையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, மக்கள், "அல்லியின் அதிகார ஆட்சி இருக்கட்டும். ஆங்கில ஆட்சியின் அதிகார வெறி பற்றி ஒரு பாட்டுப் பாடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் விருப்பத்திற்கிணங்க ஒரு தேசியப் பாடலைப் பாட ஆரம்பித்தேன். உடனே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கோபாலன் என்பவர் மேடைக்கு வந்து, "தேசியப் பாடல்களைப் பாடக்கூடாது; பாடினால் கைது செய்வேன்" என்று கூறினார். ஆனால் பொதுமக்கள், "தேசியப் பாடலைப் பாடித்தான் ஆக வேண்டும்'' என்று கோரிக்கை விடுத்தனர். நானும் உணர்ச்சி வேகத்தில் தேசியப் பாடலைப் பாடினேன். உடனே சப்-இன்ஸ்பெக்டர் என்னை அந்த மேடையிலேயே கைது செய்தார். உடனே மக்கள் ஆரவாரம் செய்தனர். "கைது செய்யாதே" என்று சொல்லியவாறு ஆர்ப்பாட்டம் செய்தனர். போலீசார் தடியடி நடத்தினர்.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

உணர்ச்சிகொண்ட மக்கள் கூட்டத்தை அப்புறப்படுத்திவிட்டு, என்னையும் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

மறுநாள் அவ்வூர்ப் பிரமுகர் சி.வி. நாராயண அய்யர் அவர்கள் போலீஸ் நிலையத்திற்கு வந்து ஜாமீனில் என்னை விடுதலை செய்தார். அடுத்த நாள் நாடகம் நடத்த முயன்றோம். நாடகத்தை நடத்தக்கூடாது என்று 144 தடை உத்தரவு போட்டார்கள். தடையை மீறி நாடகத்தை நாங்கள் நடத்தினோம். முதல்நாள் பாடிய அதே தேசியப் பாடலை மக்கள் பாடச் சொல்ல, நானும் மிகுந்த ஆவேசத்துடன் பாடினேன். மக்கள் 'ஒன்ஸ்மோர்' 'ஒன்ஸ்மோர்' என்று கேட்டார்கள். மீண்டும் அந்தப் பாடலைப் பாடினேன்.

அந்தப் பாடல் இதுதான் :

காட்டுப் புலையனாம் அந்நியநாட்டான்-நம்
கைத்தொழில் யாவையும் நசித்துப்
போட்டான் - இதைக்
கேட்டு எவர்தான் நகைக்க மாட்டார்—
உண்மைக்
கிளர்ச்சி உணர்த்தவே ஆடு ராட்டே.


ஆடு ராட்டே சுழன்றாடு ராட்டே-சுய
ஆட்சியைக் கண்டோமென்று ஆடு ராட்டே

வள்ளுவர் செய்த நெசவு வேலை-
முகமது கண்டுணர்ந்த வேலை—நம்
தெள்ளுதமிழ் வெற்றிமாலை--உண்மை
தெரிந்து சுழன்று நின்று ஆடுராட்டே

ஏழைகள் கண்ணீர் சொரிந்து மிக்க வருந்தி-பல
எத்துகள் செய்தே பிழைக்கும் மனிதரெல்லாம்
வாழ முடியாது நின்ற வஞ்சனையினால்-அவர்
வாழ்க்கை சிதைந்ததென்று ஆடுராட்டே

இந்தப் பாடலைக் கேட்டு மக்கள் வெள்ளம் ஆனந்தித்துக் கரஒலி எழுப்பியது. அந்த ஒலி இன்றும் என் செவியில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நாட்களை நினைத்தே நான் இந்த நாட்களைக் கடத்தி வருகிறேன்.

# தூத்துக்குடியில் வீரமண் சேகரிப்பு



(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற நாடு முழுவதும் போராட்ட வேள்வியில் குதித்தாலும், தமிழகத்தில் சிதம்பரனார் மாவட்டத்திற்கு ஒரு தனித்துவம் உண்டு!.. ஆம். இங்குதான் வீர பாண்டிய கட்டபொம்மன், தேசியக் கவி பாரதியார், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், வீரன் வாஞ்சிநாதன் ஆகியோர் பங்கேற்ற போர்க்களங்கள் உள்ளன. இந்திய சுதந்திரத்தின் 40-வது ஆண்டு நிறைவையொட்டி இந்தியா முழுவதும் வீர வரலாறு படைத்த இடங்களிலிருந்து 'வீர மண்' எடுக்கும் பணி 7-8-87 அன்று நடைபெற்றது. தமிழகத்தில் ஐந்து இடங்களில் நடைபெற்ற இந்த விழாவில் இரண்டு சிதம்பரனார் மாவட்டத்திற்குச் சொந்தம்!..

சிதம்பரனார் சுதேசிக் கப்பல் ஓட்டிய தூத்துக்குடியின் பழைய துறைமுகத்தில் வீர மண் எடுக்கும் விழா நடந்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வீர மண் எடுக்க வந்த மூத்த தியாகி திரு. எஸ். என். சோமயாஜுலு அவர்கள் மிகவும் உணர்ச்சி வயப்பட்டு, ஆனந்தப் பரவசமடைவதாகக் குறிப்பிட்டார். தூத்துக்குடியில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் திரு. ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் அவர் பேசும்போது 'நம்மில் பலர் சுதந்திரப் போராட்டக் காலங்களைக் காணாமல் இருந்திருக்கலாம். ஆனால் அதனை நினைவுறும் வகையில் இன்று இங்கு கலந்து கொண்டிருக்கிறோம். இந்திய மண்ணில் ஒற்றுமையைப்பேணிப் பாதுகாப்பதே நமது இன்றையக்


தமிழ்நாட்டின் இரண்டாவது துறைமுக நகராகிய தூத்துக்குடி, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில், புரட்சி அரசியல் நடவடிக்கையின் புகழ் பெற்ற மையமாக விளங்கியது. இங்கு தான், காந்தியடிகளுக்கு முற்பட்ட இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்ட புரட்சி வீரர் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுதேசிக் கப்பல் கம்பெனியை அந்நிய ஆட்சியின் பொருளாதாரச் சுரண்டலை எதிர்த்துத் தொடங்கினார். அவர் செலுத்திய சுதேசிக் கப்பல்கள் இரண்டும் பிரிட்டிஷ் வணிகத்தைப் பெருமளவு பாதித்தன. தூத்துக்குடி 'கோரல் மில்' தொழிலாளர்கள் வ.உ.சி. அவர்களால் ஈர்க்கப்பட்டு அடிக் டி வேலை நிறுத்தம் செய்தனர். இந்தியப் பொருளாதாரத்தைச் சுரண்டும் பிரிட்டிஷ்காரர்களின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, ஆயிரக் கணக்கான கஜங்கள் நீளமுள்ள அந்நியத் துணிகளும், இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய அந்நியப் பொருட்களும் கொளுத்தப்பட்டது இதே தூத்துக்குடிக் கடற்கரையில் தான். இந்திய சுதேசி இயக்க வரலாற்றில் ஈடு இணையற்ற இடத்தைப் பெறும் நகரம் தூத்துக்குடி. அண்மையில் ஒரு புதிய மாவட்டம் அமைக்கப்பட்டு, தூத்துக்குடி அதன் தலைநகராக ஆக்கப்பட்டிருக்கிறது. மாபெரும் தேசபக்தர் வ.உ. சிதம்பரனார் திருப்பெயரே இந்த மாவட்டத்துக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

பாரதத்தின் தென்பகுதியிலுள்ள திருநெல்வேலி, பிரிட்டிஷ் ஆட்சிக் கெதிராக, படித்த இளைஞர்களின் தலைமையில் கிளர்ந்தெழுந்த நகராகும். திருநெல்வேலி மாவட்டத்தில் அன்றைய ஆங்கிலேயக் கலெக்டராக இருந்த இராபர்ட் வில்லியம் ஆஷின் அடக்குமுறைகளால் அந்த இளைஞர்களுக்கு வன்முறை நடவடிக்கைகளைத் தவிர வேறு வழியில்லாமல் போனது. 1911 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் நாள், நெருப்பெனக்கனன்ற இளைய வீரர்களின் தேசபக்தி, மணியாச்சி இரயில் நிலையத்தில் வெளிப்பட்டது. வாஞ்சி என்று வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட சங்கர அய்யர், மணியாச்சி இரயில் நிலையத்துக்குள் வந்து நின்ற புகைவண்டியின் முதல் வகுப்புப் பெட்டிக்குள் நுழைந்து, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளரும் மாவட்ட நீதிபதியுமாகிய இராபர்ட் வில்லியம் ஆஷைச் சுட்டுக்கொன்றார். அந்நிய அடக்குமுறையின் அடையாளமாக விளங்கிய ஆஷைச் சுட்டுக்கொன்றதில் வாஞ்சிக்கு அளவில்லா மகிழ்ச்சி! செய்த கொலைக்காக, பிரிட்டிஷ் காவலரிடம் சிறைப்படுவதைத் தவிர்க்க விரும்பிய வாஞ்சி, தன்னைத்தானே சுட்டுக்கொண்டு வீரமரணம் அடைந்தார். தாயகத்தின் விடுதலைக்காகத் தங்களைப் பலியிட்டுக் கொண்ட தன்னலமற்ற மனிதர்களின் தியாகத்தை இந்த இரயில் நிலையம் இன்றைக்கும் நினைவூட்டி நிற்கிறது.

கடமை என்று குறிப்பிட்டார்.

தியாகிகள் சுமார் 20 பேருக்கு கதர் ஆடைகள் அணிவித்து கௌரவித்தார். நிகழ்ச்சியில் பங்கேற்ற துறைமுகத் தலைவர் திரு. கே. ஏ. சுந்தரம் இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பின்னர் திரு எஸ். என். சோமயாஜுலு அவர்கள் வ. உ. சிதம்பரனார் கப்பல் விட்ட இடத்தில் 'வீர மண்' எடுத்தார். அவரைத் தொடர்ந்து தியாகிகள் திரு. வெங்கடகிருஷ்ணன், திரு. முத்து விநாயகம், திரு. செல்வராஜ் ஆகியோரும் மேலும் 20-க்கு மேற்பட்ட ஆண், பெண் தியாகிகளும் வீர மண் எடுத்துக் கலசத்தில் போட்டனர். பின்னர் விழாவில் திரு சோமயாஜுலு பேசும்போது 'நான் ஆறு வயதுச் சிறுவனாக இருக்கும் போதே சுதந்திரப் போராட்டங்களில் பங்கு பெற்றேன். சிதம்பரனார் நடத்திய போராட்டங்கள்தான் எனது சுதந்திரப் போராட்டத்திற்குக் கருவாக அமைந்தது. எனக்காக கோவில்பட்டி நீதி மன்றத்தில் சிதம்பரனார் ஆஜராகியுள்ளார். அன்று சுதந்திரத்திற்காகப் போராடியவர்களைக் கௌரவிக்க நடத்தப்படும் இந்த நிகழ்ச்சி என்னை மிகவும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. உணர்ச்சி அதிகமாகும்போது பேச முடியாது. இப்போது நான் அந்த நிலையில் உள்ளேன். இன்று நாடு பல சிக்கல்களில் உள்ளது. இந்தச் சிக்கல்கள் தீர்ந்திட 'இது நம் நாடு, நாம் இந்தியர்' என்ற உணர்வு வேண்டும். இந்த நாடு மீண்டும் அடிமையாகச் சம்மதிக்க மாட்டோம்'' என்றார்.

பின்னர் குதிரைகள் பூட்டிய அலங்கரிக்கப்பட்ட சாரட்வண்டியில் அந்தக் கலசத்தை ஏந்திய வண்ணம் திரு. சோமயாஜுலு அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். இந்த ஊர்வலத்தில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி நகர் மன்றத் தலைவர், ஊராட்சிப் பெருந்தலைவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், தியாகிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் 'வீர மண்' கலசம் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.





# மணியாச்சியில்...

**76** வருடங்களுக்கு முன்னர் மணியாச்சி புகைவண்டி நிலையத்தில் கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுவிட்டு அங்கேயே தானும் உயிரைப் போக்கிக் கொண்ட வீரன் வாஞ்சிநாதனின் உடலைத் தாங்கிய புண்ணியபூமியான மணியாச்சியில் 'வீர மண்ணை' எடுக்கும் விழாவில் தியாகி திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி கலந்து கொண்டார்.

காலை 11 மணியளவில் நடைபெற்ற விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் திரு. ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப. தலைமை தாங்கினார். இரயில்வே கோட்டப் போக்குவரத்துக் கண்காணிப்பாளர் திரு. ஸ்ரீராம் வரவேற்றார். வீரன் வாஞ்சிநாதன்மறைந்த இடத்தில் ''வீர மண்ணை'' எடுத்தபின் விழாவில் திரு. கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் பேசும்போது,

'சுதந்திரப் போராட்டத்தில் நான், என் மனைவி, குழந்தைகள் உள்பட ஆறுபேர் சிறைசென்றோம். இதைவிட மிகப்பெரிய, உயர்ந்த தியாகம் உயிர்த்தியாகம் செய்தவர் வாஞ்சிநாதன். இது போன்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் கௌரவிக்கப்படுவது மிகவும்பாராட்டுதற்குரியதாகும். மேலும் இந்த நிகழ்ச்சியில் மண் சேகரிக்கும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டதற்கு நான் என்ன புண்ணியம் செய்தேனோ?

''ரத்தக் கண்ணீர் வடித்து வளர்த்த மரம் சுதந்திரம். இதை ஆட்டிஅசைத்திடமுயல்கிறார்கள். இதை நாம் அனுமதிக்கக்கூடாது. நாட்டை அனைவரும் காத்திட வேண்டும்'' என்று கூறினார்.

இவ்விழாவில் கலந்துகொண்டு சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஆர். எஸ். ஆறுமுகம் அவர்களும் பேசினார்கள். பின்னர் வீர மண் அடங்கிய கலசத்தை எடுத்துக் கொண்டு தியாகி திரு. கிருஷ்ணசாமி பாரதி தூத்துக்குடி வந்தார். இந்தக் கலசமும் மக்கள் பார்வைக்கு வைக்கப் பட்டது.

மாலை சரியாக 3.30 மணி யளவில் குதிரைகள் பூட்டிய அலங்கரிக்கப்பட்ட சாரட் வண்டியில் தியாகி திரு. சோமயாஜுலு மற்றும் தியாகி திரு. கிருஷ்ணசாமி பாரதி ஆகியோர் புனித மண் கலசங்களை ஏந்தியவாறு அமர்ந்து வர மிகப் பெரிய ஊர்வலம் புறப்பட்டது. மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் ஏராளமான வணிகப் பெருமக்கள் மாலை அணிவித்தார்கள். ஊர்வலத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. ரெ. ஆறுமுகம், மாவட்டக்காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. அனுப்ஜெய்வால், மாவட்ட வருவாய் அலுவலர் திரு சிவ. சூரியன், தூத்துக்குடி நகர் மன்றத் தலைவர் திரு பெரியசாமி, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், தியாகிகள், மாணவ மாணவியர்கள், தொழிலாளிகள், விவசாயிகள் அரசு அலுவலர்கள் ஆகியோர் ஊர்வலத்தில் நடந்து வர, ஊர்வலம் முக்கியப் பாதை வழியாகச் சென்று தூத்துக்குடி புகைவண்டி நிலையம் சென்றது.

தூத்துக்குடி புகைவண்டி நிலையத்தில் மக்கள் கூட்டம் அலைமோதியது. அங்கிருந்து தியாக பூமியில் எடுக்கப்பட்ட வீரமண் தமது வீரப்பயணத்தைச்சென்னை நோக்கித் தொடர்ந்தது.

**தியாகபூமி திருப்பூரிலிருந்து சேகரித்து வந்த வீரமண்ணை, சுதந்திரப் போராட்ட வீரர் திரு பெரியண்ண முதலியார் இராஜாஜி மண்டபத்தில் வைக்கும் காட்சி.**



வங்கக் கடலோரம் அமைந்த சென்னைப் பெருநகரின் மெரினா கடற்கரை வெள்ளி மணற்பரப்பு, தேசியப் பெருந் தலைவர்கள் நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டிய இடமாகும். பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய், விபின் சந்திரபாலர், காந்தியடிகள், சுபாஷ் சந்திரபோஸ், சி.ஆர்.தாஸ், மகாகவி பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற பெருந்தலைவர்களும் பிறரும் பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராக இந்தத் தேசம் கிளர்ந்தெழுவதற்காக இங்கு முழக்கமிட்டார்கள்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் தேசியத் தோழரான சுப்பிரமணியசிவா, 1908இல் சென்னைக் கடற்கரையின் இப் பகுதிக்குத் திலகர் கட்டம் என்ற திருப் பெயரைச் சூட்டினார்.

இந்த இடம், பற்பல தேசியப் பெருமக்கள் தீரஞ்செறிந்த உரையாற்றக் கண்ட இடம்! பாரதத்தாயின் வீரப்புதல்வர்களும் புதல்வியரும் தங்கள் திருவடியை வைத்த இந்தத் திருமண்ணை, உறங்காத வெள்ளலைகள் ஓயாது முத்தமிட்டு இன்றும் ஒளியூட்டிக் கொண்டிருக்கின்றன.

# சென்னை திலகர் கட்டத்தில்..

ஆகஸ்ட் 7-ஆம் தேதி பிற்பகல் 4 மணி அளவில் சுதந்திரப் போராட்ட வீரர் திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் சென்னை மெரினா கடற்கரை திலகர் கட்டத்திலிருந்து வீர மண்ணை அகழ்ந்து கலசத்தில் சேகரித்தார். வீரம் விளைந்த நிகழ்ச்சிகளுக்கு வழி அமைத்துக் கொடுத்த அந்த நிலத்தை அவர் மண்டியிட்டு முத்தமிட்ட காட்சி மெய்சிலிர்க்க வைத்தது.

அவரையொட்டி, விடுதலைப் போர்த் தியாகி தளவாய், காந்தி கன்னையா மற்றும் சில தியாகிகள் அதே கலசத்தில் வீர மண்ணை இட்டு நிரப்பினார்கள்.

சென்னை மாவட்ட ஆட்சியாளர் புஜங்கராவ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், திரு. செங்கல்வராயன் சிறிது நேரம் உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''நான் 53 ஆண்டுகள் காங்கிரஸ் இயக்கத்தில் பணியாற்றி எந்தப் பரிசும் நான் பெற்றதில்லை. வீர மண்ணைச் சேகரிக்கும் பணி எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பரிசு எனக் கருதுகிறேன். இந்த வாய்ப்பை வழங்கிய தமிழக அரசுக்கும் தமிழக முதல்வர் அவர்களுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

''நாட்டுக்குத் தொண்டு செய்த பல புனிதத் தலைவர்களின் பாதச்சுவடு பட்ட திலகர் கட்டத்தை என் கால்களால் மிதிப்பதற்கு மிகுந்த வேதனையாக இருந்தது. இந்த இடத்துக்கு வந்தபோது கோயிலுக்குச் செல்வது போன்ற பூரிப்பு என் உள்ளமெல்லாம் உருவாகி- உதடுகள் எல்லாம் சிவந்து போயின.

''இந்த மண்ணுக்கு ஒரு தனி வாசனை உண்டு. அதுதான் சுதந்திர வாசனை, பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மண்ணிலே சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்த நமது மாபெரும் தலை



வர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

''இந்த இடத்திலே விபின் சந்திரபால் வீரமுழக்கமிட்டிருக்கிறார்; அன்னிபெசன்ட் உரையாற்றியிருக்கிறார்; அண்ணல் காந்தி சொற்பொழிவாற்றியிருக்கிறார், சுரேந்திரநாத்பானர்ஜி கர்ஜனை புரிந்திருக்கிறார், மகாகவி பாரதியார், அண்ணல் காந்தியடிகளைப்போற்றி 'வாழ்க நீ எம்மான்' என்ற பாடலைப் பாடிய இடம் இதுதான். இந்த மணலில் காது வைத்துக் கேட்போமானால் அது இன்றும் திலகரின் பேரை நமது காதுகளில் சொல்லிக்கொண்டிருக்கும்.

பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தைக் காப்பது நமது கடமை என்பதை உணர்ந்து இன்றைய இளைய தலைமுறையினர் செயல்பட வேண்டும்.''

பின்னர், வீரமண்ணை ஏந்திய கலசத்தை இருகரத்திலும் தாங்கியவாறு, திலகர் கட்டத்திலிருந்து ராஜாஜி மண்டபத்தை நோக்கிப் புறப்பட்டார் தியாகி செங்கல்வராயன். விடுதலைப் போர்த் தியாகிகளும், ஏனைய அனுதாபிகளும் ஊர்வலமாகச் சென்றனர். ராஜாஜி மண்டபத்தை அடையும்போது ஆவேசம் வந்த பக்தரைப் போலக் காணப்பட்ட செங்கல்வராயனுக்கு மாலை அணிவித்து, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப. வரவேற்றார்.

அவர் மாலையை அணியவந்தபோது, கலசத்தை நீட்டி 'மாலையை இதற்கு அணிவியுங்கள்' என்று செங்கல்வராயன் அவர்கள் சைகையில் காண்பித்த நிகழ்ச்சி அனைவரையும் உருக்கிவிட்டது.

இராஜாஜி மண்டபத்தின் நீண்ட படிக்கட்டுகளிலே ஆவேசத்துடன் நடந்து சென்று, அங்கு அலங்காரம்செய்து வைக்கப்பட்டிருந்த மேடையின் மையப் பகுதியிலே வீர மண் ஏந்திய கலசத்தை உற்சாகம் மேலிட வைத்து வணங்கினார் செங்கல்வராயன் அவர்கள்.



# தியாகம் விளைந்த பூமி திருப்பூரில்...

இந்தியத் திருநாட்டின் 40-வது விடுதலை நாள் விழாவினையொட்டி கோவை மாவட்டம் திருப்பூரில் 7-8-87 அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிரில், கொடிகாத்த திருப்பூர் குமரன் தடியடிபட்டு வீழ்ந்த இடத்தில் வீர மண் சேகரிக்கப்பட்டது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என். கோவிந்தன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், விடுதலைப் போராட்டவீரர் திரு. எஸ். பெரியண்ண முதலியார் அவர்கள் வீர மண் சேகரித்தார்கள். வீர மண் சேகரிப்பின்போது கொடிகாத்த குமரன் துணைவியார் அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் மற்றும் கோவை மாவட்ட விடுதலைப் போராட்ட வீரர்களும் உடனிருந்தனர்.

திருப்பூர் குமரன் அவர்கள் தனது 25-ஆம் வயதில் தேசியக் கொடியேந்தி 10-1-1932-ஆம் நாளில் ஊர்வலம் சென்றபோது ஆங்கிலேயப் போலீசாரால் கிராமங்களில் தட்டைக்காய் அடிப்பது போல் குண்டாந்தடிகளால் அடித்த போதும் தான் வீழ்ந்தாலும் தேசியக் கொடியினைக் கையில் பிடித்தபடி வீழ்ந்த இடத்தில் வீர மண் சேகரிக்கப்பட்டது.

வீர மண் சேகரித்த இடத்தில் திருப்பூர் குமரனின் திருவுருவப் படம் மலர்களால் அலங்காரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. வீர மண் சேகரிக்கும் முன்பு அந்த இடத்தில் திருப்பூர் குமரன் துணைவியார் திருமதி இராமாயி

1932-இல், கோவை மாவட்டம் திருப்பூரில் விடுதலை இயக்கத்துக்கு ஆதரவாக ஒத்துழையாமை ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. அதை நடத்தியவர் திருப்பூர்க் குமரன் என்று அனைவராலும் அழைக்கப்படுகிற குமாரசாமி என்கிற திரு. டி. நாச்சி முத்து ஆவார். ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த குமரன் காவல்துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்; அப்போதும் மூவண்ணக் கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டே கீழே விழுந்தார். திருப்பூர் அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட தீரன் குமரனின் ஆவி அங்கேயே பிரிந்தது.

அம்மாள் அவர்களும், அவர்களது குடும்பத்தாரும் மலர்களால் வழிபாடு செய்தனர். பின்பு விடுதலைப் போராட்ட வீரர் திரு. எஸ். பெரியண்ண முதலியார் அவர்கள் வீர மண் சேகரித்து கலசத்திலிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என். கோவிந்தன் அவர்களிடம் ஒப்படைத்தார். பின்பு நடைபெற்ற கூட்டத்தில் திருப்பூர் நகர மன்றத் தலைவர் திரு. என். கந்தசாமி, பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் திரு பி.என். பரமசிவம், தியாகிகள் சங்க மாநிலச் செயலாளர் திரு பி.ராமசாமி, திருப்பூர் குமரனின் சகோதரி மகன் திரு. லட்சுமணன், மாவட்ட காவல்துறை ஊரகக் கண்காணிப்பாளர் திரு எஸ். ராமநாதன், விடுதலைப் போராட்ட வீரர் திரு. எஸ். பெரியண்ண முதலியார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என். கோவிந்தன் இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

திருப்பூர் நகர மன்றத் தலைவர் திரு என். கந்தசாமி அவர்கள் பேசும்போது வீர மண் சேகரித்த இடத்தில் திருப்பூர் குமரன் நினைவாக ஒரு நினைவு வளைவு அமைக்கப்படுமென்றும், திருப்பூர் பஸ் நிலையத்திற்கு திருப்பூர் குமரன் பெயர் சூட்டப்படுமென்றும், ரூ.5 இலட்சம் செலவில் திருப்பூர் குமரன் நினைவுத்தூண் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

கூட்ட முடிவில் வீரமண் அடங்கிய கலசம் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வேனில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்திற்கு முன்பாக நாதஸ்வரக் குழுவினர் செல்ல அதனைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் வீரர்கள் சீருடை அணிந்த மாணவ மாணவியர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் போல் உடையணிந்த மாணவ - மாணவிகள், மாவட்டம் முழுவதுமுள்ள விடுதலைப்போராட்ட தியாகிகள் சென்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகள், வேன்கள் மற்றும் மாட்டு வண்டிகள் அணி வகுத்துச் சென்றன.


திருப்பூர் ரெயில் நிலையத்தை அடைந்த வீர மண் அடங்கிய கலசம் நீலகிரி துரித வண்டி மூலம் சென்னைக்கு எடுத்து வரப்பட்டது.



தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டக் களங்களாகத் திகழ்ந்த ஐந்து இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட வீரமண் கலசங்கள் சென்னை இராஜாஜி மண்டபத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட பிறகு சட்டப் பேரவைச் சிறப்புக் கூட்டத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபொழுது....



நாற்பதாவது ஆண்டு சுதந்திர விழாவினையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் டெல்லி சென்றிருந்த தமிழ்நாட்டு விளையாட்டு வீரர் திரு ஜி. இ. ஸ்ரீதரன் அவர்கள் புதுடெல்லியில் 15.8.87 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமரிடமிருந்து தேசியக் கொடியினைப் பெறுகிறார்.



நாற்பதாவது ஆண்டு சுதந்திர விழாவினையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் டெல்லி சென்றிருந்த தமிழ்நாட்டு விளையாட்டு வீரர் திரு ஜி. இ. ஸ்ரீதரன் அவர்கள் 15.8.87 அன்று புதுடெல்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமரிடமிருந்து சுதந்திரச் சுடரைப் பெறுகிறார்.

# சுதந்திர தின ஓட்டம்



இந்தியத் திருநாட்டின் 40வது சுதந்திர தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் நாடுமுழுவதும் மாநிலத் தலைநகரங்களில் சுதந்திர தின ஓட்டங்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகமும், விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித்துறையும் இந்தச்சுதந்திர தின ஓட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்திருந்தன.

மக்களிடையே ஒற்றுமை உணர்வை வலியுறுத்தும் உன்னத நோக்கத்துக்காக நடத்தப்படும் இந்த ஓட்டம் 17.8.'87 அன்று மாலை சென்னைக் கடற்கரை



காமராஜர் சாலையில் நடைபெற்றது.

சுதந்திர தின ஓட்டத்தில் கொண்டு செல்வதற்காக, டெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்களிடமிருந்து சுதந்திர ஜோதியைப் பெற்ற தமிழகக் கைப்பந்து வீரர் திரு ஜி.ஏ.ஸ்ரீதரன், அதை மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்களிடம் அளித்தார்.

அந்த ஜோதியை ஆளுநர் அவர்கள் தமிழக ஆக்கி வீரர் திரு குமார், பூப்பந்து வீராங்கனை செல்வி ஸ்ரீவித்யா ஆகியோரிடம் கொடுத்தார்.

ஓட்டத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் ஆளுநர் அவர்கள் வெள்ளைக் கொடியை அசைக்க, விளையாட்டுவீரர் திரு குமார், வீராங்கனை செல்வி ஸ்ரீவித்யா ஆகிய இருவரும் சுதந்திர ஜோதியை உயர்த்திப் பிடித்தபடி ஓட, அவர்களைத் தொடர்ந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஓடினார்கள்.

'இந்தியாவை நேசிக்கிறோம்- இந்தியாவுக்காக ஓடுகிறோம்' என்ற முழக்கங்களை ஒலித்தவாறு அவர்கள் ஓடிய காட்சி காண்போரை மெய்சிலிர்க்க வைத்தது.

தொடர் ஓட்டமாய்க் கொண்டு வரப்பட்ட ஜோதி, இறுதியில் ஓட்டம் முடிவடையும் இடமான சுற்றுலாப் பொருட்காட்சித் திடலை அடைந்தது.

தமிழகத் தடகள வீரர் திரு அண்ணாவி, நீச்சல் வீராங்கனை செல்வி. ஃபவுசியாபேகம் ஆகியோர் ஜோதியை இணைத்துப் பிடித்தபடி மேடைக்குக் கொண்டு வந்து மாண்புமிகு செய்தி-சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்களிடம் அளித்தனர்.

சுதந்திர ஜோதியை ஓராண்டுக் காலம் தொடர்ந்து எரிய வைப்பதற்காகப் போர்வீரர்கள் நினைவுச் சின்னத்தின் எதிரில் பொருட்காட்சி மைதானத்தில் கருங்கல்லாலான விளக்குப்பீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பீடத்திலிருந்த விளக்கில் சுதந்திர ஜோதியைக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் திரு.வி.வி சுவாமிநாதன் அவர்கள் தீபம் ஏற்றினார். சுதந்திரத் தீபம் சுடர் விட்டு எரியத் தொடங்கியதும் கூடியிருந்த மாணவ மாணவியர் அனைவரும் ''நாங்கள் இந்தியாவை நேசிக்கிறோம்' என்று ஒரே குரலில் முழக்கமிட்டனர்.





# சென்னையில் விடுதலை நாள் விழா

**இ**ந்திய விடுதலையின் 40-வது ஆண்டு விழா, சென்னை-கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 15-8-87 அன்று காலை 10 மணியளவில் நாதசுர இசை நிகழ்ச்சியோடு விழா தொடங்கியது.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் முழு நாள் விழாவாக இவ் விழா கொண்டாடப்பட்டது. அலங்கார மேடையில் இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டோரின் படங்கள் பல மாலையிட்டு வைக்கப்பட்டிருந்தன.

''எத்தனையோ விடுதலை வீரர்கள், வீராங்கனைகள் கண்ணீரும் செந்நீரும் பாய்ச்சி வளர்த்த சுதந்திரப் பயிர் இது. மேலோர்கள் வெஞ்சிறையில் வாடி, நூலோர்கள் செக்கிழுத்து நொந்து பெற்ற விடுதலை நாள் விழாவின் நாற்பதாம் ஆண்டைத் தமிழக அரசின் சார்பில் நாம் மகிழ்ந்து கொண்டாடுகிறோம். இந்த நாற்பதாண்டுக் காலத்தில் நாம் பெற்றுள்ள வளர்ச்சிக்கு, நம்முடைய ஒற்றுமையும்ஒருமைப்பாடுமே காரணம் என்பதை நாம் மறக்க முடியாது.''

— என்று செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. அவர்கள் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

''இலக்கியத்தில் அரிமாநோக்கு என் பார்கள். சிங்கமானது வெகு தூரம் வந்த பின் ஓரிடத்திலே நின்று, இதுவரை வந்த வழியை ஒரு தடவை திரும்பிப் பார்த்து விட்டு, இனி செல்ல வேண்டிய வழியை நிமிர்ந்து நின்று நோக்குமாம். அதுதான் அரிமா நோக்கு. அந்த வகையிலே, இந்த விழாவின் மூலம் நாம் நடந்து வந்த பாதையை எண்ணிப் பார்ப்பது மட்டுமல்ல, நடக்க வேண்டிய வழி பற்றியும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

''அன்று அண்ணல்காந்தியடிகளின் தலைமையில் ஆயிரக் கணக்கான சான்றோர்கள் அரும்பாடுபட்டுப் பெற்ற விடுதலைக்கு பெருமை சேர்க்கும் வகையிலே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே, நம்முடைய அரசு மூலம் நல்ல பல ஆக்கப்பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்திவருகிறோம்.

''நமக்குள் ஆயிரம் வேற்றுமைகள் இருக்கலாம்; அதையெல்லாம் மறந்து, நாமெல்லாம் இந்தியர்கள் என்று ஒன்றுபட வேண்டிய நாள் இது''.

அத்தையடுத்து'விடுதலையும் கல்வி வளர்ச்சியும்' எனுந்தலைப்பில் சட்டக் கல்லூரிமாணவர் திரு. ஜி. சுந்தரவடிவேலு பேசுகையில்—''கல்விக்கும் விடுதலைக்கும் இடையில் உள்ள நெருக்கத்தைக் காந்தியடிகளின் வாழ்க்கை நமக்குணர்த்தும். விடுதலை பெறுமுன் இருந்ததைவிட, இன்றைய இந்தியாவில் கல்வித் தரம் உயர்ந்தே காணப்படுகிறது.''

திருமதி சரோஜினி வரதப்பன் 'விடுதலையும் பெண்கள் முன்னேற்றமும்' என்ற தலைப்பில் பேசியதாவது :

''விடுதலை வேள்வியில் மகத்தான பங்கேற்ற காந்தியடிகள் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டார். அதனால்தான் சுதந்திர இந்தியாவில் பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவுமான இடங்களிலெல்லாம்கூட மகளிர் பங்கேற்பதைப் பார்க்க முடிகிறது. இந்தியாவிலேயே மகளிர் முன்னேற்றத்திற்கென்று ஒரு தனித்துறை, பிரிவு - முதன் முதலாகத் தமிழ்நாட்டிலேதான் ஏற்படுத்தப்பட்டது. பெண்களுக்கென்று தனியே ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்திய பெருமை இன்றைய தமிழக அரசுக்குண்டு. விடுதலைப் போராட்ட காலத்தில் ஆண்களோடு சரிநிகர் சமானமாக நின்று போரிட்ட வீராங்கனைகளுக்கும் இன்றைய தினம் நாமெல்லாம் வீரவணக்கம் செலுத்துவோம்.''

முன்னாள் மத்திய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம்அவர்கள் 'சுதந்திர இந்தியாவினுடைய சாதனைகள்' என்ற தலைப்பில் பேசியதாவது :

''ஆங்கிலேயர் நாடாண்ட காலத்திலே கூட பஞ்ச நிவாரணம் செய்ய வேண்டியிருந்தது. இன்றைக்கோ அந்த நிலை மாறி, நாட்டில் உள்ள அனைவருக்கும்



ஜி. சுந்தரவடிவேலு



சரோஜினி வரதப்பன்



சி. சுப்பிரமணியம்



எம். கல்யாணசுந்தரம்



எஸ். இராகவானந்தம்



டி. செங்கல்வராயன்

உணவு தர முடியும் என்கிற அளவுக்கு விவசாய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதே போலச் சிறு தொழில்களாகட்டும், பெருந் தொழில்களாகட்டும்; கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் வளர்ச்சி பெற்றிருப்பதை நம்மால் காண முடிகிறது. செய்தித் துறை உட்படப் பல்வேறு அரசுத் துறைகளிலும் முன்னேற்றம் காணப்படுகிறது. உலகிலேயே, அணு ஆராய்ச்சியில் ஆறாவது பெரிய நாடு என்ற சிறப்பு இந்தியாவிற்குக் கிடைத்திருக்கிறது. நமது முன்னேற்றத்திற்கான தடைகள்பற்றித்தான் நாம்இன்று சிந்திக்க வேண்டும். எல்லாக் குறைகளும் நீங்க, முக்கியமாகத் தேவைப்படுவது கல்விதான். வேலை கிடைக்கவில்லையே' என்று ஏங்குவோர் இருக்கும் போது, ஒரு பக்கம் டாக்டர்கள் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமெல்லாம் திட்டமிடப்படுகிறது. இந்த நிலை மாறியாக வேண்டும்''

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு எம். கல்யாண சுந்தரம் பேச்சுவிவரம் வருமாறு:

''எந்தக் கட்சியில் இருந்தாலும் சரி; இந்திய விடுதலைக்காகத் தியாகம் செய்தவர்களை நாம் மறக்க முடியாது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுநானும் இன்றைய குடியரசுத் தலைவர் ஆர். வி. அவர்களும் 1942-ல் வேலூர் சிறையில் தண்டனை அனுபவித்திருக்கிறோம். சுதந்திர இந்தியாவில் உள்ள நாம், பொருளாதார - அரசியல் சீரழிவெல்லாம் எதனால் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிந்து அதை நீக்கப் பாடுபட வேணடும். எழுபத்தெட்டுக் கோடி மக்களும் இன்புற்று வாழ பொதுவான தோர்தேசியத் திட்டம் வகுக்கப்பட வேண்டும்.''

'விடுதலையும் தொழிலாளர் நல்வாழ்வும்' என்ற தலைப்பில் முன்னாள் அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் பேசியதாவது:

''விடுதலை பெற்ற இந்தியாவில் தொழிலாளர் நலம்-அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் பெரிதும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் மதிக்கப்படாத காலம் மாறி, இன்று மிகவும் மதிக்கப்படும் காலம் வந்திருக்கிறது. தொழிலாளர்களுக்காக ஜீவா இல்லம் கட்டித்தந்திருக்கிறோம். தொழிலாளர் நலத் துறை அமைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகள்வேலை செய்வதைத் தடுக்க மத்திய அரசு உதவியோடு 11 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர் நலக்கமிஷன் அமைத்திருக்கிறோம். பல்வேறுபட்ட தொழிலாளர்களுக்குமான பாதுகாப்புச் சட்டங்களை இயற்றிப்பெருமை பெற்றிருக்கிறோம்.''

திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் 'விடுதலையும் நீதி நிர்வாகமும்' என்ற தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''சுதந்திரத்தைப் பெற்றதற்குப் பின்னால், நாங்களெல்லாம் எப்படியெல்லாம் பாடுபட்டு இந்தச் சுதந்திரத்தைப் பெற்றோம் என்பதை மக்களுக்குச் சொல்லத் தவறிவிட்டோம். இனி அந்தப் பணியைத் தொடர்வேன். உலக சரித்திரத்தில் போர் நடத்தி வெற்றி பெற்ற நாடுகள் இருக்கலாம்; ஆனால் நம் இந்தியாதான் போராட்டம் நடத்தியே வெற்றி கண்ட நாடாகும். உலகில் உள்ள நாடுகளெல்லாம் சுதந்திரம்—சமத்துவம் - சகோதரபான்மை என்கிற மூன்றை மட்டுமே அடிப்படையாக வைத்துத்தான் அரசமைப்புச் சட்டம் செய்தன. நம் இந்தியாவோ அந்த மூன்றோடு நீதியையும் சேர்த்துக்கொண்ட சிறப்புக்குரியதாகும். நீதி இல்லாமல் அம்மூன்றும் சிறப்படைய முடியாது.

காலை நேர நிகழ்ச்சிகளின் முடிவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு டி. எம். காளியப்பா நன்றி கூறுகையில் - ''இங்கே நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள், இந்தக் குடியரசைக் காக்க மக்களை உறுதிபூணச் செய்யும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது'' என்றார்.

> சுயராஜ்யம் கோழைகளுக்கும் சோம்பேறிகளுக்கும் அல்ல; சிரித்துக்கொண்டே தூக்கு மேடையில் ஏறத்தயாராக இருப்பவர்களுக்குத் தான்.
>
> —அண்ணல் காந்தியடிகள்

மாலை நேர நிகழ்ச்சிகள் 4 மணிக்குத் தொடங்கின. பள்ளி மாணவ மாணவிகள், சுதந்திரப் போராட்ட காலச் சம்பவங்களை ஓரங்க நாடகங்களாக நடித்துக் காட்டினார்கள். பள்ளிமுதன்மைக் கல்வி அலுவலர் திரு எர்ஸ்கின் தேவாசீர்வாதம் அந்நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி அறிவித்தார்.

சூரியநாராயணன் குழுவினரி இசை நிகழ்ச்சியோடு நடைபெற்ற அந்நிகழ்ச்சிகளில்-இராமகிருஷ்ணாமடம் ஆண்கள் பள்ளி, தாராபூர் லோகநாதன் பள்ளி, உஸ்மான்ரோடு - பர்கித் ரோடு சாரதா வித்யாலயா பள்ளிகள், டாக்டர் ரத்தினவேல் சுப்பிரமணியம் மேநிலைப்பள்ளி, என். கே. டி. உயர்நிலைப்பள்ளி, ஆதர்ஷ வித்யாலயா பள்ளி, சத்தியமூர்த்தி பள்ளி, ஆல்ஃபா மெட்ரிகுலேஷன் பள்ளி, கல்யாணம் மேநிலைப்பள்ளி மாணவ மாணவிகள் சிறப்புறப் பங்கேற்றார்கள்.

அந்நிகழ்ச்சிகளின் முடிவில், செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி. டி. வீரப்பன் நன்றியுரை ஆற்றுகையில்—''இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகச் செம்மல்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை இங்கே மாணவச் செல்வங்கள் தத்ருபமாக நடித்துக் காட்டினார்கள். அவர்கள் எல்லோருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். குழந்தைகளுக்குத் தேசபக்தி உணர்வூட்டும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நாடெங்கும் நடத்தப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து - கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

முடிவில் -'காந்தி' திரைப்படம் காண்பிக்கப்பட்டது.

—நமது செய்தியாளர்



# சுதந்திரப் பள்ளு

## மகாகவி பாரதியார்

பல்லவி

ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே ;
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று
(ஆடுவோமே)


சரணங்கள்

எங்கும் சுதந்திர மென்பதே பேச்சு — நாம்
எல்லோருஞ் சமமென்ப துறுதியாச்சு
சங்குகொண் டேவெற்றி யூதுவோமே — இதைத்
தரணிக்கெல் லாமெடுத் தோதுவோமே.
(ஆடுவோமே)

எல்லோரு மொன்றென்னுங் காலம்வந்ததே — பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற காலம் வந்ததே — இனி
நல்லோர் பெரியரென்னும் காலம்வந்ததே — கெட்ட
நயவஞ்சகக் காரருக்கு நாசம் வந்ததே.
(ஆடுவோமே)

உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம் — வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனைசெய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம் — வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓய மாட்டோம்.
(ஆடுவோமே)

நாமிருக்கும் நாடுநம தென்பதறிந்தோம் — இது
நமக்கே யுரிமையா மென்பதறிந்தோம் — இந்தப்
பூமியி லெவர்க்குமினி அடிமைசெய்யோம் — பரி
பூரணனுக் கேயடிமை செய்துவாழ்வோம்
(ஆடுவோமே)







# மலைமகன் பண்டித கோவிந்த வல்லப பந்த்

**வ. உ. சி. சுப்பிரமணியம்**

இரு பாரத இரத்தினங்களின் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு வருகின்றது. இரு பெருந்தலைவர்களும் விடுதலை இந்தியாவின் இரு கண்கள். ஒருவர் பண்டித ஜவகர்லால் நேரு; நமது முதல் தலைமை அமைச்சர். மற்றவர், பண்டித கோவிந்த வல்லப பந்த்; நமது நாடு இன்னல்கள் பல ஏற்ற வேளையில் உள்துறை அமைச்சராக விளங்கிய வீரர்; இன்னல் இருளகற்றி நன்னலம் விளையச் செய்தவர். பின்னவர் சில திங்கள் வயதில் மூத்தவர்; பிறந்த நாள் செப்டம்பர் 10, 1887. நேரு நூறாவது பிறந்த நாள் நவம்பர் 14, 1987. பண்டித பந்த் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை இங்கு பார்ப்போம்.

''வெள்ளை ஆட்சியின் தடியடி பட்டு என்று எனது தலை ஆடத் தொடங்கியதோ, அன்றே அந்த அந்நிய ஆட்சி ஆட்டம் கண்டு விட்டதென்றறிவேன்'' என முழங்கினார், கோவிந்தவல்லப பந்த். ஆம், சைமன் கமிஷன் புறக்கணிப்பு (1927) இயக்கத்தில் கோவிந்த வல்லப பந்த், பண்டித நேரு இருவருமே லட்சுமணபுரியில் குண்டாந்தடிகளால் அடிபட்டு, அடக்கு முறைக்கு ஆளாயினர்; சிறை சென்றனர். அன்று பந்த் தலையில் அடிபட்டதால், அவர் கழுத்து நரம்பு துண்டிக்கப்பட்டு, அவரது தலை நிலையாக நிற்க இயலாமல் இறுதி வரையில் ஆடிக்கொண்டேயிருந்தது. கொடுமை! ஆனால் கொள்கை வீரர் தளர்ந்தாரில்லை. தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, வெற்றிகண்டு நேரு அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகப் பல காலம் பணியாற்றி, உறுதியான அடித்தளத்தில் நாட்டின் உள்துறை (போலீஸ்) ஆட்சியை அமைத்துக் கொடுத்த உத்தமர், பந்த் பெருமகனார்.

மகாத்மா காந்தி, நேரு, ராஜன் பாபு, மௌலானா ஆசாத், சர்தார் பட்டேல், எல்லை காந்தி முதலிய பெருந்தலைவர்கள் வரிசையில் தனியிடம் பெற்றவர் கோவிந்தவல்லபர். சிறந்த காந்தியவாதி. அறவழி தவறாதவர். அருள் வழி கைக் கொண்டவர். பகைவர்க்கும் அருளும் பண்பாளர்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் அல்மோராவுக்கு அருகில் உள்ள 'குண்ட்' என்ற சிற்றூரில் சரியாக நூறாண்டுக்ளுக்கு முன்பு பிறந்தார். தந்தை பெயர் மனோரத் பந்த்; தாயார் பெயர் கோவிந்தி; அல்மோரா, அலகாபாத் நகரங்களில் கல்வி கற்றார். வழக்கறிஞராகி, அலகாபாத், உயர்நீதி மன்றத்தில் பணியாற்றினார் (1909). நாட்டில் விடுதலைப் போர் தொடங்கியிருந்தது. பந்த் படிக்கும்போதே நாட்டுப்பற்றுக் கொண்டவர். வழக்கறிஞர் திருக்கூட்டம் விடுதலை வேள்வியில் ஈடுபட்ட அந்நாளில், அவர் விதி விலக்காக இருக்கமுடியாதல்லவா? மலைப்பகுதியில் உதித்த அவர் மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டார். அந்தணரான அவர் தம்மை 'பஹாடி' (மலை மகன்) என்று பெருமையுடன் கூறிக்கொள்வார்.

**பண்டித கோவிந்த வல்லப பந்த் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி வெளியிடப்படும் சிறப்புக் கட்டுரை.**

1916-ல் அகில இந்திய காங்கிரஸ் மகாசபை உறுப்பினரானார். 1923-ல் உ.பி. சட்ட மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். ஏழு ஆண்டுகள் பணி புரிந்தார். 1927-ல் உ.பி. காங்கிரஸ் தலைவரானார். ஸ்சமன் கமிஷன் புறக்கணிப்பு இயக்கத்தில் புயல் வேகத்தில் ஈடுபட்டு, தடியடிக்கு ஆளானார். சாத்வீக சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டமைக்காக இருமுறை சிறைத் தண்டனை பெற்றார். உ.பி. வேளாண்மைச் சீர்திருத்தக்குழுத் தலைவராக அவராற்றிய அரும் பணி நாடு முழுவதும் 'ஜமீன்' ஒழிப்புக்கு வழி கோலியதென்பது மெய், நிலவுடைமைச் சீர் திருத்தத்தின் தந்தை என்று புகழ் பெற்றார்.

1934-ல் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரானார். காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவரானார். 1937-ல் மீண்டும் உ.பி மாநில அரசியலுக்கு வந்து, சட்டமன்றக் காங்கிரஸ் தலைவரானார். முதல் காங்கிரஸ் அமைச்சரவை நிறுவி முதல் அமைச்சரானார்.

ஆனால் உலகப் போரில் இந்திய மக்களின் இசைவு இல்லாமல் வெள்ளையர்கள் இந்தியாவை ஈடுபடுத்தியதை எதிர்த்து, பதவி ஏற்ற மூன்றாண்டுகளுக்குள்ளேயே பந்த் பெருமகனின் அமைச்சரவை பதவி விலகியது (1939). ஆட்சியிலிருந்த சிறிது காலத்துக்குள்ளேயே அவர் பல நன்மைகள் செய்தார். அவற்றில் ஒன்று, பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம். (தமிழ் நாட்டில் மூதறிஞர் இராஜாஜி முதல்வராயிருக்கையில் இத்தகைய சட்டமியற்றியது. இங்கு நினைவு கூரத் தக்கது).

இதற்கிடையே, அண்ணல் காந்தியடிகள் தலைமையில் விடுதலைப் போராட்டம் மேலும் வீறுகொண்டது. நாடு முழுவதும் தனிப்பட்ட சத்தியாக்கிரகம்

## 'இன்னும் ஒரு வாரம் சிறையிலிருக்கிறேன்!'

**1930**-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ஆம் நாள் மகாத்மா தமது உலகப்பிரசித்தி பெற்ற தண்டி உப்பு யாத்திரையைத் தொடங்கினார். இருபத்துநான்கு நாள் அவரும் அவரது குழுவினரும் கால்நடையாக நடந்து தண்டியை அடைந்தார்கள். மகாத்மா ஒரு பிடி உப்புத்தான் அள்ளினார்; காலணா கூடப் பெறாத இந்த உப்பு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே ஓர் உலுக்கு உலுக்கியது!

நாடெங்கும் மக்கள் உப்புச் சட்டத்தை மீறினார்கள். சிறைகளை நிரப்பினார்கள். அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு அடங்கி நடந்தார்கள்.

பம்பாயில் உள்ள தர்சனா என்ற உப்பளத்தைக் கைப்பற்றப் போவதாக மகாத்மா ஆட்சியாளருக்கு அறிவித்தார்; அவர்கள் அவரைக் கைது செய்து சிறையிலிட்டார்கள். மகாத்மாவைத் தொடர்ந்து கவிக்குயில் சரோஜினிதேவி தொண்டர் படை தொடர தர்சனா உப்பளத்தின்மீது படை எடுத்தார்! அவரையும் எரவாடா சிறையில் மூடிப் பத்திரப்படுத்தியது அரசாங்கம்.

சிறையில் மணமிக்க மலர்ச்செடிகளை வளர்த்தார் அவர். அவைகளோடு நெருங்கிப் பழகினார். நட்புக் கொண்டார். அவை தரமாக உண்டு, குடித்து, வளர்ந்து பூச்சொரிவதைப் பார்த்து மகிழ்வெய்தினார். நண்பர்களைப் பிரிந்திருந்த துயரத்தைப் பூச்செடிகள் நீக்கின!



மலர்களுடன் பாடிக்கொண்டே சிறைவாசத்தைச் சுகவாசமாக்கிக்கொண்டார் கவியரசி. அவரை விடுதலை செய்யும் நாளும் வந்தது. செடிகளையும் மலர்களையும் விட்டுப் பிரிய மனம் வரவில்லை. பூக்கும் பருவம்; பூப்பதைப் பார்த்துவிட்டு வெளியேற விரும்பி அரசாங்கத்திடம் அனுமதி கேட்டார்; அனுமதி கிடைத்தது. அவர் எதிர்பார்த்தவாறு பூக்கள் பூத்துச் சிரித்தன! அவைகளிடம் விடை பெற்றுக்கொண்டு வெளிவந்தார் கவிக்குயில்!

நடந்தது. ஆயிரக்கணக்கில் தலைவர்கள் சிறை புகுந்தனர். 1940 நவம்பரில் பண்டித பந்த் இந்த வேள்வியில் ஈடுபட்டு, ஓராண்டு சிறைத் தண்டனை அடைந்தார். பின்பு, 1942 ஆகஸ்ட் 9-ந் தேதி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் போது, பிற தலைவர்களோடு கைது செய்யப்பட்டு, 1945 மார்ச் 31 முடிய ஆமதநகர் கோட்டையில் தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டார்.


நாட்டு விடுதலைப் பேச்சுக்களில் பங்கேற்க வெளிவந்த பந்த் பிற தலைவர்களோடு சேர்ந்து, வெள்ளையர்களோடு இருதரப்புப் பேச்சுக்களில் பெரும் பங்கேற்றார். 1945 சிம்லா மாநாட்டில் பங்கேற்றார். காயிதேமில்லத் ஜின்னாவுடன் பேசினார். 1947 ஆகஸ்ட் 15-ல் நாடு விடுதலையடைந்தது.

நாடு விடுதலை அடைவதற்கு முன்பே பந்த் மீண்டும் உத்தரப் பிரதேச அரசியலில் ஈடுபட்டு, 1946 ஏப்ரலில் அங்கு முதல் அமைச்சரானார். நெடுங்காலம் மாநில முதல்வராக இருந்து, பலதுறைகளிலும் உத்தரப் பிரதேசம் வளர்ச்சி காண வழிவகுத்தார். எட்டு ஆண்டுகளில் மாநிலம் நிலையான ஆட்சியும், நீடித்த வளர்ச்சியும் கண்டது.

தலைமை அமைச்சர் நேரு அவர்களின் அழைப்பை ஏற்று பண்டித பந்த் 1955 ஜனவரியில் மத்தியஅமைச்சரவையில்சேர்ந்து உள்துறை அமைச்சரானார். மார்ச் மாதம் மாநிலங்கள் அவை உறுப்பினரானார். உள்துறை அமைச்சராக, உரிமை பெற்ற மாநிலங்களை அவர் வலிமைப் படுத்தியமை, வரலாற்றில் இடம் பெற்ற உண்மை. குளியல் அறையில் இருந்து கொண்டுகூடக் கோப்புகள் பார்க்கும் அமைச்சர் என்று புகழ் பெற்றவர் பந்த். அவரது சொற்பொழிவுகள் சிறந்த நூல்களாக வெளிவந்துள்ளன. ஓய்வின்றி உழைத்த இந்தப் பெருமகன் தமது கடமையை நிறைவேற்றிவிட்டு, நாட்டு மக்களையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு 7-3-1961 காலை 8-50 மணிக்கு இயற்கை எய்தினார். பண்டித ஜவகர்லால் நேருவுக்கு வலது கரமாக விளங்கிய பந்த் மறைவு, தனிப்பட்ட முறையில் பேரிழப்பு என்று நேரு பெருமகனார் வருந்தி வருந்திச் சொல்லியுள்ளார்.

பந்த் அவர்களின் திருமகன் தான் இன்று இந்திய அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சராக விளங்கும் திரு கே.சி. பந்த் அவர்கள். ஏறத்தாழ தந்தையின் வாரிசு-தோற்றத்திலும் செயலிலும்.

பண்டித கோவிந்த வல்லப பந்த் நாமம் வாழ்க.



# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அரசின் சலுகைகள்

சுதந்திர இந்தியாவை நாம் அடைந்து இன்றைக்கு 40 ஆண்டுகள் முடிந்துவிட்டன. நம்நாட்டின் அடிமைத் தளையை அறுக்க தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இலட்சோப இலட்சம் வீரத் தியாகிகளின் வரலாறுகள் கண்ணீர்ச் சித்திரங்களாகும்.

துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானோர், தூக்குக் கயிற்றை முத்தமிட்டோர், தடியடியால் தாக்குண்டு இறந்தோர், உடல் ஊனமுற்றோர், சிறைக்கூடங்களின் சித்திரவதைக்கு ஆட்பட்டு, தம் வாழ்நாளின் வசந்த காலங்களை இழந்தோர், தங்கள் உடல் பொருள், ஆவி, மனைவி, மக்கள் உற்றார், உறவினர்களை இழந்து உருத் தெரியாமல் மாண்டு போனோர் எண்ணற்றவர் ஆவர்.

இப்படி தாய்நாட்டின் விடுதலை காணும் தியாக வேள்வியில் தம்மை இரையாக்கிக் கொண்ட அந்த மாவீரர்களுக்கும் அவர்களது சந்ததியினருக்கும் அரசு ஏராளமான உதவிகளையும் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், அவர்களின குடும்பத்தாருக்கும் மாநில அரசாலும், மத்திய அரசாலும் ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன.

ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தினை 1.10.66 முதல் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. 1.10.66 முதல் மாதம் ரூ. 50 ஆகவும், 15.8.72 முதல் மாதம் ரூ. 75 ஆகவும், 1.4.79 முதல் மாதம் ரூ. 100 ஆகவும், 25.1.81 முதல் மாதம் ரூ. 150 ஆகவும், 10.6.86 முதல் ரூ. 250 ஆகவும் ஓய்வூதியம் உயர்த்தப்பட்டுள்ளது.

மாநில ஓய்வூதியத்துடன் மத்திய ஓய்வூதியமும் பெறுவோருக்கு 15.8.72 முதல் மாதம் ரூ. 75 ஆக வழங்கப்பட்ட மாநில ஓய்வூதியம் 25.1.81 முதல் மாதம் ரூ. 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவதற்கு முக்கிய நிபந்தனையாக இருந்த மூன்று மாதம் சிறைத்தண்டனை 1.4.80லிருந்து ஒரு மாதமாகவும் பின்பு மூன்று வாரங்களாகவும் அதே 1.4.80 லிருந்து குறைக்கப்பட்டுள்ளது.

அடுத்த முக்கிய நிபந்தனையாக வருமான உச்சவரம்பு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 1200 ஆக இருந்தது. 2.12.78 முதல் ரூ.1500 ஆகவும், 9.12.80 முதல் ரூ.5000 ஆகவும், உயர்த்தப்பட்டு, பிறகு 11.3.83 முதல் வருமான வரம்பு முழுவதுமாகவும் நீக்கப்பட்டுள்ளது.

1944ஆம் ஆண்டிற்கும் 1947-ஆம் ஆணடிற்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்றுள்ள விடுதலை தொடர்பான பலவேறு போராட்டங்கள் மற்றும் கிளர்ச்சி

களில் ஈடுபட்டோர், பணி நீக்கம் செய்யப்பட்டோர் மற்றும் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டோர், தலைமறைவானோர் ஆகியோரும் ஒய்வூதியம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய பாலசேனாவைச் சேர்ந்தவர்களுக்கு ஒய்வூதியம் 1973 வரை வழங்கப்பட்டு, பின் மத்திய அரசால் நிறுத்தப்பட்ட நிலையைத் தமிழக அரசு பரிவுடன் பரிசீலனை செய்து, அவர்களுக்கு மீண்டும் ஒய்வூதியம் வழங்கிட அண்மையில் ஆணையிட்டுள்ளது.

இறந்துவிட்ட விடுதலைப் போராட்ட வீரரின் ஒய்வூதியத்தைத் தொடர்ந்து பெற அவரின விதவை மனைவி மறுமணம் செய்து கொள்ளக்கூடாது என்றிருந்த விதியினைத் தளர்த்தி அவர்கள் மறுமணம் செய்து கொண்டாலும் ஒய்வூதியம் வழங்கலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஒய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தவுடன் அவர்களின் மனைவியர் உடனடியாகத் தொடர் ஒய்வூதியம் பெறும்வகையில் மாவட்ட ஆட்சியர்களே ஆணை வெளியிடுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இதனைச் சுலபமாக்கும் வகையில் விடுதலைப் போராட்ட வீரர் இறந்த உடனே அவரின் மனைவி கருவூலக அலுவலரை அணுகி எளிதில் ஒய்வூதியம் பெறுவதற்கு ஏதுவாக வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய அல்லது மாநில அரசுகளின், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஒய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர் அல்லது அவரைச் சார்ந்தவர் அரசு மருத்துவமனைகளில் இலவசமாகச் சிகிச்சை பெறவும் 'பி' வகுப்பில் படுக்கை வசதி பெறவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் போராட்ட வீரர்களின் பிள்ளைகளுக்குப் பட்ட மேல்படிப்பு வரையில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பில் ஓர் இடம் 1980 81ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீடு செய்யவும், இதனை ஆண்டு தோறும் தேவைக்கேற்பப் புதுப்பிக்கவும், கல்வித்துறையில் ஆணைகள் இடப்பட்டுள்ளன. இதுபோலவே ஆங்கில மருத்துவகல்வி பயில மூன்று இடங்களும், சித்தமருத்துவம் பயில ஒரு இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வீட்டுவசதி வாரியத்தால் வழங்கப்படும் வீடு மற்றும் வீட்டு மனை ஒதுக்கீட்டில் 1 சதவீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய தலைவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் கௌரவிக்கும் வகையில் சிறப்பு நேர்வாகவும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

மறைந்த தலைவர் திரு கு. காமராஜ் அவர்களின் தங்கை திருமதி நாகம்மாள் அவர்களுக்கு ரூ.250 ஆகக் கொடுக்கப்பட்டு வந்த உதவித்தொகையை 1.7.78 முதல் மாதம் ரூ.500 ஆகவும், பின்னர் 23.7.84 முதல் ரூ. 1000 ஆகவும் உயர்த்தித் தமிழக அரசு வழங்கி வருகிறது.

**விடுதலைப் போராட்ட வீரர்கள், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தினர், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோருக்கு வழங்கப்படும் சலுகைகள் :**

**மாநில ஓய்வூதியம்; ரூ. 250. மைய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்கு ரூ. 100.**
**மொத்தத்தில் பயனடைவோர்: 9,500 பேர்.**
**இத்துடன் இலவச சிகிச்சை, 'பி' வகுப்பில் படுக்கை வசதி, பிள்ளைகளுக்குப் பட்ட மேற்படிப்பு வரை உதவித் தொகை, பொறியியல், ஆங்கில, சித்த மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு, வீடு, வீட்டுமனை ஒதுக்கீட்டில் ஒரு சதவீத ஒதுக்கீடு ஆகியவை அளிக்கப்படுகின்றன.**

முன்னாள் உள்துறை அமைச்சர் திரு கக்கன் அவர்களுக்கு மாதம் ரூ. 500 உதவித்தொகையும், அமைச்சர் தரத்திலான இலவச மருத்துவ வசதியும், வாடகையின்றிக் குடியிருப்பும், அரசுப் பேருந்துகளில் மாநில முழுமைக்கும் கட்டணமின்றிப் பயணம் செய்யும் வசதியும் வழங்கப்பட்டு வந்தது. இச்சலுகைகள், தற்போது அவரது துணைவியார் திருமதி சொர்ணம் பார்வதி கக்கன் அவர்களுக்கும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் துணைவியார் திருமதி இராமாயி அவர்களுக்கு ரூ. 10,000 வழங்கியதுடன், அவர் பெற்றுவந்த உதவித்தொகையை ரூ. 75-லிருந்து 3.12.79 முதல் ரூ. 400 ஆக உயர்த்தி வழங்கி வருகிறது.

**தந்தை பெரியார் மறைந்த போது இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு எழுதியது:**

**ஈ.வெ.ராவின் இல்லமே தமிழ் நாடு காங்கிரஸ் இயக்கத்தின் தலைமைச் செயலகமாக இயங்கியது.** (His house was the Secretariat for the TamilNadu Congress).

தியாகி திரு தூக்குமேடை இராஜகோபாலன் அவர்களுக்கு 1.11.80 முதல் மாதம் ரூ. 500 ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அமரர் திரு ஜீவானந்தம் அவர்களின் துணைவியார் திருமதி ஏ.எஸ்.பத்மாவதி அவர்களுக்கு 1.4.81 முதல் மாதம் ரூ. 500 உதவித்தொகையும், அமைச்சர் தரத்தில் இலவச மருத்துவ வசதியும் வழங்கப்பட்டது. அவர் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பில் தகுதிக்கேற்ப தனி முன்னுரிமை வழங்க ஆணையிடப்பட்டு, அதன்படி அமரர் ஜீவா அவர்களின் புதல்வர் திரு மணிக்குமார், செய்தி மற்றும் சுற்றுலாத்துறையில் உதவி மக்கள் தொடர்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

பழம்பெரும் தியாகி கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கு 22.12.81 முதல் மாதம் ரூ. 500 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவச்சலம் அவர்களுக்கு விடுதலைப் போராட்ட வீரர் என்ற வகையில் 11.3.83 முதல் மாத ஒய்வூதியம் ரூ. 500 வழங்கப்பட்டது.

சிவகங்கை மருதுபாண்டிய சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 202 பேருக்கு மாதம் ரூ.150 வீதம் 19.7.82 முதல் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

செங்கோட்டை வீரர் வாஞ்சிநாதன் அவர்களின் சகோதரர் திரு ஆர். கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு 1.12.83 முதல் மாதம் ரூ. 500 உதவித்தொகை

யும் அமைச்சர் தரத்தில் இலவச மருத்துவ வசதியும் வழங்கப்படுகிறது.

விடுதலை வீரர் திரு வி.சீனிவாசராவ் அவர்களின் துணைவியார் திருமதி நாச்சாரம்மாள் அவர்களுக்கு ரூ. 100 ஆக வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை 23.7.'84 முதல் 500 ஆக உயர்த்தப்பட்டது.

வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல் 10 பேருக்கு உதவித்தொகையாக மாதம் ரூ.150 வழங்கப்பட்டு வருகிறது.

கப்பலோட்டிய தமிழர் திரு வ.உ.சிதம்பரனார் அவர்களின் பேத்தி திருமதி சேதுலெட்சுமிக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 25,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

மறைந்த விடுதலைப்போராட்ட வீரர் ஆரணி திரு சுப்பிரமணி சாஸ்திரியார் அவர்களின் மருமகள் திருமதி எம்.வி. சீதாலெட்சுமி அவர்களின் வாழ்க்கைச் சிக்கல் தீர அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2000 வழங்கப்பட்டது.

## காந்தி-இர்வின் ஒப்பந்தம்

ஏகாதிபத்தியத்தின் கெடுபிடியும் காங்கிரசின் எதிர்ப்புப் போரும் தீவிரப்பட்ட நேரத்தில் மிதவாத அரசியல் தலைவர்களான திருவாளர் ஜெயகர், சாப்புரு ஆகியோர் 1931 மார்ச்சு ஆரம்பத்தில் வைசிராய் லார்ட் இர்வின், காந்தியடிகளைச் சந்தித்து இருவரிடையே ஒரு சுமூகமான ஒப்பந்தத்தை 5.3.1931இல் உருவாக்கினர். அதற்குக் 'காந்தி இர்வின் ஒப்பந்தம்' என்று பெயர்.

ஒப்பந்த சரத்துக்களில், காங்கிரஸ் மகாசபை தனது அனைத்துச் சட்ட மறுப்புகளையும் நிறுத்திக் கொள்வது என்றும், ஆண்டு இறுதியில் நடைபெறும் வட்ட மேசை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ள வேண்டும் என்பதும் ஆகும்.

ஏகாதிபத்தியத்தின் சார்பில் அரசு இயக்கத்தை எதிர்த்துப் போட்ட அனைத்துச் சட்டங்களையும் விலக்கிக் கொள்வது என்றும், இயக்க சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட அனைவரையும் நிபந்தனை இல்லாமல் விடுவிப்பதும் ஆகும்.

அரசாங்கம் இயற்கையாக உப்பு தயாரிக்கும் இடங்களில் ஏழைகள் தங்கள் உபயோகத்திற்கு மட்டும், கால்நடைகளுக்கு மட்டும் தேவையான உப்பை இலவசமாக எடுத்துக் கொள்ளலாம் என்றும் அரசு உரிமை அளித்தது.

### மத்திய அரசு ஓய்வூதியத் திட்டம்

இத்திட்டம் 15.8.72 முதல் மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற முதலில் வகுக்கப்பட்டிருந்த விதிகளின்படி ஒருவர் 6 மாதங்களுக்குக் குறையாமல் சிறைத்தண்டனை அனுபவித்திருக்க வேண்டும். ஆண்டு வருமானமும் ரூ. 5000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

இந்த விதிகள் 1.8.80 முதல் தளர்த்தப்பட்டு பல்வேறு முக்கிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி ஓய்வூதியத்திற்கு தகுதிபெற நிர்ணயிக்கப்பட்டிருந்த ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ. 5,000, 1.8.80 முதல் முழுவதுமாக நீக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர், மலைச்சாதியினர் மற்றும் மகளிரான விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்த மட்டில் சிறைத்தண்டனை அனுபவித்த காலம் 6 மாதத்திலிருந்து 3 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

தலைமறைவாக இருந்ததற்குச் சான்றாக அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதோர், 5 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர்களின் சான்றிதழ்களைத் தக்க ஆதாரமாக அளிக்கலாம். தற்போது 5 ஆண்டுக்கால அளவு 2 ஆண்டாகக் குறைக்கப்பட்டது. சான்று கொடுப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

ஓய்வூதியத்தின் அளவு, விடுதலைப் போராட்ட வீரராய் இருப்பின் அவருக்கு மாதம் ரூ. 200லிருந்து மாதம் ரூ. 300 ஆகவும், பின்னர் 1.6.85 முதல் மாதம் ரூ.500 ஆகவும், மறைந்த விடுதலைப்போராட்ட வீரரின் மனைவி அல்லது கணவருக்கு மாதம் ரூ. 100லிருந்து ரூ. 200 ஆகவும், பின்னர் 1.6.'85 முதல் ரூ. 500 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது. மறைந்த விடுதலைப் போராட்ட வீரரின் மனைவி பெறும் ஓய்வூதியத்துடன் திருமணமாகாத இரண்டு மகள்களுக்கு தலா மாதம் ரூ. 50 வீதம் 31.5.85 வரை ஓய்வூதியம் வழங்கப்பட்டது. 1.6.'85 முதல் மாத ஓய்வூதியம் ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டதால், திருமணமாகாத மகள்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது.

இவ்வாறு தளர்த்தியமைக்கப்பட்ட இந்தத் திட்டம் 'சுதந்திர சைனிக் சம்மான் பென்ஷன் திட்டம்' என்றபெயரிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சிறிது மாற்றம் செய்து மேலும் சில சலுகைகளை மத்திய அரசு அண்மையில் வழங்கியுள்ளது.

முன்பு சிறைத் தண்டனை அனுபவித்ததற்குச் சான்றாகச் சிறைச்சான்றிதழ் அல்லது தன்னுடன் அதே சிறையில் தண்டனை அனுபவித்த முன்னாள் அல்லது தற்போதைய சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அளித்த "சககைதிச் சான்றிதழ்" இருந்தால், போதுமென்றிருந்த விதியினைத் தளர்த்தி, மத்திய அரசிடமிருந்து தாமிரப்பத்திர விருதும், ஓய்வூதியமும் பெற்று ஓராண்டிற்குக் குறையாமல் சிறைத்தண்டனை அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர் இருவர், தன்னுடன் சிறையில் குறித்த காலத்திற்குத் தண்டனை அனுபவித்த மற்றொரு விடுதலைப்போராட்ட வீரருக்கு அளிக்கும் "சககைதிச் சான்றிதழ்" ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிப்புச் செய்துள்ளது.

10க்கு மேற்பட்ட சவுக்கடி அல்லது பிரம்படி தண்டனை வழங்கப்பட்ட ஒருவர் துன்பப்பட்டிருந்தால், அது 6 மாத சிறைத்தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


விடுதலைப்போராட்டத்தியாகிகளுக்கு அரசு இத்தகைய உதவிகளை அளிப்பதன் மூலம் நன்றி உணர்வைக் காட்டுவதோடு, அவர்களைச்சிறப்புச் செய்யும் பெருமையும் கொள்கிறது.

தொகுப்பு: **வி. இராவணன்**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002